பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 17 வெள்ளிக்கிழமை (30.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 155


# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை தன்பக்கம் இழுக்க அரசு சதி முயற்சி

## சலுகைகளுக்கு அடிபணியோம் என்கிறார் மட்டு. எம்.பி.



மட்டக்களப்பு, ஏப்ரல் 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு மஹிந்த ராஜபக்ஷ அரசு பகீரத முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் நேற்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

பிரதியமைச்சர் பதவி, ரொக்கப் பணம், சொகுசு வாகனங்கள் போன்ற ஆடம்பரச் சலுகைகளைத் தருவதாகக் கூறி அரசுப் பிரதிநிதிகள் கூட்டமைப்பு எம்.பிக்களை அணுகுகின்றனர் என்று சுட்டிக்காட்டிய அவர், எனினும் அத்தகைய சதி முயற்சிக்குத் தாங்கள் ஒருபோதும் அடிபணியமாட்டார்கள் என்றும் சூளுரைத்தார்.

கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் யோகேஸ்வரனை வரவேற்று மட்டு. துறைநீலாவணை தில்லையம்பல பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று கிராம மக்களால் விழா எடுக்கப்பட்டது.

அவ்வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதியமைச்சர் பதவி, ரொக்கப்பணம், உயர்பாதுகாப்பு, சொகுசு வாகனங்கள் ஆகியவற்றைத் தருவார்கள் என்று கூறி அரசுத் தரப்பினர் எம்மை விலை பேசுகின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ அரசு எனக்குப் பிரதியமைச்சர் பதவி உட்பட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதாகக் கூறி என்னிடம் நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் பிரதிநிதிகளை அனுப்பியும் பேச்சுகளை நடத்தியது. இதேபோலவே தமிழ்க் கூட்டமைப்பின் எல்லா எம்.பிக்களுடனும் இரகசியமாகப் பேரம்பேச அரசு முயல்கிறது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பொது நூலகம் கணனி மயம்; வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

ஏனைய பொது நூலகங்களுடன் தகவல்களை பரிமாற்றங்களை இலகுவாக மேற்கொள்ளும் வகையில் யாழ். பொது நூலகம் முழுமையாக கணனி மயப்படுத்தப்படவுள்ளது என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

தகவல் பரிமாற்றங்களை இலகுவாக மேற்கொள்ளும் வகையில் யாழ். நூலகம் தொடர்புபடுத்தப்படவுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்திற்கு அமைய யாழ். பொது நூலகத்தை முழுமையாக கணனி மயப்படுத்தவும், மேலும் நவீன மயப்படுத்தவும் தேவையான சகல வசதிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இந்த நூலகம் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி மீண்டும் திறந்து வைக்கப்பட்டது. கூடிய தகவல்களை பெற்றுக் கொள்ளும் வகையில் கணினி மயப்படுத்தப்படவுள்ளதுடன் சிறுவர் பகுதியும் அவர்களுக்கு ஏற்றவகையில் கணனி மயப்படுத்தப்படவுள்ளது என்றும் மாநாட்டில் அவர் கூறினார்.

## வடக்கின் விமான, துறைமுக சேவைகளை அபிவிருத்தி செய்ய இந்தியா ஆர்வம்!

### தூதர் அசோக் காந்த் தகவல்

கொழும்பு, ஏப். 30

வடக்கின் விமான மற்றும் துறைமுக சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா ஆர்வம் காட்டி வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானத் தளங்களை புனரமைத்தல் மற்றும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.

பிரதமர் டி.எம்.ஜயரட்னவுடன் நடந்த சந்திப்பின்போது இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் காந்த் இத்தகவலைத் தெரிவித்தார்.

குறிப்பாக பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

புதிய பிரதமருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் நோக்கில் அசோக் காந்த், பிரதமர் அலுவலகத்திற்கு நேற்று விஜயம் செய்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது காணப்படும் உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## முப்படைத் தளபதிகள் சகிதம் கோத்தபாய யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஏப். 30

முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் சகிதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குடாநாட்டின் கள நிலைவரம் குறித்து விரிவாக ஆராய்ந்தார்.

நேற்றுக்காலை பலாலி வந்தடைந்த கோத்தபாய ராஜபக்ஷவை, யாழ். படைகளின் தளபதி மேஜர். ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வரவேற்றார். அதனைத் தொடர்ந்து பலாலி தலைமையகத்தில் நடைபெற்ற மாநாட்டில், குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக கோத்தபாயவுக்குத்

(23ஆம் பக்கம் பார்க்க)

## சித்தன்கேணியில் சிறுமியிடம் சேஷ்டைவிட்ட இளைஞர்கள் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைப்பு!

### 'ரியூட்டறி' முடிந்து பொழுதுபட்ட வேளை சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 30

சித்தன்கேணி நகரப்பகுதியில் சிறுமிகளிடம் சேஷ்டை புரிந்த நான்கு இள வட்டங்களில் இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று மாலை 6 மணியளவில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் இருந்து வீடு செல்ல வீதிக்கு வந்த தரம் ஐந்து மாணவிகளைக் கைகளைப் பிடித்து முறுக்கி, கைத்தொலைபேசியில் இந்த இளைஞர்கள்

(24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கும் நித்தியானந்தாவிற்கும் தொடர்பிருந்ததா என்று விசாரணை?

கொழும்பு, ஏப். 30

விடுதலைப் புலிகளுக்கும், சுவாமி நித்தியானந்தாவிற்கும் இடையில் தொடர்பிருந்ததா - என்று அமெரிக்கா விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என 'ஆசியன் ட்ரிபியூன்' இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நித்தியானந்தாவிற்கும் இடையில் தொடர்பு காணப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நித்தியானந்தாவிற்கும் வெளிநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகிறது எனக்

(24ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர் சிலை விவகாரம் சூடு பிடித்து மாநகர சபைக் கூட்டத்தில் அமளி!

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ். பிரதான வீதியில் புத்தர் சிலை அமைப்பது தொடர்பான விவகாரத்தால் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் மூன்று மணி நேரமாக அமளிதுமளி தொடர்ந்தது. இறுதியில் கூட்டம் இடை நிறுத்தப்பட்டது.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது.

கூட்ட ஆரம்பத்தில் கூட்ட நிகழ்ச்சி நிரலை முதல்வர் வாசித்த போது எதிர்க் கட்சித் தலைவர் மு.றெமிடியஸ் தெரிவித்த ஆட்சேபத்தை அடுத்து இருதரப்புக்

(23ஆம் பக்கம் பார்க்க)



சார்க் மாநாட்டுக்காக பூட்டான் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டு மன்னர் ஜிக்மே வான்சுக்கினை அங்கு சந்தித்த வேளை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் மூன்றாவது உயர் கல்வி அமைப்பு இந்தியாவில் உள்ளது

## இந்தியத் தூதுவர் பெருமிதம்

கொழும்பு, ஏப்.30

உலகின் மூன்றாவது பெரிய உயர் கல்வி அமைப்பினை இப்பொழுது இந் தியா கட்டியெழுப்பியுள்ளது.

இதில் பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற வலுவான வலை அமைப்புகள் உள்வாங்கப்பட் டுள்ளன.

இந்தக் கருத்தினை இந்தியத் தூதுவர் அஷோக் கே.காந்த் வெளியிட்டார்.

அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற இந்திய கல்வியின் பேரியக்க கண் காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகை யில் தூதுவர் அசோக் கே.காந்த் இக்கருத்தைக் கூறினார். இலங்கைக் கண்காட்சி மற்றும் பாரம்பரிய நிலையத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இந்தியாவில் இப்போது 400 இற்கும் அதிகமாக பல்கலைக்கழகங்கள் உள்ளன. இதில் சிறப்பியல்புகளைக் கொண்ட மருத்துவ, விவசாய, விலங்கு மருத்துவம் மற்றும் வனவியல் துறைகளும் திறந்த பல்கலைக்கழகங்களும் பல்வேறு வகைகளைக் கொண்ட கல்லூரிகளும் அடங்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், இந்தியா தற்பொழுது கல்வி உட்கட்டமைப்புத் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு அரச துறையில் இருந்து மாத்திரமன்றி தனியார் துறையில் இருந்தும் ஆதரவு கிட்டுகின்றது.

புதிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய கல்வித் துறைகளும் ஆரம்பிக்கப் பட்டு வருகின்றன.

இந்தத் துறைகளில் தனியார் துறையினர் முக்கிய பங்களிப்பைச் செய்து வருகின்றனர். அனேக பொறியியல் கல்லூரிகளும், மருத்துவக் கல்லூரிகளும் முகாமைத்துவப் பாடாசாலைகளும் தனியார் கைகளிலேயே உள்ளன என்றார். இந்திய அரசு கல்விக்கான உரிமையை அடிப்படை உரிமையாகப் பிரகடனப் படுத்தியுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ப)

## துயர் பகிர்கின்றோம்



### அமரர் மா.கந்தையா

எமது இல்லத்தில் மிகவும் ஈடுபாடுள்ள, மதிப்புக்குரிய மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. க.அரியநாயகத்தின் தந்தையான அமரர் மா.கந்தையா அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

ஸ்ரீபரமானந்தா சிறுவர்,முதியோர் இல்லம்,
தர்மகர்த்தா சபையினர், ஊழியர்கள்,வதிரி, கரவெட்டி. (அ/5567080)

## மரண அறிவித்தல்கள்

### கலாபூசணம் பிரம்மஸ்ரீ பாஸ்கரக்குருக்கள் பஞ்சநதசர்மா (பகவான்)



(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

வடமராட்சி,பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம் பிரம்ம ஸ்ரீ பாஸ்கரக்குருக்கள் பஞ்சநதசர்மா (பகவான்) அவர்கள் நேற்று (29.04.2010) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் திருமதி புவனேஸ்வரி (முன்னாள் உப அதிபர், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பிரம்மஸ்ரீ நடேசஐயர் பாஸ்கரக்குருக்கள் (முன்னாள் பிரதம குருக்கள், பருத்தித்துறை கொட்டடிப் பிள்ளையார் கோயில்)-அபயாம்பிகை அம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கம்பளையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான பிரம்மஸ்ரீ பத்மநாப ஐயர் (முன்னாள் பிரதம குருக்கள், ஸ்ரீகதிரேசன் கோயில், கம்பளை)-லஷ்மிஅம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சுபாஷினி (ஆசிரியை, ஹற்றன் புனித பொஸ்கோ பாடசாலை), ஸ்ரீகீதா (ஆசிரியை,யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகி யோரின் பாசமிகு தந்தையும்,ஸ்ரீவேணுகோபாலசர்மா (ஆசிரியர்,தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயம்), சசிவர்ணன் (ஹற்றன் நஷனல் வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வேதாஷாகர், நயனார்ஷிதா ஆகியோரின் அன்புப் பேரனும், பிரம்மஸ்ரீ.சண்முகரத்தினசர்மா (கனடா), பிரம்மஸ்ரீ. நாராயண சர்மா (பருத்தித்துறை), பிரம்மஸ்ரீ. இரத்தினசபாபதி ஐயர் (கொழும்பு), திருமதி காமாட்சி, நீலாயதாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணியளவில் கணேசவாசம் அம்பலவாணர்வீதி, கற்பொக்கணையில் நடைபெற்றுப் பூதவுடல் கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கணேசவாசம்', அம்பலவாணர் வீதி,
உடுவில்,சுன்னாகம்.
0718349105, 0718474847.

தகவல்:
பரிபூரணானந்தசர்மா
சசிவர்ணன், (மருமகன்)

### கணேசு தேவராசா

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு தேவராசா நேற்று (29.04. 2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசு-பொன்னம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், அருந்தவநாயகியின் அன்புக் கணவரும், பாபுஜி(நெதர்லாந்து), பாலாஜி (சுவிஸ்), விஜிதா,றஜிதா, தேவவதனா (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரவதனி (நெதர்லாந்து), சுஜாதா (சுவிஸ்), கலேந்திரன் (பிரதேச சபை, முல்லைத்தீவு), கருணாநிதி (லண்டன்), அகிலா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி கு.பாக்கியலட்சுமி, தவராசா, செந்தில்நாதன் ஆகியோரின் சகோதரனும், சோபிகா, வருணன், மிலோடி, அபிநயா, ஆராதனன், புவீந்திரன், சுதாகரன், மேனன், சுவேந்திரா,வியேன்சி, சௌமியா, லாவண்யா, சஹானா, ஜஸ்வினா, சஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (97749)

தகவல்.
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.30

அளவெட்டி வடக்கு ஞானவைரவர் சனசமூக நிலையம் நடத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பெரியதம் பிரான் ஆலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அன்று காலை 6 மணியளவில் ஆண், பெண் இருபாலாருக்குமான வீதியோட்டப் போட்டியும், 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியும் இடம் பெறவுள்ளது. (04-23)

## வாசனாசம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,ஏப்.30

தேசிய லொத்தர்சபையின் வாசனாசம்பத 816ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் D என்ற ஆங்கில எழுத்தும் 01/20/34/43 ஆகிய வெற்றி இலக்கங்களும் போனஸ் இலக்கமாக 69ம் தெரிவாகின.

இதன்பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப் பட்ட வில்லை. வெற்றி இலக்கங்கள் நான்கும் சரியாகக்கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று வெற்றி இலங்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 4பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று வெற்றி இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 274பேருக்கு மூன்றாம் பரிசாக தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு வெற்றி இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,493 பேருக்கு 4ஆம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும். ஒரு வெற்றி இலக்கம் மட்டுமே சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 189629 பேருக்கு 5ஆம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

## 'குமுதினி' விரைவில் சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம்,ஏப்.30

பழுதடைந்த 'குமுதினி' படகின் திருத்தப் பணிகள் அடுத்தவாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நெடுந்தீவுக்கும், குறிகாட்டுவான் இறங்குதுறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த 'குமுதினி' படகு கடந்த மாத இறுதியில் பழுதடைந்தது குறிப்பிடத்தக்கது. திருத்தப்பணிகள் துரிதமாக நடைபெற்று விரைவில் குமுதினி சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-224)

## ஆசிரியர் கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தினரால் எதிர்வரும் 3ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான கல்விச்சுற்றுலா மறுநாள் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் ஆசிரியர்கள் அதிகாலை 5 மணிக்கு யாழ். வலயக்கல்வி அலுவலகத்துக்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியையான
திருமதி
**ஜெயக்குமாரி ஸ்ரீஸ்கந்தராசா**
(B.A,Dip in Edu,M.Ed.,M.A.)

அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தின் 25ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழ் முதுகலைமாணிப் பட்டம் (அதி விசேட சித்தி) பெற்றதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் பல பதவிகளும்,சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்.
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

## Niru Business College

A/L வர்த்தகப் பிரிவு

*2010, 2011, 2012 ஆகிய பிரிவுகளிற்கான வகுப்புக்கள் யாழ்., கொழும்பு ஆசிரியர்களின் சேவையில் 01.05.2010 அன்று 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.*

வர்த்தகப்பிரிவு யாழ்.முன்னணி ஆசிரியர்கள்
1. எஸ்.கே.பாலசபேஷ் - வணிகக்கல்வி 2. பி.பாலகஜன் - கணக்கீடு
3.பி.அருணன் - பொருளியல்

கொழும்பு பிரபல ஆசிரியர்கள்
★ரி.நந்தன் - வணிகக்கல்வி ★எம்.சசிரூபன் - கணக்கீடு
★வி.கே.ரூபன்-பொருளியல் (Colombo Royal College Teacher)

AAT, IAB (U.K), Banking Course ஆகிய வகுப்புக்கள் நடைபெறும்.

Tel: 0117900776, 0773570511, 0773516592
Contact: 451, Kandy Road, Chavakachcheri


## ஈரவிழிகளுடன் ஓராண்டு



### திருமதி சின்னத்துரை மாணிக்கம்

தோற்றம்
11★06★1935

மறைவு
10★05★2009

எம் குடும்பக் குல விளக்கே! நாம் வாழ சூரியனாய் நின்று
ஒளி தந்தாய் தாமரை போல் நம் வாழ்வு மலர்ந்தது-எமக்கு
தென்றலாய் நீ இருக்க புயலாய் வந்த காலன் எம்மிடமிருந்து
உன்னைப் பறித்தான் ஆண்டொன்றென்ன ஓராயிரம்
ஆண்டானாலும் எம் இதயத்தை விட்டு நீங்காது உன் நினைவு.

சதாசிவம் கடையடி,
கம்பர்மலை. (97723)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 ★ 03 ★ 1948

மறைவு
11 ★ 05 ★ 2009



### முருகன் சின்னத்துரை

திதி: 30.04.2010

ஓராண்டு மறைந்தது எம் குலதெய்வம்
எமை விட்டுச் சென்று -ஆனாலும்
நீங்காது எம் பாசம்
மாறாது எம் துயரம்
என்றும் எம் காவலனாய் இருந்து
எமை நல்வழிப்படுத்த வேண்டும்
எம் அன்புத் தெய்வமே அப்பா.

கரணவாய். (92237) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இராஜதந்திரம் மூலம் சாதிப்பதற்கு இந்தியா, ஜப்பான் கனவுலக முயற்சி

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் மிக மோசமான - மிகக் கொடூரமான - மிகக் குரூரமான - மனித உரிமை மீறல்கள், படுகொலை நடவடிக்கைகள், யுத்தக் குற்றங்கள் போன்றவை தொடர்பில் உரியவர்களைப் பொறுப்பாக்கும் நடவடிக்கையை அமைதியான இராஜதந்திரம் மூலம் முன்னெடுக்க வைக்கலாம் என்ற கனவுலகச் சிந்தனையிலிருந்து இந்தியாவும், ஜப்பானும் வெளியே வரவேண்டும். - மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசிய ஆய்வாளரான மீனாஷி கங்குலி தமது ஆய்வு அறிக்கை ஒன்றில் இவ்வாறு வெளிப்படையாகக் கோரியிருக்கிறார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி பெற்றாயிற்று என்று இலங்கை அரசும் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் அறிவித்து ஏறத்தாழ ஒரு வருடமாகின்றது.

ஆனால் யுத்தத்தின் கடைசி ஆறு மாதக் கொடூரத்தின் போது பல்லாயிரம் அப்பாவிகள் - தமிழ் சிவிலியன்கள் - கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட கொடூரத்துக்குப் பொறுப்புக் கூறும் நடவடிக்கையை முன்னெடுப்பதில் எந்த முன்னேற்றமும் இதுவரை இல்லை.

ஒரு தமிழ் சிவிலியனின் இரத்தம் கூட - ஒரு சொட்டு இரத்தத்தைக் கூட - சிந்த விடாமல் தென்னிலங்கை அரசின் சிங்களப் படைகள் புனிதமாகப் போரை நடத்தி வெற்றியீட்டியுள்ளன என இலங்கை அரசுத் தலைமை சர்வ தேசத்தின் காதில் சுற்றும் பூவை அப்படியே ஏற்றுக்கொண்டு வாளாவிருக்க வேண்டியவர்களாகத் தமிழர்கள் உள்ளனர்.

சிங்களப் படைகளின் பரிசுத்தப் போராட்ட முறைமை பற்றிய அரசுத் தரப்பினதும், அரசுத் தலைமையினதும் நற்சான்றிதழ்களை அப்படியே வேத வாக்காக எடுத்துக் கொண்டு, அதன் மீது - அதனடிப்படையில் - தமிழ் மக்கள் தென்னிலங்கையுடன் நல்லிணக்கத்தை - புரிந்துணர்வை - கட்டியெழுப்ப வேண்டும் எனக் கொழும்பும், கொழும்புக்குப் பின்னணியில் நின்று முண்டுகொடுக்கும் ஜப்பான், இந்தியா போன்ற தேசங்களும் கருதுகின்றன போலும்.

ஆயிரக் கணக்கில் தமிழர்கள் மிகக் கொடூரமாகக் கொன்றொழிக்கப்பட்டமை தொடர்பாக யுத்தக் குற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஊடாக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு, இடக்குப் பண்ணி, தடை செய்தமைக்குப் பின்னணியில் செயற்பட்ட பிரதான சூத்திரதாரி இந்தியாவே.

அதேபோல, மனித உரிமை மீறல் போக்கு, மோசமான கொடூரச் சம்பவங்களுக்குப் படையினரையும் பொலிஸாரையும் பொறுப்பாக்காமல் தவிர்ப்பதற்கான விசேட சட்ட விலக்குச் செயற்பாடு போன்றவற்றை இலங்கை ஆட்சிப்பீடம் தொடராமல் இருப்பதற்கான - தடுப்பதற்கான - வழிமுறையாகப் பொருளாதார உதவி வசதிகளை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த மேற்குலகு முயன்ற போது, அந்த முயற்சியை முறியடிக்கும் வகையில், மேற்குலகின் பொருளாதார உதவிகளுக்கு மாற்றீடான வசதிகளை ஜப்பான் தேசம் இலங்கைக்கு வழங்கி, மேற்குலகின் எத்தனங்களைப் பயனில்லாமல் செய்யப்பண்ணி வருகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே, யுத்த மீறல் சம்பவங்கள், மோசமான மனித உரிமை மீறல் மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்குக் காரணமானவர்களை அவற்றுக்குப் பொறுப்பாக்கும் நடவடிக்கைகளை அமைதியான இராஜதந்திரம் மூலம் இலங்கையைக் கொண்டு செய்விக்கலாம் என்ற கற்பனையை இனிமேலாவது கைவிட வேண்டும் என்ற கோரிக்கை இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் இப்போது முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மட்டுமல்ல, இந்த அரசு பதவிக்கு வந்த நாள் தொட்டு இந்த நான்கரை வருட காலத்தில் இடம்பெற்ற எத்தகைய - எந்த - யுத்தக் குற்ற மீறல் தொடர்பிலும் -

உரிமை கோரிப் போராடிய தமிழர்களுக்கு எதிரான படையினர் - பொலிஸாரின் நடவடிக்கைகளின் போது, இடம்பெற்றவை எனக் கருதப்படும் எந்த மனித உரிமை மீறல் சம்பவம் தொடர்பிலும் -

இந்த அரசு எந்தப் படைச் சிப்பாயையோ, பொலிஸாரையோ சட்ட ரீதியாகப் பொறுப்பாக்க இடமே அளிக்கவில்லை - அளிக்க மாட்டாது - என்பதுதான் உண்மை; மெய்மை நிலை.

2005 நவம்பரில் இந்த ஜனாதிபதியின் அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், 2006வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற முக்கிய பதினாறு மனித உரிமை மீறல் கொடூரங்கள் தொடர்பாக விசாரிக்க இதே ஜனாதிபதியால் ஒரு விசேட ஆணைக்குழு நியமிக்கப்பட்டு கண்துடைப்பு நாடகம் ஒன்று அரங்கேற்றப்பட்டது.

அந்த விசாரணை நடவடிக்கை 'வெறும் பம்மாத்து' என்பதை அதன் செயற்பாடுகளை உன்னிப்பாக - நேரடியாக - பிரசன்னமாகிக் கண்காணித்த சர்வதேச அவதானிகள் குழுவே பகிரங்க அறிக்கை வெளியிட்டு அம்பலப்படுத்திவிட்டு, அந்த விசாரணை நாடகத்தைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டு, சகிக்க முடியாமல் வெளியேறி விட்டது.

அத்தகைய இலங்கை ஆட்சிப்பீடம், கொத்துக் கொத்தாகத் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட அட்டூழியத்துக்கு - அராஜகத்துக்கு - படையினரின் அடாவடித்தனத்துக்கு - உரியவர்களைப் பொறுப்பாக்கும் என்று நம்பி, அந்தச் செயலை அமைதியான - பின்புற வழியிலான - இராஜதந்திரம் மூலம் இலங்கையைக் கொண்டு முன்னெடுக்க வைக்கலாம் என ஜப்பானும், இந்தியாவும் இனிமேலும் கருதுமானால் அந்த இரு நாடுகளின் சிந்தனைப்போக்குக் குறித்தும் ஏளனம் கொள்வது தவிர தமிழருக்கு வேறு மார்க்கமில்லை.

# யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்வதற்கு இந்திய பொறியியல் நிறுவனம் அக்கறை

கொழும்பு, ஏப்.30

இந்தியாவின் மிகப்பெரிய பொறியியல் நிறுவனமான எல் அன் ரி உள் கட்டமைப்பு அபிவிருத்திகள் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் பிரதான உள் கட்டமைப்புத்துறைகளில் முதலீடு செய்வதற்கு அக்கறை கொண்டுள்ளது.

மேற்படி நிறுவனத்தின் பிரதம செயலாக்க அதிகாரியான விஷால் மாதூர் கொழும்பில் இது பற்றி ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் - இந்தத் திட்டத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட விருப்பதாகக் கூறினார்.

வீதி அமைப்பு, உயர் கட்டட அமைப்புகள், கட்டடத் தொகுதிகள், ஹோட்டல்கள், மின் உற்பத்தி மற்றும் பொறியியல் திட்டங்களில் தமது அமைப்பு அக்கறை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தொழில் பங்காளிகளைத் தேடிக்கொள்வதும் தமது நோக்கமாகவிருக்கிறது என்று கூறியமாதூர், கட்டிமுடிப்பதும் கையளிப்பதும் தமது தொழில் கொள்கையாகும் என்றார். முகாமைத்துவம் செய்வதில் தாம் அக்கறை காட்டுவதில்லை என்றார்.

நாட்டில் அமைதி திரும்பிக் கொண்டிருப்பதால் மேலும் பலர் முதலீடு செய்ய முன்வருவார்கள் என்று அவர் குறிப்பிட்டார். (ப)

## வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.30

"போருக்குப் பிந்திய வடக்கு - கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியை அணுகுவது எவ்வாறு?" என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இல. 128, டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

கியுடெக் - கரித்தாஸ் நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை சி.ஜே. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் தொடக்கவுரைகளை யாழ். பல்கலைக் கழக பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன், யாழ். பல்கலைக்கழக தகைநிலைப் புவியியல் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்துவர்.' (50-201)

### ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பெற்ற

## தென்மராட்சி மாணவர் 33 பேருக்கு கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

கடந்த வருடம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற தென்மராட்சி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 33 மாணவர்களுக்கு கொமர்ஷல் வங்கியின் ' அருணலு' சிறுவர் சேமிப்புத் திட்டத்தின் கீழ் வங்கியின் சாவகச்சேரி கிளை மண்டபத்தில் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வங்கி மண்டபத்தில் நடைபெற்றது.

கிளை முகாமையாளர் எஸ்.வி. குருபாதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி, கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய அதிபர் இ.இரவீந்திரன், மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதன், கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப. செல்லத்துறை உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஒ-207)

## வலி.மேற்குப் பிரதேச சபையின் உலக புத்தக தினம் இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.30

வலி.மேற்கு பிரதேச சபையின் உலக புத்தக தினம் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

யாழ்.கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நூல்கள், ஏடுகள் பூசை வழிபாட்டின் பின்னர் வழக்கம்பரை அம்மன் கோயிலில் இருந்து மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட பின்னர் பிரதம விருந்தினர் பா.தனபாலன் புத்தகக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

சங்கானைக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை.எங்கரசு இதில் சிறப்புரையாற்றுவார்.

வாழ்த்துரையினை வலி.மேற்கு பிர தேசசபை நிர்வாக அதிகாரி க.பாலசுப்பிரமணியம், சனசமூக அபிவிருத்தி அதிகாரி ம.ஞானவேல் ராசா ஆகியோரும் வழங்குவர்.

நூலா? நுண்சாதனமா என்னும் விசேட பட்டிமன்றமும் இறுதியாக இடம்பெறும்.

(50-302)

# மணல் விநியோக சர்ச்சையில் 'மகேஸ்வரி நிதியம்' சளாப்பல்!

*'மணல் விநியோகத்தை ஏக போக உரிமையாக்கி மக்களை வதைக்கும் அட்டூழியத்தை நிறுத்துக! கூட்டமைப்பின் எம்.பி. சரவணபவன் சீற்றம்'* என்ற தலைப்பில் கடந்த செவ்வாயன்று முதலாம் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பில் 'மகேஸ்வரி நிதியத்தின்' கடிதத் தலைப்பில் அதன் செயற்றிட்ட இணைப்பாளர் ரி.றஜீவ் என்பவரின் பெயர் குறிப்பிட்டு ஒப்பமிட்ட நீண்ட அறிக்கை ஒன்று 'உதயன்' அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் மூலச் செய்தியில் எம்.பி. சரவணபவன் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளிப்பதை விடுத்து அந்த அறிக்கை வேறு தேவையற்ற விடயங்களை இழுத்தடித்து நீட்டி, நிமிர்த்தி விளம்பியிருக்கின்றது.

'மகேஸ்வரி நிதியமானது, சட்டபூர்வமான, சுதந்திரமான ஒரு தொண்டு நிறுவனமாகும். அத்துடன் அது ஆயுதத்துடன் அரசியல் செய்யும் ஒரு குழுவுமல்ல' என்றும் -

*'உதயன் பத்திரிகையில் வெளிவந்த அவதூறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டதைப் போல எந்தவொரு அரசியற் கட்சியும் எமது நிறுவனத்தின் பெயரில் ஒளித்துக் கொண்டு மணல் விநியோகத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கவில்லை.'* - என்றும் கூட அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அது தொடர்பாகப் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1.மகேஸ்வரி நிதியத்தின் கடிதத் தலைப்பிலேயே அதன் 'தலைவர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, எம்.பி.' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மகேஸ்வரி நிதியத்தின் பெயரில் ஒளிந்துகொண்டு ஆயுதத்துடன் அரசியல் செய்யும் குழு எது என்பது குடாநாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.

3. மகேஸ்வரி நிதியத்தின் பெயரால் அறவிடப்பட்ட பணத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டவை எனக் கூறப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைப் பட்டியலிட்டு, அவை மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்கொள்ளப்பட்டவை என்று காட்டி, அவரது படத்துடன் ஒரு முழுப்பக்க விளம்பரமாக 'உதயன்' உட்பட குடாநாட்டின் சகல பத்திரிகைகளிலும் கடந்த பொதுத் தேர்தலுக்கு முதல்நாள் பிரசாரம் செய்யப்பட்டமை மறைக்கக் கூடியதல்ல.

*'எந்த ஒரு அரசியல் கட்சியும் எமது நிறுவனத்தின் பெயரில் ஒளித்துக் கொள்ளவில்லை'* என்று அதன் செயற்றிட்ட இணைப்பாளர் ஒருவர் குறிப்பிடும்போது, அவர் குறிப்பிடும் அந்தத் தொண்டு நிறுவனத்தின் செயற்றிட்டங்களுக்கு அரசியல்வாதி டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுப்பாக்கி - பெருமைக்குரியவராக்கி - தேர்தல் பிரசார விளம்பரம் செய்ய முடிந்தது எங்ஙனம்? மணல் விற்று, அறவிட்ட பணத்தில் அபிவிருத்தித் திட்ட நாடகங்களை அரங்கேற்றி, அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை உரிமையாளராகவும், பெருமையாளராகவும் ஆக்கிக்கொண்டு, இப்போது புதுக்கதை விடுவது ஏன்?

மணல் விநியோக சர்ச்சை குறித்த சரவணபவன் எம்.பியின் அறிக்கையில் அவர் எழுப்பியுள்ள பிரதான கேள்விகள் பின்வருமாறு:-

'மகேஸ்வரி நிதியம்' எவ்வாறு ஒட்டுமொத்தமாக குடாநாட்டுக்கான மணல் விநியோகத்தைப் பொறுப்பேற்றது? அவ்வாறு மணல் விநியோகம் மகேஸ்வரி நிதியத்திடமே சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டதா? இது தொடர்பான பகிரங்கக் கேள்வி அறிவித்தல் விடுக்கப்பட்டதா? இல்லையாயின் 'மகேஸ்வரி நிதியம்' எவ்விதம் மணல் விநியோகத்தைத் தன்கையில் எடுக்க முடிந்தது?

இந்தக் கேள்விகளுக்கு 'மகேஸ்வரி நிதியத்தின் சார்பில் அனுப்பப்பட்ட பதில் அறிக்கையில் தெளிவான பதிலேதும் இல்லை.- 'மணல் விற்பனை செய்யும் உரிமமும் அதன் மூலம் வரும் வருவாயும் சட்டபூர்வமான வகையிலேயே பெறப்பட்டன.' - என்ற 'மொட்டையான' கூற்றைத் தவிர.

சரவணபவன் எம்.பி. எழுப்பியுள்ள கேள்விகளுக்கு சரியான பதில் தெரிவிக்கும் விளக்கத்தை இன்னும் 'மகேஸ்வரி நிதியத்திடமிருந்து' எதிர்பார்க்கிறோம்.

சரியான பதில் கிடைக்குமானால் அதனைப் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.

குடநாட்டில் மணல் விநியோக உரிமையை ஏகபோகமாக - பலவந்தமாக - 'மகேஸ்வரி நிதியம்' கைப்பற்றி வைத்திருக்கின்றமைக்கான நியாயத்தையும் காரணத்தையும் அதற்குத் தனக்கு மட்டுமே இருக்கின்ற பிரத்தியேக உரிமையையும் 'மகேஸ்வரி நிதியம்' தெளிவுபடுத்தாத வரை பிற சாட்டுப் போக்கு விளக்கங்களும், வியாக்கியானங்களும், நீண்ட அறிக்கைகளும் அர்த்தமற்றவை என்பதை மகேஸ்வரி நிதிய இணைப்பாளருக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதேவேளை, இந்த மணல் விநியோக சர்ச்சையில் உண்மை நிலைமையை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் தெளிவுபடுத்தாமல் மௌனம் காப்பது ஏனோ.....? (ஆ - ர்)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 18 | 01.05.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : திருதியை |
| | பி.ப 05.02 வரை |
| நட்சத்திரம் : | கேட்டை |
| | முழுவதும் |
| சுபநேரம் | : 02.57 -04.27வரை |
| ராகுகாலம் | : 08.57-10.27 வரை |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்.

## பதவி வெற்றிடம்

### பதவி :- கணக்காளர் 104/08

சம்பள அளவுத்திட்டம் (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 66/2006 சுற்றுநிருபத்திற்கமைய 104/08 ஆவது சம்பளக் குறியீடு)

11200-14100
140 × 10 - 150 × 10

* வயது :- 18-45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
* பிணை:- தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பவற்றைச் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
* கணனி அறிவு முக்கியமானதாகக் கருதப்படும்.
* தகைமைகள் :-

அ: கூட்டுறவுப் பணியாளருக்கான 9ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/உள்துறைக் கணக்காய்வாளர் பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளருக்கான 10ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/உள்துறைக் கணக்காய்வாளர் பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Licentiate Examanition) அல்லது கிரய முகாமைத்துவக் கணக்கறிஞர் நிறுவனத்தின் Professional part - I, பரீட்சையில்சித்தி அல்லது இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமை அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்காளர்/உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்பிக்கும் முறை**

இப்பதவிக்கான விண்ணப்படிவத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்திச் சான்றிதழ்களின் பிரதிகளுடன், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக்குறிப்பிட்டு பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம் எனும் முகவரியிட்டு 12.05.2010 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும். (சி/567071)

30.04.2010 **பொதுமுகாமையாளர்**


## 75முதியோருக்கு இலவச மூக்குக்கண்ணாடி

யாழ்ப்பாணம்,ஏப்.30

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி அப் பகுதியில் உள்ள 75முதியோருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளை வழங்கியதாகக் கழகத் தலைவர் லயன் ப.செல்லத்துரை தெரிவித்தார்.

இதேவேளை சுவிஸில் உள்ள கைதடிப் பகுதியைச் சேர்ந்தவர்களால் இந்த 75முதியோருக்கும் இந்த நிகழ்வில் அன்பளிப்பும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## மே தினக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

சர்வதேச மார்க்கசியக் குழுவின் ஏற்பாட்டில் மே தினக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் முதலாம் குறுகுத்தெரு வீதியில் உள்ள கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் தொழிற்சங்கப் பிரமுகர்கள் உரையாற்றுவார்கள். (ஒ-1)

## வடமராட்சி வலயத்தில் பெண் அதிபர் பதவிகள்

யாழ்ப்பாணம், ஏப். 30

வடமராட்சி வலயத்தில் விரைவில் வெற்றிடமாகவுள்ள வடஇந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள தகுதியானவர்களிடம் இருந்து அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவை வகுப்பு I அல்லது 2 - Iஐச் சேர்ந்த பெண் பட்டதாரிகளாக இருத்தல் வேண்டும் என்றும் ஆகக்குறைந்தது மூன்று வருடங்களேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் விண்ணப்பிக்க விரும்புவோர் நிர்வாகப் பிரிவில் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2116 திகதி 28-04-2010

ஆங்கில எழுத்திற்கும் O

வெற்றி எண்கள் 23 25 26 69

போனஸ் இல: 21

ஜக்பொட் பரிசு ரூ. 16,947,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 112320 | 20/- | 2,246,400/- |
| 2 இல | 8037 | 100/- | 803,700/- |
| 3 இல | 163 | 1,000/- | 163,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 4324 | 40/- | 172,960/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 299 | 1,000/- | 299,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,947,050/- | - |
| 1 இல + போனஸ் இல | 5336 | 100/- | 533,600/- |
| 2 இல + போனஸ் இல | 240 | 500/- | 120,000/- |
| 3 இல + போனஸ் இல | 01 | 100,000/- | 100,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 223 | 200/- | 44,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 5,585,760/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 130977 | | 6,185,760/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - M.T.G. சித்ரானி புத்திகா சமரசிங்க - கண்டி.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - M.A.R. இந்திக பிரசாத் ஆரியசேன - குறுவிடை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 201832674-1-08 |
| அம்பாந்தோட்டை | 201833335-2-40 |
| பொலன்னறுவை | 201835123-4-27 |
| புத்தளம் | 201831520-4-48 |
| களுத்துறை | 201834508-4-03 |
| குருணாகல் | 201831887-6-08 |
| கொழும்பு | 201845333-0-47 |
| திருகோணமலை | 201838866-6-40 |
| மாத்தறை | 201833420-9-06 |
| கொழும்பு | 201844854-6-46 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 17,253,400/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 மே 01 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7



## உபநயன பிரம்மோபதேச அழைப்பு



நிகழும் விகிர்தி வருஷம் உத்தராயண சித்திரை 17 ஆம் நாள் (30.04.2010) வெள்ளிக்கிழமை துதியைத் திதியும் அனுஷ நட்சத்திரமும் கூடிய காலை 8.30 முதல் 9.30 வரையுள்ள சுபவேளையில் நந்தகுமார சர்மா- நிர்மலாதேவி அம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன்

**சிரஞ்சீவி ந. மகதீனன் சர்மா**
**(கஜநாத கௌரி சங்கரசர்மா)**

அவர்களுக்கு உபநயன பிரம்மோபதேசம் செய்ய திருசக்தி முற்றம் சிவன், சாளம்பை முருகன் திருவருளால் பெரியோர்கள் நிச்சயித்துள்ளோம். அத்தருணம் சகலரும் வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகிறோம். நல்லை ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நல்லாசிகள் வழங்குவார்.

நந்தகுமார சர்மா- நிர்மலாதேவி அம்மா
*'திருசக்தி முற்றம்', சிவன் கோயில்,*
*மாகியம்பிட்டி.*



கணபதி துணை

*கோப்பாய்*

அருள்மிகு ஸ்ரீ வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில்

## மணவாளக்கோல விழா ~ 2010



நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் சித்திரைமாதம் 17ஆம் திகதி (30.04.2010) வெள்ளிக்கிழமை அனுஷநட்சத்திரமும், துதியைத் திதியும் கூடிய சுபநந்நாளில் காலை 8 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு சகஸ்ர (1008) சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகமும் நடைபெறத் திருவரும் கைகூடியுள்ளது. அன்றையதினம் அபிஷேக ஆராதனைகள், திருஊஞ்சல் நடைபெறவுள்ளன. அத்தருணம் அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து எம் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### கிரியா கால நிகழ்வுகள்

சித்திரை மாதம் 16 ஆம் நாள் (29.04.2010) வியாழக்கிழமை
மாலை 5 மணிக்கு யாகாரம்பம், யாகபூசை.
சித்திரை மாதம் 17 ஆம் நாள் (30.04.2010) வெள்ளிக்கிழமை
காலை 8 மணிக்கு யாகபூசை, மூலமூர்த்திகளுக்கு விசேட திரவிய அபிஷேகம், தொடர்ந்து கும்பபிரதக்ஷணம், சங்காபிஷேகம், முற்பகல் 11 மணிக்கு விசேட பூஜை, அன்னதானம் என்பன நடைபெறும். மாலை 6 மணிக்கு விசேட பூஜை, திருஊஞ்சல் தொடர்ந்து எம்பெருமான் மின் குமிழ்களினால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வெளிவீதி வலம் வரும் அருட்காட்சியும் இடம்பெறும்.

பிரதமகுரு: சிவஸ்ரீ ச.சண்முகராஜேஸ்வரக்குருக்கள்
[ஆதீனகர்த்தா, வெள்ளெருவைப் பிள்ளையார் தேவஸ்தானம்]

**மங்கள இசை**
மா.இராம்குமார் குழுவினர்(கோண்டாவில்)

**ஒளி, ஒலி அமைப்பு**
இரத்தினம் ஒளி அமைப்பாளர் (கோப்பாய்)

சி.சஜீவன் (மக்கள் வங்கி அச்சுவேலி),
மு.விக்னேஸ்வரன் (அதிபர், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்)

*மாலை விசேட சமயச் சொற்பொழிவு நடைபெறும்.*

சுபம். க.காங்கேசன் [குடும்பம்] கனடா.



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

ரமேஷ் - சிவதர்ஷினி தம்பதிகளின்
செல்வப் புதல்வி ரமேஸ் சண்யா
அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை
அண்ணா ஹரேஷுடன் தனது இல்லத்தில்
இன்று (30.04.2010)
சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

தகவல்:
திருநாவுக்கரசு ரமேஸ்
(அப்பா - சுவிஸ்)

30.04.2010





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் மலேரியா நோய்த்தாக்கம் கடந்த சில வருடங்களாகக் கட்டுப்பாட்டில்!

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாவட்டத்தில் மலேரியா நோயின் தாக்கம் கடந்த சில வருடங்களாக ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசகர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா.

உலக மலேரியா தினத்தை முன்னிட்டுக் கடந்த 25ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

யாழ்.மாவட்டத்தில் மலேரியாவின் தாக்கம் ஒழிக்கப்பட்டுள்ளது. அதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவர்களுக்கான பாராட்டு விழாவாகவே உலக மலேரியா தினம் கொண்டாடப்படுகிறது.

மலேரியாவைப் பற்றிய அறிவு அனைவருக்கும் அவசியமானது. மலேரியாவை கட்டுப்படுத்துவது என்பது சுகாதாரப் பகுதியினரது கடமை மட்டுமல்ல. பொதுமக்களதும் அனைத்துத் துறையினரதும் பொறுப்புமாகும்.

உலகில் 109 நாடுகளில் மலேரியா பரவியுள்ளது. உலக சனத்தொகையில் 3.3. பில்லியன் மக்களுக்கு மலேரியா நோய் வரக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. வருடத்தில் ஒரு மில்லியன் மக்கள் இந்த நோயினால் இறக்கின்றனர்.

இவர்களில் பத்து ஆயிரம் வரையில் கர்ப்பிணிப் பெண்களாவர். கர்ப்பிணிப் பெண்கள் இறப்பது என்பது பல்வேறு தொடர்புடைய பிரச்சினைகளை உண்டு பண்ணுகிறது.

ஆசியாவின் 20 நாடுகளில் மலேரியா பிரச்சினை இருக்கிறது. அதில் இலங்கை உட்பட 4 நாடுகளில் அது அதிக பிரச்சினையாக இருந்து வருகிறது.

எனினும் யாழ்.மாவட்டத்தில் மலேரியா நோயின் தாக்கம் கடந்த வருடங்களில் ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளது. இது பாராட்டத்தக்க விடயமாகும். மலேரியா நோய்த்தாக்கம் இல்லை என்று உங்கள் பணியிலிருந்து விலகிவிடாதீர்கள்.

மலேரியா தடுப்பு என்பது தற்போது நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்வாக மாறி வருகிறது. யாழ்.குடாநாட்டின் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மலேரியாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த மலேரியா தடுப்பு பகுதியினர் தொடர்ந்தும் நுளம்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (50-14)

# தமிழ், சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.30

524 ஆவது படைப் பிரிவின் நெறிப்படுத்தலில் தமிழ், சிங்களப் புத்தாண்டு விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை கரணவாய் குஞ்சர்கடை விளையாட்டு மைதானத்தில் காலை 6 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெறும்.

மாலை இசை நிகழ்ச்சிகள் வாண வேடிக்கைகள் என்பன இடம்பெறும்.

(50-236)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 5ஆம் திகதி புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் நடத்தப்பட்டுவரும் 'புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சி' இரண்டாம் கட்டமாக எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியை வடமராட்சிப் பிரதேச மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் பார்வையிட்டு புற்றுநோய் பற்றிய தெளிவினைக் காத்திரமாக எல்லோருக்கும் எடுத்துச் சென்று ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க ஒத்துழைக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவினர் கேட்டுள்ளனர். (50-16)



கலாபூஷணம் விருதுபெற்ற கவிமாமணி புலவர் கல்வயல் வே.குமாரசுவாமிக்கு தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று பாராட்டு விழா நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விழாநாயகன் வே.குமாரசாமியும் அவரின் பாரியாரும் மேடையில் அமர்ந்திருப்பதையும், விழாநாயகனுக்கு பொதுமக்கள் சார்பில் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அதிபர், விரிவுரையாளர்கள் இணைந்து பாராட்டுப்பத்திரம் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்

(படங்கள்:தென்னவன்)

# அன்னதானத்துக்காக வரிசையில் நின்ற வயோதிப மாதுவின் சங்கிலி 'அபேஸ்'!

யாழ்ப்பாணம், ஏப்.30

அன்னதான மண்டபத்தில் நின்ற வயோதிப மாது ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடர்கள் மிகவும் சாதுரியமான முறையில் அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நீர்வேலி கந்தசாமி கோயில் தேர்த் திருவிழாவின்போது இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட வயோதிப மாது அன்னதான மண்டபத்தில் அன்னதான நிகழ்வில் கலந்துகொள்வதற்கு பக்தர்களின் வரிசையில்- நெரிசலில்- காத்து நின்றபோதே திருடர்கள் அவரின் தங்கச் சங்கிலியை 'அபேஸ்' செய்துள்ளனர்.

இந்த ஆலயத்தின் கொடியேற்ற திருவிழாவிலும் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி ஒன்று அறுக்கப்பட்டது தெரிந்ததே.(04-224)




# யாழ்ப்பாணம் - வவுனியா இடையிலான தனியார் பஸ் கட்டணம் 138 ரூபா

யாழ்ப்பாணம்,ஏப்.30

அனைத்துத் தனியார் சிற்றூர்த்திகளும் யாழ்ப்பாணம் - வவுனியா பிரயாணக் கட்டணமாக 138 ரூபாவை அறவிடுமாறு மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அனைத்துத் தனியார் பஸ் உரிமையாளர்களும் இதைக் கவனத்தில் எடுத்துச் செயற்படுவதுடன் வழி அனுமதிப்பத்திரம் பெற்றுச் சேவையிலீடுபடும் அனைத்துத் தனியார் சிற்றூர்திகளும் பயணிகளுக்கான பயணச்சீட்டை வழங்கியே சேவையில் ஈடுபடவேண்டும்.

ஏற்கனவே இந்த விடயம் அறிவுறுத்தப்பட்டுவந்தபோதும் தற்போது இந்த நடைமுறை இறுக்கமாக அமுல்படுத்தப்படவுள்ளது. பயணச்சீட்டை வழங்காமல் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள் தொடர்பான முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்குமிடத்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-16)

# கொடிகாமம் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் 'வெஸ்ரேன் யூனியன்' பணப்பரிமாற்ற நிலையம்

## இன்று திறந்து வைக்கப்படுகின்றது

யாழ்ப்பாணம்,ஏப்.30

கொடிகாமம் பிரதேச மக்களின் வசதி கருதி கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வெளிநாட்டு பணப் பரிமாற்ற சேவைநிலையம்(வெஸ்ரேன் யூனியன்) ஒன்றை இன்று வெள்ளிக்கிழமை சங்க அலுவலகத்தில் திறந்துவைக்கிறது.

சங்கத்தின் தலைவர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'வெஸ்ரேன் யூனியன்' நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் தினேஷ் மென்டிஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மேற்படி நிறுவனத்தின் பொது முகாமையாளர் அட்றியன் கொரேரா, யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன், சாவகச்சேரி பிரதேசசபை செயலர் எஸ். சிவராஜலிங்கம் ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். (50-224)

# புங்குடுதீவு, மானிப்பாய் ப.நோ.கூ.சங்கங்களின் எரிபொருள் நிலையங்களில் கையிருப்பு இல்லை

## சிரமங்களை எதிர்கொள்வதாக நுகர்வோர் விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

புங்குடுதீவு, மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருள்கள் இல்லாமையால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புங்குடுதீவு மடத்துவெளி சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திலும் மானிப்பாய் ஆலடிச் சந்திக்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் எரிபொருள்கள் கையிருப்பில் இல்லை என அங்கு செல்லும் நுகர்வோரிடம் ஊழியர்கள் கைவிரிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரண்டு நிலையங்களிலும் எரிபொருள்கள் கையிருப்பில் இல்லாமையால் எரிபொருள்களைக் கொள்வனவு செய்ய நுகர்வோர் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதுடன் வாகன ஓட்டிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.அலுவலக அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கான எரிபொருள்களுக்குரிய காசுக் கட்டளைகள் திரும்பியதாலேயே எரிபொருள் அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (50-224)

# தந்தை செல்வாவின் வாழ்க்கை திரைப்படமாக்கப்பட வேண்டும்

## இளைப்பாறிய பேராயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்.30

தமிழ் மக்களின் விடிவிற்காக தியாகங்கள் பல செய்த தந்தை செல்வாவின் வாழ்க்கையினை சரித்திரத் திரைப்படமாகத் தயாரிக்க வேண்டும். அது தமிழ் மக்களுக்கான கொடையாக இருக்கும்.

தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவரும் தென்னிந்தியத் திருச் சபையின் இளைப்பாறிய பேராயருமான பேரருட் கலாநிதி எஸ்.ஜெபநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 33 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் தந்தை செல்வா சதுக்கத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் தலைமை உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தந்தை செல்வா தமிழ் மக்களுக்காக பல தியாகங்களைப் புரிந்தவர். அவரது மகத்தான தியாகங்கள், கொள்கைகள் என்பவற்றை எதிர்கால சந்ததியும் அறியும் பொருட்டு ஆவணமாகத் தயாரிக்க வேண்டும். அந்த வகையில் அவரது வாழ்வியலைச் சித்தரிக்கும் திரைப்படம் ஒன்றை தயாரிக்க முயற்சிகள் எடுத்து வருகிறோம். அதற்கான உதவிகளை ஏனையோரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

இந்தியாவிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செல்வநாயகம் சந்திரகாஷனிடமும் திரைப்படமாக்கும் முயற்சிக்கான ஒத்துழைப்பை வேண்டி நிற்கிறோம். தந்தை செல்வாவின் வாழ்வியல் திரைப்படமாக ஆவணப்படுத்தப்படும் பட்சத்தில் அது தமிழ் மக்களுக்கான கொடையாக இருக்கும்.

தந்தை செல்வாவின் கொள்கைகளும், இலட்சியங்களும் என்றும் தோற்றுப் போகமாட்டாது- என்றார்.

அறங்காவலர் குழுவின் தலைவர் பேரருட் கலாநிதி எஸ்.ஜெபநேசனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட செல்வநாயகம் சந்திரகாஷன், முதலமைச்சர் மு.கருணாநிதியுடன் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடி ஆவணத் திரைப்படம் தயாரிப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் என உறுதியளித்தார். (50-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்டப் போட்டிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.30


வடமாகாண மரதன், சைக்கிள் ஓட்டம், வேகநடைப் போட்டி -2010 முதன்முறையாக இம்முறை யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளதாக வடக்கு மாகாண விளையாட்டு உதவி ஆணையாளர் எஸ்.அண்ணாத்துரை அறிவித்துள்ளார்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் அடுத்த மாதம் 9 ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ள இப் போட்டிகளில் வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல் லைத்தீவு, வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட வீர, வீராங்கனை கள் பங்குபற்றவுள்ளனர்.

இப்போட்டிக ளில் சைக்கிளோட்டம் ஆண்கள்- 100-130 கிலோ மீற்றரும், பெண்கள் 40-50 கிலோ மீற்றர் மரதன் ஓட் டம்- இருபால ரும்-42.195 கிலோ மீற்றர் வேக நடை 10-20 கிலோ மீற்றரும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-16)


LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd

## புதிய கிளை திறப்பு விழா



ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை தனது அபிவிருத்திக் கிளையை இன்று வெள்ளிக்கிழமை (30.04.2010) மாலை 4.30 மணியளவில் எமது நிறுவன இயக்குநர் பார்ட்லீட் குழுமத்தின் தலைவருமாகிய திரு.இராஜ் விஜயசிங்க அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

327-A. பிரதான வீதி,பருத்தித்துறை.

எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் மேற்படி விழாவில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

எம்.ஜெகன்னாத் - பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர், தலைமைக் காரியாலயம், 29/2, விசாகா வீதி, கொழும்பு.


## சாவகச்சேரியில் புத்தாண்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.30

'நெஸ்லே' நிறுவனத்தின் 'நெஸ்ரோ மோல்ட்' அனுசரணையுடன் 522ஆவது படையணியினரால் தமிழ்-சிங்கள புத்தாண்டு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

காலை 7 மணிக்கு 522ஆவது படையணித் தளபதி பிரிகேடியர் ஹேமந்த பண்டார, ஆண்,பெண் மரதன் ஓட்டம், சைக்கிளோட்டம் ஆகியவற்றை கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

கலை 9 மணி தொடக்கம் பல்வேறு போட்டிகளில்தமிழ், சிங்கள இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இரவு சித்தாரா இசைக் குழு வினரின் இசை நிகழ்வும் பரிசில்கள் வழங் கலும் இடம் பெற்றன. (ஒ-207)


சாவகச்சேரியில், MAY 2ம் திகதி BBS இன் புதிய பாலர்பாடசாலை ஆரம்பம்.

8TH Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்

பாலர் பாடசாலை

Play Group 2-3 Years | Montessori 3-4 Years | Pre School 4-5 Years

கற்பித்தல் முறை:
- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகள்

விரைவில்....! நீர்வேலியிலும், உடுப்பிட்டியிலும்.

வேறு கிளைகளில் புதிய தவணைக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் உள்ளன.

விசேட பாலர் நிகழ்ச்சிகள்: English Concert, முத்தமிழ் விழா, ஒளிவிழா, பட்டமளிப்பு விழா, மாணவர் சித்திரம், கைவேலை, கண்காட்சி, Sports Meet.

Contact : 021 2225796, 0776646357.

BRITISH BUSINESS SCHOOL

சாவகச்சேரி: 11, தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி. (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அருகாமையில்)

பிரதான வளாகம்: 140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 021-2225796


## யாழ்ப்பாண மாநகர சபை
## வேலைக்கான கேள்வி அறிவித்தல் -2010

கீழ்க் குறிப்பிட்ட வேலைகளுக்கு யாழ்ப்பாண மாநகரசபையில் 2010ஆம் ஆண்டிற்கு பதிவுசெய்துள்ள வலுவுள்ள (ICTAD) நிர்மாண பயிற்சி நிறுவனத்தின் பதிவுள்ள, வற் வரி செலுத்தும் மிகத்தகைமையுடைய ஒப்பந்த காரரிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 2010.05.07ஆம் திகதி பி.ப. 3 மணிவரை வழங்கப்படும்.
2. கேள்விப் பத்திரங்கள் 2010.05.13ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
3. கேள்விகள் யாவும் 2010.05.13 திகதி நண்பகல் 2 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயருடன் வேலைக்கான கேள்வி என எழுதி 'மாநகர ஆணையாளர்' யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. மேலதிக விபரங்களை யாழ்.மாநகரசபையின் வேலைப் பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக்குறைந்த பதிவுத்தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புப்பணம்(வற் வரி உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | Construction of external road around Sri vatharipeeda vinayakar temple | M9 | 20,000.00 | 2240.00 |
| 02 | Reconstruction of retaining wall at Neeraviyadi Pillaiyar kovil pond at college road side, Jaffna. | M9 | 20,000.00 | 2240.00 |

குறிப்பு: வேலைகள் யாவற்றையும் 2010.06.30 திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.

(சி-567082)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 ★ 11 ★ 1945



மறைவு 22 ★ 04 ★ 2008

### அமரர் சுப்ரமணியம் சோதிலிங்கம்

திதி: துதியை

அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் புகலிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
மாண்பு மிகு மகானாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
திகழ்ந்த அன்புத் தெய்வமே!
நீர் எமைப் பிரிந்து ஈராண்டென்ன
இவ்வுலகம் உள்ளவரை
என்றும் உம் நீங்கா நினைவுகளுடன்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தொ.பே.இல: 0213209157, 0778331714
'கலாபவனம்', 8 ஆம் வட்டாரம், நயினாதீவு.

என்றென்றும் உம் நினைவில்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 ★ 08 ★ 1947



உதிர்வு 11 ★ 05 ★ 2009

### அமரர் கதிரவேலு காங்கேசன்

(முன்னாள் உரிமையாளர்: இரத்தினம் லைட், கண்ணாலொறி)

(திதி:துதியை)

ஆயிரம் கனவுகளுடன் நம்மை வளர்த்தீர்கள் அப்பா
கனவுகளை நனவாக்கி நிற்கின்றோம்
கண்டு களிக்க வருவீர்களா மறுபடியும்
கண்ணீருடன் கண் கலங்கிக் காத்து நிற்கின்றோம்
வற்றியது கண்ணீர் மட்டுமல்ல எம் இதய நீரும் தான்
எங்கள் கனவுகளிலே வருகின்றீர்கள்
எழுந்து அணைக்கும் முன் மறைகின்றீர்கள்
வாருங்கள் மீண்டும் இவ்வுலகில்
வந்து எமக்கு ஆறுதல் தாருங்கள்
தலைவன் இல்லாத வீட்டில்
தலையணை நனைகின்றது ஒவ்வொரு இரவும்
நடக்கின்றோம் நீங்கள் சொல்லித் தந்த பாதையில்
நடக்கின்றீர்கள் நீங்களும் நிழலாய் எம்முடன் என்றும்.....

"கதிரவேல் வாசா", காளி கோவிலடி, கோப்பாய். (97359) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 08 1917

மறைவு 29 03 2010



### அமரர் இளையதம்பி சேதுப்பிள்ளை

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே!
அன்பாலே எம்மை அரவணைத்து பண்பாலே எம்மை வழிநடத்தி
நிலையில்லா வாழ்வினிலே நீங்கா நினைவுகளைத் தந்து
நிலையான வாழ்வு தேடிச் சென்றீரே!

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம் சாற்றியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (28.04.2010) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.04.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]யவத்தை
[illegible]கம் மேற்கு, சுன்னாகம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(97338)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போரூட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் தென்மராட்சிக் கலைமன்றத்தில் இடம்பெற்றபோது எடுக்கப் பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் வழங்கப்பட வைத்திருந்த சைக்கிள்களில் ஒரு தொகுதியை முதலாவது படத்திலும், தென்மராட்சிக் கல்விவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜமூர்த்தி, தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரட்ணம் ஆகியோர் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்குவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

# வடமாகாண வைத்தியத்துறையில் நிலவும் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## சுகாதார அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

வடமாகாணத்தின் வைத்தியத்துறையில் நிலவும் வெற்றிடங்களை நிவர்த்தி செய்யும்வகையில் ஓய்வுபெற்ற, அனுபவமுள்ள வைத்தியர்களை மீள நியமித்து, அவர்களின் சேவையைப் பெறுவதற்கு நாம் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு யாழ்.மத்திய கல்லூரிப் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மலேரியாத் தடுப்பு செயலணி நடவடிக்கைக்காகப் பெருமளவு நிதி வடமாகாணத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து மலேரியாவை முற்றாக ஒழிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ். மாவட்டத்தில் மலேரியாவின் தாக்கம் குறைவாகவே இருக்கிறது.

கடந்த வருடம் 3 மலேரியா நோயாளர்கள் யாழ்.மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். அதேபோல இந்த வருடத்தின் கடந்த 4 மாதங்களிலும் நோயாளர்கள் யாரும் இனங்காணப்படவில்லை. இது பாராட்டத்தக்க விடயமாகும்.

மலேரியா ஒழிப்பு நடவடிக்கையில் வெற்றிகண்ட யாழ்.மாவட்ட சுகாதாரத்துறை டெங்குநோய் ஒழிப்பிலும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். டெங்கு நோயின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளது. அதனைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை அவசியமானது. அதேபோல் மீள மலேரியா தலைதூக்காமல் கண்காணிப்பு மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் திணைக்களங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டதன் விளைவாகவே டெங்குநோய் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. உள்ளூராட்சித் திணைக்களங்கள், மாநகரசபை, நகரசபை, பிரதேசசபைகள் தொடர்ந்தும் டெங்கு நோய்க்கான நுளம்பைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

டெங்கு நோய்த் தடுப்புச் செயலணிக்கு நிலவிவந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். பயிற்சியை நிறைவுசெய்த 36 பேருக்கு விரைவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. பொதுச் சுகாதார பரிசோதகர் பதவிக்கு 50 பேரை நியமிக்கவுள்ளோம்.

மலேரியாத் தடுப்புப் பிரிவில் காணபடும் வெற்றிடங்கள் பலவும் நிரப்பப்படவுள்ளன. பிராந்திய மலேரியா தடுப்புப் பிரிவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி க.தா.சிவபாதத்தின் அர்ப்பணிப்பான சேவை தொடர்ந்தும் யாழ்.மக்களுக்குக் கிடைக்க வேண்டும்.

நெடுங்கேணிப் பிரதேச வைத்தியசாலை மீளத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் கண்டாவளை, வட்டக்கச்சிப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளும் மீளத் திறந்துவைக்கப்படவுள்ளன. ஆரம்பத்தில் அங்கு நடமாடும் சேவை மூலம் மருத்துவ சிகிச்சை வழங்கமுடியும்.

ஓய்வுபெற்ற வைத்தியர்களை மீள நியமித்து அவர்களது சேவையைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதற்கு வடமாகாண ஆளுநரின் அனுமதி அவசியமானது. அதனைப் பெற்று விரைவில் மீள் நியமனம் வழங்கமுடியும்- என்றார்.

(50-14)

## பருத்தித்துறை- கொழும்பு அரைச் சொகுசு பஸ்சேவை

யாழ்ப்பாணம், ஏப்.30

பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கான நேரடி அரைச் சொகுசு பஸ் சேவைகள் நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இ.போ.ச.வட பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

வடமராட்சி மக்களின் நன்மைகருதி பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்குமான மேற்படி அரைச்சொகுசு பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இச் சேவைகள் நாளை காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(50-16 -236)




## வியாபாரிகள் புரிந்த விந்தை; பேட்டுக் குஞ்சுகள் சேவலாகின!

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.குடாநாட்டில் பேட்டு கோழிக் குஞ்சுகள் எனக்கூறி விற்கபட்ட கோழிக்குஞ்சுகள் தற்போது வளர்ந்து சேவலாக மாறிய சம்பவங்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டு வியாபாரிகள் சிலரினால் 'பேட்டுக் குஞ்சு' என கூறி பெருமளவான கோழிக்குஞ்சுகள் விற்கப்பட்டன.

இவர்களின் வார்த்தைகளை நம்பி பெருமளவானோர் இந்தக் குஞ்சுகளைக் கொள்வனவு செய்து வளர்த்து வந்தனர். ஆனால் என்ன அதிசயம் இப்போது அவையெல்லாம் வளர்ந்து சேவலாகக் கூவத்தொடங்கியுள்ளன. இதன் பின்னரே வியாபாரிகளால் தாம் ஏமாற்றப்பட்டதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

இந்த வியாபாரிகள் சில மாதங்களுக்கு முன்னரும் கால்நடையாக சென்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறு சேவல் குஞ்சுகளைப் பேட்டு குஞ்சுகள் எனக் கூறி விற்பனை செய்துவிட்டு சென்றனர் என்பது தெரிந்ததே. (04-224)

# பொதுமக்களுடன் கலந்துரையாடிய பின்னரே ஆடம்பர ஹோட்டல் தொடர்பாக இறுதி முடிவு

## யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

நல்லூர்,ஏப்.30

நல்லூரில் நிர்மாணிக்கப்படவுள்ள ஆடம்பர ஹோட்டல் தொடர்பாக பொது மக்களது கருத்துக்கே மதிப்பளிக்கப்படும் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் பொதுமக்களுடன் சந்திப்பு நடைபெறவுள்ளதாகவும் இக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தினர் மற்றும் தொல்பொருள்துறை நிபுணர்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் என்போரும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஹோட்டல் அமைவதற்கான காணி சம்பந்தப்பட்ட நிறுனத்திற்கு 10.04.2006 இல் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் மாநகரசபை இது தொடர்பாக பொதுமக்களின் கருத்தைத் தெரிந்து கொண்ட பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கமுடியும் என்றும் மாநகரசபை முதல்வர் குறிப்பிட்டார்.

(04-111)

# படையெடுத்துவரும் கட்டாக்காலிகளால் சேனைப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிப்பு

வடமராட்சி, ஏப்.30

கட்டாக்காலிக் கால்நடைகளின் தொல்லையால் புலோலி மேற்கு, தெணிப் பகுதியில் சேனப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் புகையிலை, வெங்காயம் ஆகிய பயிர்கள் காலபோகப் பயிர்ச் செய்கையாக மேற்கொள்ளப்பட்டு அவை அறுவடைசெய்யப்பட்ட பின்னர் சிறுபோகப் பயிர்ச் செய்கையாகக் குரக்கன், பூசணி, மிளகாய், கத்தரி போன்ற சேனைப் பயிர்ச் செய்கைகளில் விவசாயிகள் ஈடுபடுவது வழக்கமாகும்.

இம்முறை சேனைப்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், என்றுமில்லாதவாறு பெருமளவில் படையெடுக்கும் கட்டாக்காலி ஆடு, மாடுகள் சேனைப் பயிர்ச்செய்கையை நாசப்படுத்தி வருகின்றன. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போர் முன்னைய காலங்களைப் போல கால்நடைகளைக் கட்டிவளர்த்தால் சேனைப் பயிர்ச் செய்கை சேதமின்றித் தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

இது விடயத்தில் உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கேட்டுள்ளனர். (04-236)

## நகரில் கட்டாக்காலி நாய்கள்; பயணிப்போருக்குப் பெரும் இடையூறு

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ். நகரில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளது.

முற்றவெளி, கொட்டடி, பண்ணை மற்றும் நகர்ப்பகுதிகளில் இந்தக் கட்டாக்காலி நாய்கள் அதிகளவில் நடமாடித் திரிகின்றன. இந்தக் கட்டாக்காலி நாய்களினால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதோடு, பாதசாரிகளும் நாய்களால் கடியுண்ட சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இதேசமயம் - முற்றவெளிப்பகுதியில் கட்டாக்காலி நாய்களுடன் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் விபத்துக்கு உள்ளாகியதில் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(04-224)

# விழுந்தெழும்ப வைக்கும் ஆனைவிழுந்தான் வீதி; உடனடியாகப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

வடமராட்சி, ஏப்.30

மந்திகையிலிருந்து ஆனைவிழுந்தான் சந்திக்குச் செல்லும் வல்லிபுரம் வீதிமோசமாகப் பழுதடைந்துள்ளது.

இவ்வீதி முழுதும் ஒரே குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் இப் பாதையூடாகப் பயணிப்போர் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

இவ்வீதிகளூடாகவே பருத்தித்துறையிலிருந்து அம்பனுக்கு பஸ் சேவை இடம்பெற்று வருகிறது. அத்துடன் பல பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையானோர் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் மூலம் வல்லிபுரக் கோவிலுக்குச் சென்று வருகிறார்கள். அத்துடன் குடத்தனையிலிருந்து மணல் ஏற்றிக்கொண்டு பெருமளவிலான லொறிகள் இவ்வீதி ஊடாகவே குடாநாட்டின் பல பாகங்களுக்கும் சென்று வருகின்றன.

இவ்வாறு அதிக பயன்பாட்டைக் கொண்ட இவ்வீதியைக் காலதாமதமின்றி திருத்தியமைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (04-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



நண்பர்களுடன் மகிழ்ச்சி, சந்தோஷமாக பொழுதைக் கழிக்கலாம். காலையில் செய்யாமல் விட்ட வேலை ஒன்றை மாலையில் செய்து முடிப்பீர்கள். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். மனைவி வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள்.

### இடபம்




தொழில் மீதான பற்றுதல் அதிகரிக்கும். நாளைய சில வேலைகளுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். கடன் மிகுதிகளை, கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். தந்தை தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்.

### மிதுனம்



கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வேண்டிய சிலரே முக்கியமான ஒரு விடயத்தில் உங்களுக்கு விரோதமாக செயற்படலாம். சிறிய விடயம் ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். சுபகாரியங்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள்.

### கடகம்



தொலை பேசி வழிச் செய்திகள் தொல்லை தருவதாக அமையலாம். நண்பர்கள் உங்களிடம் வாங்கிய பணத்தை கொடுக்காமல் இழுத்தடிக்கலாம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். உறவினர்கள் சிலரின் வீட்டிற்கு செல்லலாம்.

### சிங்கம்



செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்கும் நாள். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். வெளியூர்களில் இருந்து வரும் நபர்கள் முக்கியமான தகவல்களைக் கொண்டு வரலாம். வர்த்தகர்களுக்கு கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

### கன்னி



கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம். பிள்ளைகள் நலன் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். அயலாருக்காக சில காரியங்களை செய்து கொடுப்பீர்கள். வழக்கமான சில வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம்.

### துலாம்



நண்பர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பெரிய மனிதர்களின் நட்பைப் பெறலாம். பொதுவிடயங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். சுபகாரியங்களில் முன்னேற்றம் காணப்படும். சக ஊழியர் ஒருவருக்கு பண உதவி செய்யலாம். அனுகூலமான நாள்

### விருச்சிகம்



மன உறுதியுடன் செயற்படுவீர்கள். வெளியிடங்களுக்கு செல்லும் போது சில்ரை எதிர்பாராமல் சந்திக்கலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்களை மாற்றி அமைக்கலாம். சில செலவுகளை வேகமாக செய்து விட்டு, பின்னர் ஏன்டா செய்தோம் என வருத்தம் அடைவீர்கள். உங்கள் மூலம் சிலர் தங்கள் வேலைகளை முடிக்க முற்படுவர்.

### தனுசு



தடைபட்ட காரியம் ஒன்று இன்று இனிதே நடந்தேறும். அதிக நேரம் வேலை பார்க்கலாம். பிள்ளைகள் மீதான பாசம் அதிகரிக்கும். நண்பர்கள் வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். இதுவரை செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

### மகரம்



மனக் குழப்பங்களைத் தவிர்க்க சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். பணவரவுகளால் நிதி நிலைமையில் மேம்பாடு காணப்படும். சகாய விலையில் சில பொருள்களை வாங்குவீர்கள். நீண்ட நாள்களாக பார்க்காத நண்பர் ஒருவரைப் பார்க்கலாம். நீங்கள் கேட்காமலேயே சிலர் உங்களுக்கு உதவி செய்யலாம். ஆதாயகரமான நாள்.

### கும்பம்



உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். என்றோ வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்று திடீரென கைக்கு கிடைக்கும். சக ஊழியர்களின் விமர்சனங்களை அல்லது பாராட்டைப் பெறலாம். முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். பக்தி நாட்டம் கூடும்.

### மீனம்



அமைதி, பொறுமையாக செயற்பட வேண்டிய நாள். தொழில் நிமித்தம் சில பணிகளை அவசரமாக முடிக்க வேண்டிய நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். சகோதரர் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஓய்வு எடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து பேசி எரிச்சல் உண்டாக்கலாம்.


# மக்கள் வங்கி
## அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.03.2009 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலத்தில் விடப்படும் திகதி | ஏலத்தில் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01. | பருத்தித்துறை- 285 | | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை- 030 |
| 02. | வல்வெட்டித்துறை-141 | | |
| 03. | நெல்லியடி-106 | 15.05.2010 | |
| 04. | யாழ்.ஸ்ரான்லி வீதி-030 | | |
| 05. | சேவை நிலையம், மானிப்பாய்-837 | | |
| 06. | சாவகச்சேரி-110 | | |
| 07. | அச்சுவேலி-107 | | |
| 08. | சுன்னாகம்- 109 | 16.05.2010 | |
| 09. | காங்கேசன்துறை- 031 | | |
| 10. | சேவை நிலையம், மல்லாகம்- 899 | | |
| 11. | யாழ்.பிரதான வீதி-104 | | |
| 12. | சேவை நிலையம், உருமீபிராய்- 865 | | |
| 13. | சங்கானை- 108 | 17.05.2010 | |
| 14. | யாழ்.பல்கலைக்கழகம்- 162 | | |
| 15. | சேவை நிலையம், திருநெல்வேலி- 855 | | |
| 16. | யாழ்.கன்னாதிட்டி- 284 | | |
| 17. | சேவை நிலையம், இணுவில்- 905 | 18.05.2010 | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/567023)



# இந்திய கலாசார பண்பாட்டுக் கழகம்

ICCR

பெருமையுடன் வழங்கும்

மஹாகவி காளிதாஸின் சிறப்புமிகு காவியம்

# அபிக்ஞான சகுந்தலம்

நாட்டிய நாடகம் வழங்குபவர்கள்: அரு ஸ்ரீ கலையகம்



காதல், அவமானம்,
அவநம்பிக்கை,
மனஉறுதி,
இனிய மறு இணைப்பு,
இணைந்த
ஒரு காதல் காவியம்

தயாரிப்பு நெறியாள்கை: கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்

மே 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு

வீரசிங்கம் மண்டபம்,
12 கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.



அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்

ஊடக அனுசரணை :

Shakthi TV   சக்தி FM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவில் கட்சிக்குள் குழப்பம்

கண்டி,ஏப்.30

மத்திய மாகாண சபையின் எதிர்க் கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தலைவர் ஒருவரை தெரிவுசெய்வதில் பிரச்சினைகளும், கருத்து முரண்பாடுகளும் தலைதூக்கியுள்ளன எனத் தெரியவருகின்றது.

மத்தியமாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த வசந்த அலுவிகார பொதுத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளார்.

இதனால் மத்தியமாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இவ்வெற்றிடத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த மத்தியமாகண சபை உறுப்பினரான் கே.கே.பியதாஸவை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது.

இச்செயல் ஏனைய ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபை உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளதோடு, மத்திய மாகாணசபையில் நீண்டகால உறுப்பினர்களாக விளங்கும் ஒருவரை கட்சி நியமிக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் கோரிக்கை விடுக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் மேமாதம் 4 ஆம் திகதி மத்திய மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை ஐ.தே.க. தீர்மானிக்க வேண்டும் என்று மாகாணசபை உறுப்பினர்கள் கட்சியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, ஐ.தே.கவின் கண்டி மாவட்டத் தலைமை யார் என்பதில், கட்சி எம்.பிக்களான அப்துல் காதர் மற்றும் லக்ஷ்மன் கிரியெல்லவுக்குமிடையில் கருத்து மோதல்கள் வெடித்துள்ளன என்றும் அறிய முடிகின்றது.

கண்டி மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று முதலிடம் பெற்ற தனக்கே கட்சியின் கண்டி மாவட்டத் தலைமை வழங்கப்பட வேண்டுமென்பது காதர் எம்.பி.விரும்புகிறார் என்றும் கூறப்படுகின்றது.

லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. விருப்பு வாக்கு அடிப்படையில் மூன்றாமிடத்தில் உள்ளார்.

அவர் உடனடியாக மாவட்ட தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டுமென்றும் காதர் எம்.பி. வாதிடுகின்றார் என்றும் அறியமுடிகின்றது.

மு.கா. தலைவர்கூட விருப்பு வாக்கினடிப்படையில் தன்னிடம் தோல்வி கண்டுள்ளார் என்றும், அவரும், ஐ.தே.க. மற்றும் இதர விடயங்களில் தன்னிச்சையாகச் செயற்பட முடியாதென்றும் காதர் எம்.பி. வாதமாகவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

ஐ.தே.க.வின் முஸ்லிம் தேசிய அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்துள்ள காதர் எம்.பி.தொடர்ச்சியாக கட்சியுடனும், கட்சித் தலைமையுடனும் முறுகல் போக்கையே கடைப்பிடித்து வருகிறார் என்றும் மேலும் குறிப்பிடப்படுகின்றது. (ளி)

# பின்னவலை யானைகள் சரணாலயத்திற்கு பெருமளவு உல்லாசப் பயணிகள் வருகை

கேகாலை,ஏப்.30

இலங்கையின் பிரசித்தி பெற்ற இடங்களில் ஒன்றான பின்னவலை யானைகள் சரணாலயத்திற்கு இம்முறை புத்தாண்டு காலத்தில் அதிகளவு உல்லாசப் பயணிகள் விஜயம் செய்தனர்.

பாடசாலை மாணவர்களும், உள்ளூர், வெளிளூர் உல்லாசப்பயணிகள் பலரும் திரள் திரளாக இச்சரணாலயம் வந்து யானைகள் குளித்துக் குதூகளிப்பதையும், சுதந்திரமாக நடமாடுவதையும் கண்டு களித்தனர்.

இதன்பொருட்டு சரணாலய நிர்வாகம் விசேட வசதிகளையும் செய்திருந்தது.

பிரஸ்தாப சரணாலயத்தில் குட்டியானை முதல் கொம்பன் யானைகள் உட்பட 64 யானைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# பொதுக்கொள்கையின் கீழ் அமைப்புகள் இந்த மேதினத்தில் ஒன்றுபட வேண்டும்

## ஐ.தொ.காங்கிரஸ் செயலாளர் வலியுறுத்து

கண்டி,ஏப். 30

தொழிலாளர் வர்க்க தினமான மேதினத்தில் பொதுக்கொள்கையின் கீழ் சகல அமைப்புகளும் ஒன்றுபடவேண்டும் என ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் எஸ்.ஜோதிவேல் மேதினத்தை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

உலகத் தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகளை, ஒவ்வொரு மேதினத்திலும் அறிக்கைவிட்டு ஆத்ம திருப்தி பெறும் நிலையிலும் -

முதலாளித்துவத்துடன் நட்பு ரீதியாகத் தேநீர் மேசையில் ஒப்பமிட்டு சலுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணம் வளர்க்கப்பட்டுவரும் நிலையிலும் - மற்றுமொரு மேதினத்தை நாம் சந்திக்கின்றோம்.

இனியாவது நாம் தொழிலாளர் வர்க்க உரிமைகளைப் பெறுவதில் தொடர்ச்சியான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

பெருந்தோட்டத்துறையைச் சார்ந்த தொழிற்சங்கங்களுடன் தோட்டக் கம்பனிகள் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை கம்பனிகள் நேர்மையாகப் பின்பற்றுவதில்லை என்பது யாவரும் அறிந்த உண்மையே.

தொழிலாளர்களின் குமுறல் இல்லாத தொழிக்கப்படுகிறது. அடுத்த ஒப்பந்தம் வரை தொழிற்சங்கங்கள் மௌனித்துப் போகின்றன.

இனிவரும் காலங்களில் கம்பனிகளுடன் பெருந்தோட்டத்துறை தொழிற்சங்கங்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தம் - கூட்டு ஒப்பந்தத்துக்கு மாறாகச் செயற்படும் கம்பனிகளில் தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்கின்றமையை உறுதி செய்யும் வகையில் செய்யப்படவேண்டும்.

இதற்காக தொழிற்சங்கங்களுக்கு அங்கத்தவர்கள் பாரிய அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். தோட்ட உத்தியோகத்தர்களுக்கு தொழிலாளர்களுக்குப் போன்று வீட்டு வசதிகளுக்கான நிலமும், நிவாரணமும் பெற்றுக்கொடுக்க சகலரும் ஒன்றிணைய வேண்டும்.

கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வைப்பதில் வலுச்சேர்க்க முடியாவிடில் மீண்டும் சம்பள நிர்ணயசபையின் மூலம் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்க வழிசெய்வதுடன், காலத்துக்குக் காலம் ஏற்படும் வாழ்க்கைச் செலவுக்கேற்ப மாற்றம் செய்ய நிர்ப்பந்திக்கவும், கிளர்ச்சிகளில் ஈடுபட்டு தொழிற்சங்கங்களை விழிப்புறு நிலைக்கு இட்டுச்செல்லவும் வேண்டும்.

எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கப்போகும் தொழிலாளர்கள், சகல அமைப்புகளையும் பொதுக்கொள் கையின் கீழ் மேதினத்தில் ஒன்றுபடுமாறு வலியுறுத்த வேண்டும் - என்று உள்ளது.(ளி)

# கோப்ரல் என்ற பேரில் பெண்களை ஏமாற்றி பணம், நகைகள் கறந்த ஆசாமி சிக்கினார்

## போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு,ஏப்.30

இராணுவக் கோப்ரல் என தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு பல பெண்களை ஏமாற்றி அவர்களின் பணம், நகைகளை அபகரித்து வந்த நபரொருவரை அண்மையில் தம்புள்ள பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சமயம் அவர் வசமிருந்த போலி இராணுவ அடையாள அட்டை, இாணுவ விடுமுறைக் கடிதம் மற்றும் ஏராளமான பெண்களின் தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய குறிப்புப் புத்தகம் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தம்புள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலொன்றின் பேரில் இந்நபர் தம்புள்ள நகரில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹபரணை பலுகஸ்வெவ பிரதேசவாசியான இந்நபருடன் தொடர்புடைய வேறு சிலரையும் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ள, குருவிட்ட, இரத்தினபுரி, வெலி மடை உட்பட பல பிரதேசங்களில் பெண்களை ஏமாற்றி அவர்களின் பணம், நகைகளை அபகரித்தார் என இவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும்,

இதனையடுத்து இரத்தினபுரியைச் சேர்ந்த இரு பெண்கள் தம்புள்ள பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர் வவுனியா நான்காம் கஜபா அணியில் பணிபுரிகிறார் எனவும், விடுமுறையில் வந்துள்ளார் எனவும் நிரூபிப்பதற்காக போலிக் கடிதத்தையும் வைத்திருந்தார் எனத் தெரியவந்துள்ளது.

தம்புள்ளை தலைமையகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திஸ்ஸ லால் டி சில்வாவின் மேற்பார்வையில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. (ளி)

# கேகாலை மாவட்டத்தில் மழையால் இறப்பர் செய்கை பெரும் பாதிப்பு

கேகாலை,ஏப்.30

கேகாலை மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழையினால் பிரதேசத்தில் இறப்பர் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சிறு அளவில் மழை பெய்தாலும் இறப்பர் மரங்களில் பால் வெட்டிச் சேகரிப்பது சிரம் என தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கேகாலை மாவட்டத்திலுள்ள சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இறப்பர் தோட்டங்களில் பால் வெட்டும் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் மழைக் காலங்களில் வேலையின்றிச் சிரமப்படுகின்றனர் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, தற்போது இலங்கையின் இயற்கை இறப்பருக்கு வெளிநாடுகளில் என்றுமில்லாத வகையில் உயர்ந்த விலை கிடைப்பதுடன், அதிக கேள்வியும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ளி)




# கேகாலை மாவட்டத்திலிருந்து நான்கு அமைச்சர்கள் தெரிவு

கேகாலை,ஏப்.30

இம்முறை நடைபெற்ற பொதுத்தேர்தலில் கேகாலை மாவட்டத்திலிருந்து ஆளும் தரப்பில் ஏழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் அமைச்சரவை அந்தஸ்துப்பெற்ற அமைச்சராகவும், மூவர் பிரதியமைச்சர்களாகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

அதாவுட செனவிரத்தன நீதி அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார். ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும், எச்.ஆர்.மித்ரபால பிரதிக் கால்நடை அமைச்சராகவும், லலித் திஸாநாயக்க பிரதித் தொழில் நுட்ப அமைச்சராகவும் நியமனம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# 14 வயது யுவதி தீமூட்டி எரிப்பு காதலரான இளைஞர் கைது

பதுளை,ஏப்.30

ஹாலிஎல ஊவா திகல்ல பிரதேசத்தில் 14 வயதுடைய யுவதி ஒருவர் தீமூட்டி எரித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் யுவதியின் காதலன் எனக் கருதப்படும் 21 வயது இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலிஎல ஊவதிகல்ல பிரதேசவாசியான 14 வயதான நதீஷா தில்ருக்ஷி எனும் யுவதியே இவ்வாறு கோரமாகக் கொலையுண்டுள்ளார்.

இவ்விருவருக்கும் இடையில் நீண்ட நாள்களாகக் காதல் தொடர்பு இருந்து வந்துள்ளது எனவும், இருவருக்குமிடையே ஏற்பட்ட பிணக்கு முற்றியதில், இளைஞர் யுவதியை வயலில் வைத்து தீமூட்டி எரித்துக் கொலை செய்துள்ளார் எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

எரிகாயங்களுடன் மீட்கப்பட்ட யுவதி பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மரணமாகியுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் சிறிது காலம் இராணுவத்தில் கடமையாற்றியவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பதுளைப் பிராந்தியத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த விஜேசூரியவின் பணிப்புரையின் கீழ் பதுளை தலைமையகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பண்டார ரத்நாயக்கவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ளி)

# மாவனல்லை, கேகாலைப் பகுதிகளில் காளான் உற்பத்தி மூலம் பலருக்கு வருமானம்

கேகாலை,ஏப்.30

கேகாலை, மாவனல்லைப் பிரதேசங்களில் இம்முறை அதிகளவு காளான் உற்பத்தியாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டு வளவுகளில் இதனை உற்பத்தி செய்பவர்கள் பலரும் இக்காளான்களைப் பொதிசெய்து விற்று நல்ல வருமானம் பெற்று வருகின்றனர்.

நல்ல போஷாக்குச் சக்தியுள்ளமையால் இக்காளான் வகைகளைப் பொதுமக்கள் பலரும் ஆர்வத்துடன் வாங்கி வருகின்றனர்.

காளான் உற்பத்தி செய்வதன் மூலம் அதிகமான யுவதிகள் சுய வருமானம் பெற்றும் வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மீட்கப்பட்ட 1,000 மோ.சைக்கிள்கள் வியாழன் கையளிப்பு

கிளிநொச்சி,ஏப்.30

வன்னியில் கடந்த யுத்தத்தின்போது மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பிரதேசங்களில் மக்களால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் மீட்கப் பட்டவற்றுள் 1,000 மோட்டார் சைக்கிள்களை முதற் கட்டமாக எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை கைய ளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித் துள்ளார்.

எனவே கீழே குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் சைக் கிள்களின் உரிமையாளர்கள் இன்று வெள்ளிக் கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள வாகனங்கள் பராமரிப்பு நிலையத்துக்கு வாகனப் பதிவுப் புத்தகம், வருமான வரிப் புத்தகம், காப் புறுதிப் பத்திரம், பொலிஸ் முறைப்பாட்டுப் பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பனவற்றுடனும் அவற் றின் இரண்டு போட்டோப் பிரதிகளுடனும் சமுகமளிக் குமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை இங்கு தரப்பட்டுள்ள மோட்டார் சைக் கிள்களின் பட்டியலை கிளிநொச்சி,வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்ட செயலகங்களி லும் (கச்சேரி) பார்வையிட முடியும் எனவும் அவர் அறி வித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்களின் விவரப் பட்டியல் வருமாறு:-

(நேற்றைய தொடர்ச்சி)

| தொடர் இலக்கம் | பதிவு இலக்கம் | வகை |
|---|---|---|
| 256 | 157-4882 | HONDA |
| 257 | 13-7711 | HONDA |
| 258 | 12-2225 | HONDA |
| 259 | 13-4509 | YAMAHA |
| 260 | 12-2770 | HONDA MD 90 |
| 261 | 13-4509 | YAMAHA |
| 262 | 12-2712 | HONDA MD 90 |
| 263 | 301-8060 | HONDA MD 90 |
| 264 | 101-1092 | HONDA MD 90 |
| 265 | HM-5993 | HONDA |
| 266 | GM-0250 | YAMAHA MATE |
| 267 | MC1266 | HERO HONDA |
| 268 | GA-2174 | HERO HONDA |
| 269 | 12-5610 | HERO HONDA |
| 270 | JR-4751 | DAIDO |
| 271 | HI-8985 | HEERO HONDA |
| 272 | JD-1747 | TVS |
| 273 | 513-7330 | HONDA MD 90 |
| 274 | GJ-2683 | HONDA MD 90 |
| 275 | 13-8364 | YAMAHA MATE |
| 276 | 12-9501 | YAMAHA MATE |
| 277 | 52-9217 | YAMAHA MATE |
| 278 | GH-6050 | YAMAHA MATE |
| 279 | GA-8688 | YAMAHA MATE |
| 280 | 14-4878 | DAIDO |
| 281 | 14-3012 | DAIDO |
| 282 | 12-4549 | HONDA MD 90 |
| 283 | GN-9732 | SUPER CUP |
| 284 | 14-6385 | YAMAHA MATE |
| 285 | GX-9850 | SUPER CUP |
| 286 | 12-2374 | SUPER CUP |
| 287 | 149-01 | YAMAHA MATE |
| 288 | 12-2334 | HONDA MD 50 |
| 289 | 152-0091 | YAMAHA MATE |
| 290 | MF-3423 | SUPER CUP |
| 291 | HR-9640 | SUPER CUP |
| 292 | GQ9403 | SUPER CUP |
| 293 | JC-7803 | LIFAN |
| 294 | GO-6030 | HONDA MD 90 |
| 295 | GM-0601 | SUPER CUP |
| 296 | 13-8840 | HONDA MD 90 |
| 297 | 500-6738 | YAMAHA MATE |
| 298 | 500-6984 | YAMAHA MATE |
| 299 | MA-5432 | SUPER CUP |
| 300 | 147-9030 | YAMAHA MATE |
| 301 | 148-8489 | YAMAHA MATE |
| 302 | 13-0327 | HONDA MD 90 |
| 303 | 14-0968 | HONDA MD 90 |
| 304 | 133-8435 | YAMAHA MATE |
| 305 | 13-5754 | HONDA |
| 307 | NPHP 9181 | YAMATO |
| 308 | NPHC 3100 | SCOOTYPEP |
| 309 | NPGO 3558 | YAMATO |
| 310 | NPHU 4544 | HONDA 50 |
| 311 | NPHF 6885 | BAJAJ |
| 312 | 110-6021 | HONDA 90 |
| 313 | 302-4575 | SUPER CUP |
| 314 | 47-0967 | HONDA 90 |
| 315 | NPMK 5848 | YAMATO |
| 316 | 14-3197 | HONDA 90 |
| 317 | 21-2865 | HONDA 50 |
| 318 | 55-8116 | HONDA 90 |
| 319 | 52-0037 | HONDA 90 |
| 320 | NPGJV 9628 | HONDA 90 |
| 321 | 13-2493 | HONDA 90 |
| 322 | NPJC 1539 | TVS |
| 323 | CPGV 6294 | HONDA 90 |
| 324 | NPJH 6676 | TVS |
| 325 | NPMA 6709 | HERO HONDA |
| 326 | NPGD 3980 | SUPER CUP |
| 327 | 13-8752 | HERO HONDA |
| 328 | NPNJ 8466 | HERO HONDA |
| 329 | 13-4385 | HONDA 90 |
| 330 | NPHG 4908 | HERO HONDA |
| 331 | NPMD 3137 | HERO HONDA |
| 332 | 14-0482 | HONDA 90 |
| 333 | NPHK 0830 | HONDA 90 |
| 334 | NPHE 7219 | HONDA 90 |
| 335 | NPMG 7940 | SUZUKI |
| 336 | 1574649 | HONDA 90 |
| 337 | NPHY-1943 | HERO HONDA |
| 338 | 13-8839 | BAJAJ |
| 339 | 14-8114 | HERO HONDA |
| 340 | 101-0400 | TVS |
| 341 | 13-4562 | HONDA 90 |
| 342 | NPMB-4476 | HERO HONDA |
| 343 | NPGQ-8895 | HERO HONDA |
| 344 | NPJA-5777 | SUPER CUP |
| 345 | NPHQ-8379 | SUPER CUP |
| 346 | NPMG-1533 | SCOOTYPEP |
| 347 | NPMB-1334 | HERO HONDA |
| 348 | NPMU-4116 | HONDA 90 |
| 349 | 500-7825 | MD 90 |
| 350 | WPHH-5616 | HERO HONDA |
| 351 | MPGS-2478 | HERO HONDA |
| 352 | 12-5830 | SUPER CUP |
| 353 | NPJY-5871 | HERO HONDA |
| 354 | 500-9236 | SUPER CUP |
| 355 | 201-5867 | YAMATO |
| 356 | 13-6791 | MD 50 |
| 357 | 13-5790 | YAMAHA 90 |
| 358 | 13-7365 | YAMAHA 90 |
| 359 | NPMH-8511 | HERO HONDA |
| 360 | NPJJ-7429 | BAJAJ |
| 361 | NPMQ-6652 | HERO HONDA |
| 362 | NPJG-4103 | YAMAHA 90 |
| 363 | NPUB-0173 | TVS |
| 364 | NPGA-1967 | SUPER CUP |
| 365 | 201-5067 | YAMAHA 90 |
| 366 | NPGN-1161 | HERO HONDA |
| 367 | 147-4380 | YAMAHA 90 |
| 368 | 132-3061 | YAMAHA 90 |
| 369 | NPHL-3217 | YAMAHA 90 |
| 370 | NPUG-8276 | HERO HONDA |
| 371 | 105-5120 | HERO HONDA |
| 372 | NPHW-3932 | HERO HONDA |
| 373 | NPHI-0448 | HERO HONDA |
| 374 | NPUL-9025 | HERO HONDA |
| 375 | NPMU-9492 | UMAZAKI |
| 376 | 14-8661 | HERO HONDA |
| 377 | 14-0439 | YAMAHA 90 |
| 378 | 301-0611 | YAMAHA 90 |
| 379 | MPJD-4985 | HERO HONDA |
| 380 | WPGR-9068 | YAMAHA 90 |
| 381 | 13-4409 | HERO HONDA |
| 382 | NPJU-3727 | HERO HONDA |
| 383 | NPHI-6728 | YAMAHA 90 |
| 384 | 13-6575 | YAMAHA 90 |
| 385 | 13-5341 | SUPER CUP |
| 386 | NPHV-4679 | TVS |
| 387 | 500-3474 | HERO HONDA |
| 388 | NPGG-9830 | YAMAHA 90 |
| 389 | WPMG-2069 | HERO HONDA |
| 390 | NPGJQ-5597 | HERO HONDA |
| 391 | NPJY-1356 | YAMAHA 90 |
| 392 | 301-9112 | HERO HONDA |
| 393 | NPMQ-7408 | HERO HONDA |
| 394 | NPHX-1315 | HERO HONDA |
| 395 | NPML-0234 | HERO HONDA |
| 396 | NPLO-6219 | HERO HONDA |
| 397 | NPHQ-2211 | HERO HONDA |
| 398 | NWHK-1749 | HONDA 90 |
| 399 | WPHY-7414 | HERO HONDA |
| 400 | NPMZ-3453 | SUPER CUP |
| 401 | NPHX-1466 | SUPER CUP |
| 402 | HM-4131 | - |
| 403 | JS-2935 | - |
| 404 | HP0808 | - |
| 405 | CI-1302 | - |
| 406 | MJ-0608 | - |
| 407 | YJ-6041 | - |
| 408 | AT-9928 | - |
| 409 | MK-4325 | SUPER CUP |
| 410 | HT-4777 | HONDA MD 90 |
| 411 | C-13-8536 | - |
| 412 | D-1391 | - |
| 413 | JN-2948 | - |
| 414 | LV-8606 | - |
| 415 | 134-1547 | - |
| 416 | MN-6218 | - |
| 417 | JW-1969 | - |
| 418 | C12-2412 | - |
| 419 | C13-5740 | - |
| 420 | C14-8788 | - |
| 421 | C13-8838 | HONDA MD 90 |
| 422 | JT-5673 | - |
| 423 | 151-9269 | HONDA |
| 424 | MD-0229 | HONDA MD 90 |
| 425 | 109-9221 | MATE |
| 426 | 13-7413 | YAMAHA |
| 427 | 158-6012 | YAMAHA |
| 428 | MG-6647 | FREEDOM |
| 429 | HM-2257 | HERO HONDA |
| 430 | 13-9779 | YAMAHA MATE |
| 431 | HZ-2955 | HONDA MD 90 |
| 432 | HS-6172 | SUPER CUP |
| 433 | 13-1273 | HONDA MD 90 |
| 434 | MT-1020 | CD 100 |
| 435 | 14-4492 | MATE |
| 436 | HS-12-1416 | SUPER CUP |
| 437 | JS-2935 | PULSAR |
| 438 | HP-0808 | SUPER CUP |
| 439 | MJ-0608 | HERO HONDA |
| 440 | CY-6141 | HERO HONDA |
| 441 | JT-9928 | SUPER CUP |
| 442 | JH-0170 | HONDA MD 90 |
| 443 | GW-5674 | BOXER |
| 444 | 145814 | HERO HONDA |
| 445 | MS-6177 | DAIDO |
| 446 | MK-4325 | SUPER CUP |
| 447 | HR-7775 | HONDA MD 90 |
| 448 | YU-4677 | HERO HONDA |
| 449 | HT-9183 | HERO HONDA |
| 450 | 13037 | HERO HONDA |
| 451 | HJ-5826 | YAMAHA |
| 452 | 1462202 | YAMAHA |
| 453 | 1472404 | YAMAHA |
| 454 | 1314179 | HONDA |
| 455 | 14-5872 | HONDA MD 90 |
| 456 | 12-2256 | HONDA MD 90 |
| 457 | 125-2715 | HONDA MD 90 |
| 458 | 111-0685 | HONDA MD 90 |
| 459 | JV-0070 | HONDA |
| 460 | 723036 | HONDA |
| 461 | 130999 | HONDA |
| 462 | 1390634 | HONDA |
| 463 | HH-2501 | HONDA |
| 464 | JK-0703 | HONDA |
| 465 | 5004035 | BAJAJ |
| 466 | HZ-3564 | HERO HONDA |
| 467 | UF-6352 | YAMAHA |
| 468 | GS-6444 | MATE |
| 469 | 1412181 | YAMAHA |
| 470 | M6874 | YAMAHA |
| 471 | MU-1791 | SUPER CUP |
| 472 | HU-212127 | HERO HONDA |
| 473 | MG-9542 | HERO HONDA |
| 474 | 5441 | BAJAJ |
| 475 | JA-0369 | HONDA |
| 476 | HO-1100 | HERO HONDA |
| 477 | HS-8127 | FREEDOM |
| 478 | HE-3691 | - |
| 479 | HE-2136 | TVS |
| 480 | GC-7884 | BAJAJ BOXSR |
| 481 | MX-6135 | YUNJIN |
| 482 | HM-0895 | BAJAJ |
| 483 | GQ-6832 | BAJAJ BOXER |
| 484 | HH-0477 | BAJAJ BOXER |
| 485 | 1.56E+08 | BOXER |
| 486 | SRI 15866 | YAMAHA |
| 487 | HO-7814 | BOXER |
| 488 | HL-7880 | TVS |
| 489 | 10 SRI 5742 | HONDA CD 125 |
| 490 | HF-9887 | HERO HONDA |
| 491 | TPJQ-8502 | HERO HONDA |
| 492 | HPPCK-6474 | TVS |
| 493 | GA-9380 | BAJAJ BOXSR |
| 494 | JF-8179 | HEERO HONDA |
| 495 | GZ-8836 | HEERO HONDA |
| 496 | 1530065 | MATE |
| 497 | JQ-8950 | HEERO HONDA |
| 498 | SRI 14-5655 | MATE |
| 499 | SRI 301-3515 | SUPER CUP |
| 500 | 1318452 | MATE |
| 501 | JH-2611 | HERO HONDA |
| 502 | SRI 022925 | HONDA SUPER CUP |
| 503 | 49CC | XTREAM |
| 504 | 1288345 | MATE |
| 505 | GG-9934 | MATE |
| 506 | SRI 131032 | MATE |
| 507 | 1411760 | HONDA MD 90 |
| 508 | GN-6578 | HONDA MD 90 |
| 509 | SRI 133802 | MATE |
| 510 | SRI 129028 | MATE |
| 511 | 1330386 | HONDA MD 90 |

16ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதிக்குப் பெருமெடுப்பில் படையெடுக்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள்

## இங்கு உற்பத்தித் தொழிற்றுறை உத்வேகம் பெறும் வாய்ப்பு உண்டு

### கொழும்பு ஊடகத்தின் பார்வையில் யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாணத்தில் சமூக, பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றின் வெளிப்பாடு இது. அண்மையில் யாழ். வந்திருந்த 'Sunday Observer' பத்திரிகையின் ஊடகவியலாளர் -ஷிராஜீவ் சிறிமானே என்பவர் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலையை விவரிக்கிறார் இக்கட்டுரையில். அதன் தமிழக்கத்தை இங்கு தருகின்றோம்.**

கடந்த சில வருடங்களின் முன்னர் நாட்டை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதியைப் பெற்றுத் தருமாறு கோரி தனது பிச்சைப் பாத்திரத்துடன், இலங்கை மேற்கு நாடுகளிடம் கையேந்தி நின்றது.

ஆனால் இன்று, நீண்ட பல வருடங்களாகத் தொடர்ந்த போர் முடிவுக்குவர, பலமான அரசு ஒன்று ஆட்சியிலிருக்கும் நிலையில் இலங்கைத் தீவில் முதலீடுகளை மேற்கொள்வற்கு முதலீட்டாளர்கள் இலங்கையைத் துரத்துகிறார்கள்.

மசகு எண்ணெய் இருப்பதாகக் கருதப்படும் பகுதிகள், அம்பாந்தோட்டைத் துறைமுக நிர்மாணம் மற்றும் வடக்கு, கிழக்குப் பகுதிகள் முதலீடுகளை மேற்கொள்வதற்கு மீண்டும் திறந்துவிடப்பட்டிருப்பது என்பன சர்வதேச முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுக்கும் அம்சங்களாகிவிட்டன.

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அபிவிருத்தித் திட்டங்கள் முழு வீச்சுடன் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன எனவும் நாட்டினது வடக்கில் உற்பத்தித் தொழிற்துறை விரைவில் புதுவேகம் பெறும் என்றும் யாழ் மாவட்ட வர்த்தக மற்றும் தொழிற்துறைச் சம்மேளனத்தின் தலைவர் கே.பூரணச்சந்திரன் தெரிவிக்கிறார்.

நாட்டினது வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இயற்கை வளங்கள் நிறைந்து காணப்படுவதாகவும் அவற்றை பயன்படுத்திப் பலன்பெறுவதற்கான காலம் கனிந்து வந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'சர்வதேச மற்றும் உள்ளூர் முதலீட்டாளர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தங்களது முதலீட்டு நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ளும் ஒரு நிலைமை இங்கு விரைவில் ஏற்படவிருக்கிறது. இதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தென்பட ஆரம்பித்துவிட்டன' - என்றும் பூரணச்சந்திரன் கூறுகிறார்.

உலகின் இரண்டாவது பெரிய விமான நிலையத்தை இந்தியாவின் புதுடில்லியில் அமைத்துவரும் இந்தியாவின் மிகப்பெரிய பொறியியல் நிறுவனமான 'ரோர்போ லிமிற்றட் மற்றும் 'லாசின்' ஆகியவற்றின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தனர். அத்தோடு ஒரு கோடி டொலர் பெறுமதியான முதலீடுகளைக் குடாநாட்டில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆராய்ந்து வருகிறார்கள்.

அத்துடன், ஜோன் கீல்ஸ், ஏயிற்கென் ஸ்பென்ஸ் ஆகிய நிறுவனங்கள் யாழ். குடாநாட்டில் நட்சத்திரத் தரத்திலமைந்த உல்லாச விடுதிகளை அமைப்பதற்கான வாய்ப்புக்ககளையும் ஆராய்கின்றன.

இலங்கையின் 'MBSL' வங்கி 80 அறைகளைக் கொண்ட உல்லாச விடுதியொன்றை யாழ். நல்லூர் பகுதியில் அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டியிருக்கிறது.

மின்சார உற்பத்தித் துறையிலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள்.

ஓமந்தை தொடக்கம் காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதைகளை அமைக்கும் பணிகளை இரண்டு இந்திய நிறுவனங்கள் ஏலவே ஆரம்பித்துவிட்டன.

20 ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மீளவும் ஆரம்பிக்கப்பட இருப்பதானது உள்ளூர் இளைஞர்களுக்கான வேலைவாய்பை அதிகரித்திருக்கிறது.

30 ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருக்கும் காங்கேசன்துறை சிமெந்து ஆலை மூன்று மாதங்களின் பின்னர் மீளவும் திறக்கப்பட இருக்கிறது. இந்திய அரசின் உதவியுடன் யாழ் மாவட்டத்திலுள்ள அச்சுவேலி பொருளாதார வலயம் மீளக் கட்டியெழுப்பப்படவிருக்கிறது.

நாட்டினது வடக்கு, கிழக்கில் போரால் சிதைந்திருக்கும் உட்கட்டுமானத்தை மீளவும் கட்டியெழுப்புவதிலும் இந்தப் பிராந்தியத்தை மீண்டும் வளப்படுத்துவதிலும் இந்திய அரசும் இந்தியாவின் தனியார்துறையும் பெரும் பங்கை வகிக்கும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்த தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சியில் சிறப்பு விருத்தினராகக் கலந்துகொண்ட போதே இந்தியத் தூதுவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அதேசமயம், கொழும்பு பங்குச்சந்தை யாழ்ப்பாணத்தில் தனது கிளையொன்றைத் திறப்பதற்கு முடிவெடுத்திருக்கிறது.

பங்குச் சந்தையில் முதலிடுவதற்கு ஆர்வத்துடன் இருக்கும் யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் மற்றும் மக்களின் வேண்டுகையை ஏற்றுக்கொள்ளும் வகையிலேயே கொழும்பு பங்குச்சந்தை இந்த முடிவை எடுத்திருப்பதாக அதன் அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

தனது கிளையைத் திறப்பதற்கு ஏதுவாக குடாநாட்டில் பொருத்தமான கட்டடத்தைப் பெறும் முனைப்புக்களில் கொழும்பு பங்குச் சந்தை தற்போது ஈடுபட்டு வருகிறது. இந்த மாத முடிவுக்குள் அது பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டு மக்களின் தனிநபர் வருமானம் மிகவும் உயர்வானது.

'அனைத்து வகையிலும் குடாநாட்டு மக்கள் தன்நிறைவுடனேயே இருக்கிறார்கள். புலம்பெயர் நாடுகளிலிருக்கும் தங்களது உறவினர்களிடமிருந்தும் இவர்கள் பெருந்தொகையான பணத்தைப் பெறுகிறார்கள்.

இந்த நிலையில் தங்களது கையிலிருக்கும் பணத்தைப் பங்குச்சந்தைகளில் முதலிடுவதற்கு இவர்கள் விரும்புகிறார்கள்' என்று பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் தெரிவித்தார்.

புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு வழிசெய்யும் வகையில் இலங்கை முதலீட்டுச் சபை யாழ்ப்பாணத்தில் தனது கிளையை ஏற்கனவே திறந்திருக்கிறது.

குடாநாட்டில் தனது கிளையைத் திறப்பதற்கு மத்திய வங்கியும் திட்டமிட்டு வருவதாகத் தகவல் ஒன்று தெரியவருகிறது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது யாழ்ப்பாணத்தில் தனது கிளையை ஆரம்பித்திருப்பதோடு கடலுணவைப் பதனிடுவதற்காக ஐஸ் உற்பத்தி ஆலை ஒன்றை நிறுவுவதற்குத் திட்டமிட்டு வருகிறது.

பனம்பெருள் உற்பத்திகள், பழவகைகள், மரக்கறி, மீன், இஞ்சி, கைப்பணிப்பொருட்கள் மற்றும் புகையிலை ஆகியவற்றைக் குடாநாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மேற்கொள்ளவிருக்கிறது.

[illegible] மற்றும் ஏற்றுமதி [illegible] பெறுவதற்கான வசதி வாய்ப்புக்களையும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை குடாநாட்டில் ஏற்படுத்த இருக்கிறது.

ஏற்றுமதியுடன் தொடர்புடைய சர்வதேச ரீதியிலான நிகழ்வுகளை ஒழுங்குசெய்வதற்கான கண்காட்சி மையம் ஒன்று யாழ்ப்பாணத்தின் அராலிப் பகுதியில் நிறுவப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி சார்ந்த சர்வதேச மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் குடாநாட்டிலும் இடம்பெறுவதற்கு இதுபோன்ற சர்வதேச தரத்திலமைந்த கண்காட்சி மையத்தை அமைப்பது பெரிதும் துணைபுரியும்.

இதுபோன்ற சர்வதேச கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளை நடாத்துவதற்கு சிங்கப்பூர் மற்றும் மலேஷியா ஆகிய நாடுகளையே சர்வதே வர்த்தகத் துறையினர் நாடுகிறார்கள்.

யாழ் மத்தியி கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் 175 வரையிலான உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் கலந்துகொண்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் வர்த்தகத் துறையை மீளக்கட்டியெழுப்புவதில் நடந்துமுடிந்த இந்தக் கண்காட்சி பெரும் பாங்காற்றும்.

இதுபோன்றதொரு சர்வதேச வர்த்தகக் கண்காட்சி குடாநாட்டில் இடம்பெறுவது இதுவே முதன்முறை.

யாழ்ப்பாணத்தில் நடந்துமுடிந்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்திருப்பதாக அதை ஒழுங்கு செய்த இலங்கை கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவை (தனியார்) நிறுவனத்தின் பணிப்பாளர் இமாம் ஹசான் கூறுகிறார்.

சர்வதேச முதலீட்டு வரைபடத்தின் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் வகையில் இந்த வர்த்தகக் கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டதாகவும் இந்தக் கண்காட்சியில் பங்குகொண்டவர்கள் பலர் குடாநாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஆர்வத்துடன் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'இந்தக் கண்காட்சியின் போது நவீன தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. வடக்கு - கிழக்கின் வர்த்த நிறுவனங்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 06

## வினாத்தாள் - II

நேரம் : 1மணி 15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

01. கீழே தரப்பட்ட பாடலை வாசிக்குக.

*** இந்த உலகில் நீங்கள்**
**இயற்றும் தொண்டில் எல்லாம்**
**தந்தை தாயைப் பேணும்**
**தருமம் ஒன்றே பெரிது.**

*** கன்றை நினைத்தே உள்ளம்**
**கசியும் பசுவைப்போல**
**நன்றிபுரிந்தோர் தம்மை**
**நாமும் நினைக்க வேண்டும்.**

*** பருவம் பார்த்து நாங்கள்**
**பயிரைச் செய்தல் போலத்**
**..................... தொடங்கும் போது**
**காலம் பார்க்கவேண்டும்.**


1) இப்பாடலில் இடம்பெறும் 'பருவம்' என்ற சொல்லின் கருத்து யாது?
.............................................................................
2) இப்பாடலில் உள்ள இடப்பெயர்ச்சொல் ஒன்று தருக.
.............................................................................
3) இப்பாடலில் உள்ள பெயரடைச்சொல் ஒன்று தருக.
.............................................................................
4) இப்பர்டலில் வரும் பெயரெச்சம் ஒன்று தருக.
.............................................................................
5) 'தருமம்' என்பதன் எதிர்ச்சொல்லைத் தருக.
.............................................................................
6) இப்பாடலில் வரும் உயர்திணைப் பன்மை முன்னிலைச் சொல் ஒன்று தருக.
.............................................................................
7) உயர்திணை இறந்தகால வினைச்சொல் ஒன்று தருக.
.............................................................................
8) இப்பாடலில் உள்ள உவமானம் ஒன்று தருக.
.............................................................................
9) 'பயிர்செய்தல்' என்னும் தொழிலைக் குறிக்கும் சொல்லைத் தருக.
.............................................................................
10) மூன்றாவது பாடலில் இடைவெளியில் வரவேண்டிய சொல்லை எழுதுக.
.............................................................................


02. பின்வரும் வாக்கியங்களில் உள்ள வழுக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக?
1) தாயின் அண்பைப்போல் வேரு எதுவுமிள்ளை.
.............................................................................
2) மறங்கள் வேறுடன் பிடுங்கி எரியப்பட்டன.
.............................................................................

03. பின்வரும் உவமைத் தொடரை வைத்து பொருத்தமான வாக்கியம் அமைக்குக.
1) ஓடும் புளியம்பழமும் போல
.............................................................................
2) வலையில் சிக்கிய மான் போல
.............................................................................

04. பின்வரும் கருத்தை வெளிப்படுத்தும் பழமொழிகளை எழுதுக.
1) சேமிப்பு செய்வதன் முக்கியத்துவம்
.............................................................................
2) ஒற்றுமை பலம் தரும்.
.............................................................................

05. வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.
1) I CAN SEE A BEAUTIFUL ............................ IN THE POND.
(PARROT, FISH, GOAT)
2) பின்வரும் உருக்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

1.

...................................

2.

...................................

06. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் தருக.
1) Hoppers - ...............................
2) Aeroplane - ...............................
3) Waterfall - ...............................

07. எண்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் தருக.




1 - ..................................................
2 - ..................................................
3 - ..................................................

08. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் தருக.
මාළු - ..................................................

*** 9ஆம் வினா தொடக்கம் 27 ஆம் வினாவரை சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

09. மிகச் சிறிய விதைகளில் ஒன்று,
1) சோளம். 2) கோப்பி. 3) அவரை. 4) கடுகு.

10. ஓர்கிற் பூ பூக்கும் மாதம்,
1) வைகாசி. 2) தை. 3) ஆடி. 4) கார்த்திகை.

11. சூழலுக்கேற்ப தன் உடலின் நிறத்தை மாற்றிக்கொள்வது,
1) அட்டை. 2) மண்புழு. 3) வெட்டுக்கிளி. 4) நத்தை.

12. தாவர இலைகளில் தன் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ளும் பறவை,
1) செம்பகம். 2) தையற்பறவை.
3) மரங்கொத்தி. 4) அணில்.

13. கையில் உள்ள பலாக்காய்ப்பாலை அகற்றப்பயன்படுவது,
1) பெற்றோல். 2) தேங்காய்எண்ணெய்.
3) மண்ணெண்ணெய். 4) டீசல்.


14. கொப்பி, புத்தகங்களைத் தாக்கும் பூச்சி,
1) இராமபாணம். 2) தத்துவெட்டி.
3) மூட்டைப்பூச்சி. 4) எறும்பு.

15. மரவள்ளிக் கிழங்கு சாப்பிட்ட பின் உண்ணக்கூடாத பொருள்,
1) வெந்தயம். 2) இஞ்சி. 3) வெங்காயம். 4) உள்ளி.

16. அம்மை நோய் ஏற்பட்ட ஒருவரை எந்தத்தாவர இலையின்மேல் படுக்க வைப்பர்?
1) வாழையிலை. 2) ஆலமிலை.
3) அரசமிலை. 4) வேப்பிலை.

17.

இவ் உபகரணத்தை பயன்படுத்துபவர்,
1) சர்தி.
2) குயவன்.
3) வைத்தியர்.
4) கொல்லன்.


18. அருகிலுள்ள உடுத்தொகுதியின் பெயர்,

1) பெரும்கரடி. 2) பெருநாய்.
3) ஓரியன். 4) சிறுகரடி.




19. வலைப்பந்தாட்ட விளையாட்டில் பங்குகொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை,
1) 7 வீரர்கள். 2) 11 வீரர்கள். 3) 12 வீரரர்கள். 4) 16 வீரர்கள்.


20. காசுக்கட்டளையை அனுப்ப நாம் செல்ல வேண்டியது,
1) வங்கி. 2) தபாலகம்.
3) கம்பனி. 4) கிராமசேவகர் அலுவலகம்.

21. இலங்கையின் தேசிய இலச்சினையில் காணப்படும் கலசம் குறிப்பது,
1) தூய்மை. 2) தர்மமும் நீதியும்.
3) உலகநிலைப்பாடு. 4) சௌபாக்கியம்.

22. பயிர்களுக்கு சேதம் விளைவிக்காத பூச்சிகளில் ஒன்று,
1) அந்துப்பூச்சி. 2) கும்பிடுபூச்சி.
3) வெட்டுக்கிளி. 4) செதிட்பூச்சி.

23.

இவ் உபகரணத்தின் பெயர் யாது?
1) பாரமானி.
2) மழைமானி.
3) காற்றுவேகமானி
4) காற்றுத் திசைக்காட்டி.

24. அலங்காரத்திற்குப் பயன்படும் தையல்களில் ஒன்று,
1) 
2) 
3) 
4) 

25. அருகிலுள்ள உபகரணத்தின் பெயர்,

1) ஆணித்திருகு.
2) துறப்பணம்.
3) உளி.
4) மூடித்திறப்பான்.

26. இவ் உபகரணத்துடன் தொடர்புடைய வாகனம் எது?

1) துவிச்சக்கரவண்டி.
2) கார்.
3) லொறி.
4) மோட்டார் சைக்கிள்.

27. ஆந்தையின் நிழலைக் குறிப்பது,
1) 
2) 
3) 
4) 

*** பின்வரும் உபகரணங்களின் பயன்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து பொருத்தமான உருவின் கீழ் எழுதுக.**
ஆணியைக் கழற்றுதல், துணிவெட்டுதல், பலகையில் துளையிடல், பலகை வெட்டுதல், தரையின் மட்டத்தைப் பார்த்தல், மின்னைப் பரிசோதித்தல்.

28. 
__________

29. 
__________

30. 
__________

31. 
__________

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13 ஆம் பக்கம் பார்க்க)


32. 400*l* கொள்ளளவு கொண்ட தண்ணீர் தாங்கி ஒன்றை நீர்ப்பம்பியால் நிரப்புவதற்கு 20 நிமிடங்கள் எடுக்கும் எனின், 1*l* நீர் நிரப்ப எவ்வளவு காலம் எடுக்கும்?

(.................................)

33. தரம் 5 வகுப்பில் 198 மாணவர்களை நிகழ்ச்சி ஒன்றுக்காக 6 குழுக்களாக ஆசிரியர் பிரித்தார். எனவே, ஒரு குழுவில் எத்தனை மாணவர்கள் இடம்பெற்றிருப்பார்கள்?

(.................................)

34. அருகிலுள்ள உருவில் தரப்பட்டுள்ள அளவுகளுக்கேற்ப சுற்றளவுகளைக் காண்க?





(.................................)

35. கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு ரயிலில் பயணம் செய்ய மொத்தமாக 7 மணித்தியாலங்கள் எடுக்கும். கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு செல்லும்போது இந்த ரயில் மாகோவில் 25 நிமிடங்களும், மதவாச்சியில் 40 நிமிடங்களும் தரித்து நின்று பிரயாணத்தை மேற்கொள்ளும். எனின், கொழும்பிலிருந்து ரயில் ஓரிடமும் தரித்து நிற்காது தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்ளும் எனின், எத்தனை மணித்தியாலங்கள் எடுக்கும்?

(.................................)

36.





உருவில் குறிப்பிடப்பட்டுள்ள நீளமுள்ள பேனாக்குச்சி நான்கு சமதுண்டுகளாக வெட்டப்பட்டது. எனின், ஒரு சிறிய துண்டின் நீளம் எவ்வளவு?

(.................................)

* யாழ். மாவட்டத்தில் ஒரு பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த ஐந்து வருடங்களில் சித்தியடைந்தவர்களின் விவரங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. அதன்படி 45-48 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| வருடம் | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2003 | 7 |
| 2004 | 11 |
| 2005 | 15 |
| 2006 | 19 |
| 2007 | 23 |




37. இறுதி மூன்று வருடங்களில் சித்தியடைந்தோர் எத்தனைபேர்?

(.................................)

38. ஒவ்வொரு வருடமும் எத்தனை மாணவர்கள் கூடுதலாகச் சித்தியடைகின்றனர்?

(.................................)

39. இதன்படி 2008 ஆம் ஆண்டு எத்தனை மாணவர் சித்தியடைவர் என எதிர்வுகூற முடியும்?

(.................................)

40. அட்டவணையில் தரப்பட்ட முதல் நான்கு வருடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களின் விவரத்தை நிரல்வரைபில் வரைக.

41. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் தசமதானத்தில் தருக.



(.................................)

* பாடசாலைவிட்டுச் செல்லும்போது வாகன நெரிசல் ஏற்பட்டது. ஏனென்று எவருக்கும் புரியவில்லை. அப்பொழுது 'அம்புலன்ஸ்' வண்டி ஒலி எழுப்பியவாறு வந்துகொண்டிருந்தது. அதனால் வாகன நெரிசலுக்கு ஊடாகச் செல்லமுடியவில்லை. தொடர்ந்து நிகழ்ந்திருக்கும் என நீர் கருதும் சம்பவங்களை விவரித்து ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்களில் எழுதுக.

42. .............................................................................................

.............................................................................................

43. .............................................................................................

.............................................................................................

44. .............................................................................................

.............................................................................................

45. .............................................................................................

.............................................................................................

46. .............................................................................................

.............................................................................................

47. .............................................................................................


.............................................................................................

(நிறைவுற்றது)

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்:
திரு.T.திலீப்குமார் & திரு.T.மன்மதகாந்தன்,
கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.

**கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....**
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/071-4273035

# கல்விச்சாலைக் காட்சிகள்......




கைதடி கலைவாணி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது வெற்றிபெற்ற மாணவன் ஒருவனுக்கு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் க.சிறிஸ்கந்தராஜா பரிசில் வழங்குவதையும் அருகில் வித்தியாலய அதிபர் லயன் ப.செல்லத்துரை நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: 121)





மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் மாணவி ஒருவர் ஆசிரியைக்கு மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: 29)



கைதடி நவீல்ட் பாடசாலையின் முன்னாள் அதிபர் ஜே.எஸ்.டேவிட் தம்பதியினர் கனடாவிலிருந்து வருகை தந்து நவீல்ட் பாடசாலைக்கு விஜயம் செய்தபோது கல்லூரி மாணவர்கள் வரவேற்பு நடனம் நிகழ்த்துவதையும் அதிபர் தம்பதிகளை வரவேற்று பாடசாலையின் தற்போதைய அதிபர் எஸ்.மகேந்திரன் உரை நிகழ்த்துவதையும் இரண்டு படங்களில் காணலாம்.

(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதிக்கு பெருமெருப்பில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்களது வர்த்தகத்தை ...ிப்படுத்துவதற்கு இது ...ழிசெய்திருக்கிறது' என்றும் இமாம் ஹசான் கூறுகிறார்.

இந்தக் கண்காட்சியை இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சம்மேளனத்துடன் இணைந்து வரையறுக்கப்பட்ட இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனம் ஒழுங்குசெய்திருந்தது. இலங்கை ரெலிக்கொம் மற்றும் மொபிற்றல் நிறுவனம் என்பன இந்த நிகழ்விற்கு பிரதான அனுசரணை வழங்கியிருந்தன.

'யாழ்ப்பாணத்திற்கான நுழைவாயில்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த வர்த்தகக் கண்காட்சி குடாநாட்டைப் பொறுத்தவரையில் இதுபோன்ற முதலாவது நிகழ்வாக அமைகிறது.

யாழ் - கண்டி நெடுஞ்சாலை மீளவும் திறக்கப்பட்டிருப்பது யாழ்ப்பாணத்து வர்த்தகர்களுக்குப் புதிய பல வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றன என இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சம்மேளனத்தின் தலைவர் குசல விக்கிரமநாயக்க கூறுகிறார்.

வடக்குக், கிழக்கு மாகாணங்களிலுள்ள 'சி' மற்றும் 'டி' தரத்திலுள்ள 350 கிலோ மீற்றர் நீளமான வீதிகளைப் புனரமைப்பதற்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் பொதுமக்கள் கைவிட்டுவிட்டு வந்த வாகனங்களை அவர்கள் சென்று அடையாளங்கண்டு பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சம்மேளனம் அரச படையினருடன் பேச்சுக்களை நடாத்தியிருக்கிறது.

6ஆயிரம் சைக்கிள்கள் 3ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 600 நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பன புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டு கிளிநொச்சிப் பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்றன.

### உட்கட்டுமான மேம்பாடு

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் அங்குள்ள பல்வேறுபட்ட உட்கட்டுமானங்கள் மேம்படுத்தப்படவேண்டி இருக்கிறது. அத்துடன் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

'குடாநாட்டு மக்கள் மத்தியில் பல்வேறு பட்ட திறன்கள் இருக்கின்றன. ஆனால், அதனை ஒழுங்காகச் சீரமைக்கவேண்டும்' என குசல விக்கிரமநாயக்க குறிப்பிடுகிறார்.

கடந்த 30 ஆண்டுகளாக குடாநாட்டின் வர்த்தகச் செயற்பாடுகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்திருந்தன என யாழ். நகர மேயர் திருமதி யோகேஸ்வரி சற்குணராசா தெரிவிக்கிறார்.

ஆனால், குடாநாட்டு வர்த்தகர்கள் தங்களது வர்த்தகச் செயற்பாடுகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக சந்தர்ப்பம் தற்போது கிடைத்திருக்கிறது.

சிமெந்துத் தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலை மற்றும் நெசவுக் கைத்தொழில் உள்ளிட்ட ...தொழிற்துறைகள் வட மாகாணத்தில் செழிப்புற்றிருந்த அந்தக் காலப்பகுதியை தான் நினைத்துப் பார்ப்பதாக அவர் கூறுகிறார்.

நீண்ட பல ஆண்டுகளாக தடைப்பட்டிருந்த தங்குதடையற்ற மின் விநியோகம் தற்போது சீருக்கு வந்திருப்பதாகக் கூறிய திருமதி யோகேஸ்வரி சற்குணராசா பெரும்பாலான வீதிகள் செப்பனிடப்பட்டிருக்கின்றன எனக் கூறினார்.

காங்கேசன்துறை வரையான ரயில் பாதைகள் மீளவும் அமைக்கப்பட்ட பின்னர் பொருட்களை ஏற்றியிறக்குவதற்கான செலவு பெரிதும் குறைவடைய யாழ்ப்பாண வர்த்தகர்கள் அதிக நன்மையடைவார்கள்.

நீண்ட பல வருடங்களாகத் தொடர்ந்த போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பணத்தில் வர்த்தகச் செயற்பாடுகள் புதுவேகம் கண்டிருந்தது.

குடாநாட்டின் தயாரிப்புக்களான பிளாஸ்ரிக் போத்தல்களில் அமைக்கப்பட்ட கோடியல் மற்றும் நெல்லிரசம் போன்ற பானங்கள், கருவாடு, காயவைத்த இறால் போன்றவற்றை சந்தைகளில் அதிகம் காணமுடிகிறது.

புதிய பல உல்லாச விடுதிகள் யாழ்ப்பாணத்தில் உதயமாகியிருக்கின்றன. 30 ஆண்டுகாலப் போரின் பின்னர் தற்போது குடாநாட்டுக்குப் 'படையெடுக்கும்' சிங்கள உல்லாசப் பயணிகளின் வரவைக் கருத்திற்கொண்டு குடாநாட்டு விடுதிகளின் தங்குமிட வசதி 200 அறைகளிலிருந்து 500 அறைகளாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த ஜனவரியில் யாழ்-கண்டி நெடுஞ்சாலை மீளவும் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூர் மற்றும் சர்வதேச உல்லாசப் பயணிகள் 3லட்சம் பேர் குடாநாட்டுக்கு வந்து சென்றிருக்கிறார்கள்.

போக்குவரத்து வசதிகளும் மேம்பட்டிருக்கிறது என்றே கூறவேண்டும். குடாநாட்டுக்கான குளிரூட்டப்பட்ட பேருந்து சேவைகள் தற்போது கொழும்பிலிருந்து இடம்பெற்று வருகின்றன.

வீதிகள் திருத்தியமைக்கப்பட்டிருப்பதாலும் சோதனைச் சாவடிகளில் இறங்கி ஏறவேண்டிய தேவை குறைந்திருப்பதாலும் ஒன்பது மணி நேரப் பயணத்தின் பின்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லமுடியும். தற்போது ஓமந்தைச் சோதனைச் சாவடியில் மாத்திரமே பயணிகள் இறக்கி ஏற்றப்படுகிறார்கள் ★

(நன்றி: புதினப் பலகை)

---


## நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு மூன்றாம் ஆண்டு





**மகாதேவா ஜெயவதனி**
**(வதனா)**
(மு/உடையார்கட்டு மகாவித்தியாலய ஆசிரியை)
அன்னை மடியில்: 13.04.1976
அரக்கன் அழிப்பில்: 12.05.2009

**பொன்னுத்துரை பிரதீப்**
அன்னை மடியில்:
25.01.1984
வான் அரக்கன் அழிப்பில்:
04.04.2007

ஒரு கூட்டின் இரு பறவைகளாக வாழ்ந்து- எமைப் பிரிந்து
தொலைதூரம் சென்றுவிட்டீர்கள் அக்காவும் தம்பியுமாய்
அன்பான என் தெய்வங்களே எந்தனுக்கோ பாசத்தின் துணைவியாய்
பிள்ளைகளுக்கோ அன்பான அம்மாவாய் பள்ளி மழலைகளுக்கோ பிரியமான ஆசிரியையாய்
உறவுகள் சுற்றாத்தார்க்கு மறக்கமுடியாத ஒளிவிளக்காய் ஒளிவீசிய பாசத்தின் உறைவிடமே
ஆசைமுகம் பார்த்து வதனா என்று அழைத்து ஆண்டு ஒன்று ஆகுதம்மா
அம்மா என்று செல்ல மொழி பேச அபியும், சாலியும் துடியாய் துடிக்கிறார்கள்
ஒரு நிமிடம் பிரிந்துவாழ முடியாத உங்களால்
எப்படியம்மா எங்களை விட்டு அதிக தூரம் செல்ல முடிந்தது.

*12.05.2009 அன்று எறிகணைக்கு இரைப்பலி ஆகிவிட்டீர்.*
*ஆண்டு ஒன்றல்ல ஆயிரம் தான் சென்றாலும்*
*என்னுயிர் பிரிந்து உம் அருகில் சேரும்வரை உமைத் தினம் வணங்கிடுவேன்*
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*குறிப்பு: அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு குறிப்பிட்ட முகவரியில் 01.05.2010 இல் நடைபெறும். இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று எமது உற்றார், உறவினர் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*


மகாதேவா
அபிசாந், அபிசாலினி, பெற்றோர்,
உறவுகள், சர்மி, சதுர்சனா.

ஜெயா வெதுப்பகம் அருகாமை, லோட்டன் றோட்,
மானிப்பாய். தொ.பே: 0770545428



## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 21 ★ 07 ★ 1948



உதிர்வு 31 ★ 03 ★ 2010

**செல்லப்பா சிவானந்தம்**

அண்ணா!....
நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து மாதமொன்றாகிவிட்டது
ஆனால்
உங்கள் நினைவுகள்
எம் மனதை விட்டு அகலுமோ
நான் கரங்கூப்பி வேண்டுகின்றேன்
என்னைக் காண வாராய்.

கடந்த (31.03.2010) புதன்கிழமை சுவிற்ஸர்லாந்தில் இறைபதமடைந்த அன்புச் சகோதரனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், சுவிற்ஸர்லாந்து வைத்தியசாலையில் உறுதுணையாக நின்று உதவி செய்தோருக்கும் மற்றும் வெளிநாடுகளில் தொலைபேசி மூலமும், பல வழிகளிலும் உதவியோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (30.04.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவ கோவிலடியன்னை,
...பாடசாலை வீதி,
உடுவில், சுன்னாகம்.
தொ.பே. 0213007969

(97388)

*அன்புச் சகோதரி:*
**செல்லப்பா**
**செல்வநாயகி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியத் திருச்சபையின் சாவகச்சேரி தேவாலயம்



பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் கிறிஸ்து ரட்சகரின் அன்பினால் நெருக்கி ஏவப்பட்ட மிஷனரிமார் அவரது கட்டளையை நிறைவேற்ற மனங்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சுவிஷேசத்தைப் பரப்பத் தொடங்கிய காலம். கடுகு விதைக்கு ஒப்பான சுவிசேச வார்த்தைகள் தென்மராட்சியிலும் பரவக் கடவுள் சித்தங் கொண்டார். இந்து மதாசாரங்களிலே, பாரம்பரிய பழக்க வழக்கங்களிலே மக்கள் திளைத்திருந்த காலம் அது. சுவிஷேச முயற்சிக்கு எதிர்ப்பும் அதிகமிருந்த அக் காலத்திலே பண்டத்தரிப்பில் மிஷனரியாயிருந்த போதகர் ஜோன் ஸ்கட்டர் அவர்களது முயற்சியால் 1834ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் திகதி சாவகச்சேரியில் ஒரு திருச்சபை உதயமாயிற்று. அதன் அங்கத்தவர்களாக எஸ்.கே.யோன், டபிள்யு.மொறிசன், சீஸ்மன், யோசப், மறாயா ஆகிய ஐவரும் செயற்பட்டனர். இவர்களில் சீஸ்மன் பிரசங்கியாகவும், யோன், மொறிசன் ஆகியோர் உதவியாளர்களாகவும் இருந்தனர்.

அக்காலத்தில் திருச்சபையில் கல்விக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் இணைந்த பலர் தமது நோக்கம் நிறைவேறியதும் கிறிஸ்தவ ஆதாரங்களைக் கைவிட்டனர். வேறு பலர் பழைய ஆசாரங்கள் பழக்க வழக்கங்களைக் கைவிட மனமற்றவராயிருந்தனர்.

அந்தக் காலத்திலிருந்த மிஷனரி ஊழியர்கள் சுதேச பாஷைகளைக் கற்று சுதேசிகள் வீடுகளைச் சந்தித்து சுவிஷேசம் கூறினார். மிஷனரி ஊழியர்கள் தமது பணிகளை சாவகச்சேரியின் அயற் கிராமங்களான நாவற்குழி, நுணாவில், மட்டுவில், மீசாலை, மந்துவில், கொடிகாமம் , வரணி, உசன், கெற்பேலி, ஒட்டுவெளி ஆகிய இடங்களில் மேற்கொள்ளத் தொடங்கினர்.

(தொடரும்)

# சாவகச்சேரி - கச்சாய் வீதி புனித அல்போன்சஸ் லிகோரியார் தேவாலயம்

தொகுப்பு: ஜயந்தன்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இவர் இறைபதமடைந்த தினத்தினை அடிப்படையாக வைத்து லிகோரியார் ஆலயங்களின் வருடாந்தத் திருநாள் கணிக்கப்படுகின்றது.

புனித அல்போன்ஸஸ் லிகோரியார் தேவாலயம் இலங்கையிலேயே இங்கு மட்டும் உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆயர் அல்போன்ஸஸ் லிகோரி இறந்த 100ஆவது வருடத்தில் இந்த ஆலயம் 1887இல் இப்பகுயில் கற்களினால் கட்டப்பட்ட சிறிய ஆலயத்திலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்து குருமார் வருகைதந்து தங்கியிருந்து செல்வர்.அக்காலத்தில் குருமார் தங்கிதிற்க வசதிகள் இல்லாததே வழிபாடுகளை யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்து வழிபாடுகளை நடாத்திவிட்டுச் செல்வர். ஆலய நவநாள் உற்சவ காலம், பரிசுத்த வாரம், நத்தார், புதுவருடம், ஞாயிறு கடற்திருநாள்களில் வழிபாடுகளை நடத்த குருமார் வருகைதருவது வழக்கம். சுவாமி ஞானப்பிரகாசம் அடிகள் என்பவர் மாட்டு வண்டியில் வந்து போனது பற்றி தற்போதும் பலர் நினைவுபடுத்துகின்றனர். இங்கு பணிபுரிந்த குருமாரில் வெள்ளைக்கார சுவாமிகளான சார்வே சுவாமியார், சாள்ஸ் சுவாமியார்,ஜெயான் சுவாமியார் போன்றோரை இங்கு வாழும் முதியவர்கள் இன்னமும் மறக்கவில்லை.டேவிட் சுவாமி என அழைக்கப்பட்ட தாவீது அடிகள் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் இங்கு வந்து தங்கியிருந்து பணியாற்றியுள்ளார். இளைப்பாறிய ஆயர் அன்ரனி அடிகள், தற்போதைய ஆயர்தோமஸ் சௌந்தரநாயகம் அடிகள் ஆகியோர் இந்த ஆலயத்தில் உதவிக் குருக்களாகப் பணிபுரிந்துள்ளனர்.

1918ஆம் ஆண்டளவில் ஆலயத்தின் முகப்புப் பகுதி விழும் நிலையில் காணப்பட்டதால் ஆலயக் கட்டடத்தின் மேற்குப்பகுதி இடிக்கப்பட்டு அரைவாசி ஆலயமே எஞ்சியிருந்தது. இதன்பின்னர் பாதுகாப்புக் கருதி இடிக்கப்பட்ட பகுதிகள் தகரத்தினால் அடைக்கப்பட்டிருந்தது. 1960ஆம் ஆண்டில் எஞ்சியிருந்த கட்டடமும் பாதுகாப்பானதாக இல்லாததால் இதனை முழுமையாக இடித்து புதிய ஆலயம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அருட்திரு வில்லவரசிங்கம் அடிகள் புதிய ஆலயம் அமைப்பதற்கென ஆலயத்தினை சொந்தமான தென்னந்தோட்டத்தினை சிறு சிறு துண்டுகளாக்கப்பட்டு காணிகள் அற்ற ஆலயமக்களுக்கு விற்கப்பட்டு நிதி திரட்டப்பட்டது. பிடி அரிசி சேர்த்தல், நிதி சேகரிப்பு என்பன போதிய பயனைத் தராததாலேயே காணிகளை விற்கவேண்டிய நிலையேற்பட்டது.

ஆலயம் முழுமையாக உடைக்கப்பட்டு அதே இடத்தில் புதிதாக ஆரம்பிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதால், ஆலயத்தின் ஒரு பகுதியில் 1938ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கிய பாடசாலைக்கு ஆலயக் காணியொன்றில் கொட்டகை அமைத்து நடாத்தப்பட்டது.

1970ஆம் ஆண்டு ஆலயக் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டது. 1905ஆம் ஆண்டுவரை மிருசுவில் பங்குடன் இணைக்கப்பட்டிருந்த இவ் ஆலயம் 1909ஆம் ஆண்டு நல்லூர் பங்குடன் சுவாமி ஞானப்பிரகாசம் அடிகள் காலத்தில் இணைக்கப்பட்டது. பின்னர் பருத்தித்துறை மறைக் கோட்டத்தின் கீழ் இயங்குகிறது. 1975 ஆம் ஆண்டு இவ் ஆலயத்தை மையமாகக்கொண்டு சாவகச்சேரி பங்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. இப் பங்கின் கீழ் தற்போது நாவற்குழி அற்புத அன்னை தேவாலயம், புனித அந்தோனியார் தேவாலயம், மட்டுவில் லூர்து அன்னை தேவாலயம், மந்துவில் அன்னை வேளாங்கண்ணி தேவாலயம் ஆகியவை செயற்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி பங்கு நிறுவப்பட்டபோது முதல் பங்குத் தந்தையாக அருட்திரு எம்.கருணாகரன் அடிகள் பொறுப்பேற்றார். அதன் பின்னர் 1989ஆம் ஆண்டு அருட்திரு லோரன்ஸ் அடிகள் பொறுப்பேற்ற பின்னர் ஆலய வளாகத்திற்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டதுடன் ஆலய நிர்வாகங்களை மேற்கொள்ள நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது. 1993இல் அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகள் பொறுப்பேற்று பங்கு மக்களால் இறைபணியில் குருத்துவ வெள்ளி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் நினைவாக சிறப்பான அமைப்புடனான போட்டிக்கோ நிர்மாணிக்கப்பட்டது.

இவரது பணிக்காலத்தில் வலிகாமம், யாழ்ப்பாணப்பகுதி மக்கள் தேவாலயத்தில் தஞ்சமடைந்தனர். பெருமளவு மக்கள் தங்கியிருந்ததால் வழிபாடுகளுக்கு ஆலயத்தில் இடம் போதாமையால் ஆலய மண்டபத்தில் பாரிய மேடை அமைக்கப்பட்டு பீடம் நிறுவப்பட்டது.1999ஆம் ஆண்டு பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்ற அருட்திரு ஆனந்தகுமார் அடிகள் காலத்தில் இப்பகுதி சிறார்களின் ஆரம்பக்கல்வி நலன்கருதி குழந்தையேசு முன்பள்ளி நிறுவப்பட்டது. 2000ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு பங்கு மக்களை வலிகாமம், யாழ்ப்பாணம், வடமராட்சி , வன்னி ஆகிய இடங்களில் வாழவைத்தது. அ[illegible] யுத்த அனார்த்தங்களால் ஆலய மண்டபம் முற்றாகவும் குரு[illegible] சேதமடைந்தன. ஆலயம் சேதமடைந்த போதிலும் 100 வருடங்களுக்கு மேல்

பழைமை வாய்ந்த லிகோரியார் சொருபங்கள் இரண்டும் எதுவித சேதமுமின்றி காணப்பட்டன.

2002ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக ரவிச்சந்திரன் அடிகள் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்ற காலத்தில் வன்னியிலிருந்து வந்து ஆலயத்தில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு ஆலயக் காணியில் தற்காலிகக் கொட்டில்கள் அமைத்து வழங்கினர். பங்கு மக்களின் நலன் கருதி கடற்றொழிலாளர் சங்கம் ஆரம்பித்து அதன் அங்கத்தவர்களுக்கு உதவிகளும் வழங்கப்பட்டன. 2003ஆம் ஆண்டு 150ஆவது ஆண்டு நினைவு விழா கொண்டாடப்பட்டது. இக் காலத்தில் மணிக்கோபுரம் கட்டப்பட்டு ஆலய பங்குப் பணிமனை யாழ் ஆயரின் உதவியுடன் அமைக்கப்பட்டு 2005இல் ஆயரால் திறந்துவைக்கப்பட்டது.

அருத்திரு யூட் அமலதாஸ் அடிகள் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்ற பின்னர் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு சேமக்காலையும் புனரமைக்கப்பட்டது. பொதுநோக்கு மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் வின்சன் டி போல் சபையினருக்கான தனியான அலுவலகங்களும் நிறுவப்பட்டது.

தற்போது பங்குத் தந்தையாக அருட்திரு எம்.எல். தயாகரன் அடிகள் பொறுப்பேற்று மண்டப வேலையினை நிறைவு செய்துள்ளார். மேலும் இவரது காலத்தில் பல வளர்ச்சிகளை ஆலயம் கண்டது.

அருட்திரு இரவிச்சந்தின் அடிகள் காலத்தில் பங்குக்கான இளைஞர் மன்றம் அமைத்து அதனூடாக நற்பணிகளை மேற்கொண்டார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் மன்றம் இன்றுவரை வருடத்தில் இரு தடவை இரத்ததானம் வழங்கி சிறந்த நற்பணி மன்றம் என்ற பெயருடன் செயற்பட்டு வருவது பெருமைப்படக் கூடியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10ஆம் பக்கத் தொடர்ச்சி

| தொடர் இலக்கம் | பதிவு இலக்கம் | வகை |
|---|---|---|
| 512 | SRI 129034 | MATE |
| 513 | SRI 130466 | HONDA MD90 |
| 514 | MG-5253 | SUPER CUP |
| 515 | SRI 410783 | MATE |
| 516 | SRI 0019292 | SUPER CUP |
| 517 | 1339666 | HONDA MD90 |
| 518 | 4830 | HONDA MD 90 |
| 519 | 00631 | SUPPER CUP |
| 520 | 8903 | HONDA MD 90 |
| 521 | 14-7164 | HONDA MD 90 |
| 522 | HQ-9122 | HERO HONDA |
| 523 | HE-9788 | BAJAJ |
| 524 | 106-338 | HONDA MD 90 |
| 525 | 140-9366 | HONDA MD 90 |
| 526 | 138-497 | SUPER CUP |
| 527 | HI-6596 | HONDA MD 90 |
| 528 | 141-8263 | HONDA MD 90 |
| 529 | HQ-5546 | BAJAJ |
| 530 | HN-7415 | SUPER CUP |
| 531 | JK-8964 | HERO HONDA |
| 532 | HQ-7370 | HONDA MD 90 |
| 533 | HQ-9628 | HONDA MD 90 |
| 534 | GZ-0072 | SUPER CUP |
| 535 | HW-4301 | BAJAJ |
| 536 | HQ-4673 | BAJAJ |
| 537 | JP-2890 | SUPER CUP |
| 538 | GW-5591 | TVS |
| 539 | HW-2656 | HONDA MD 90 |
| 540 | 00120012 | BAJAJ CT100 |
| 541 | 148-1906 | SUPER CUP |
| 542 | HT-1405 | PASSION |
| 543 | 13-3784 | HONDA MD 90 |
| 544 | HL-1586 | HONDA |
| 545 | UF-9590 | HONDA |
| 546 | HN-2370 | HONDA |
| 547 | 500-6314 | HONDA MD 90 |
| 548 | 4359 | BAJAJ |
| 549 | GN-9798 | HERO HONDA |
| 550 | HE-7214 | BAJAJ |
| 551 | GQ-4880 | HERO HONDA |
| 552 | MN-2937 | SUPER CUP |
| 553 | GQ-0906 | HONDA MD90 |
| 554 | HH-1658 | SUPER CUP |
| 555 | HA-1263 | HERO HONDA |
| 556 | TL-4879 | TVS |
| 557 | A23574 | HONDA MD90 |
| 558 | GQ-2365 | SUPER CUP |
| 559 | 30-24336 | SUPER CUP |
| 560 | JK-4762 | LONCIN |
| 561 | 135-7534 | HONDA MD90 |
| 562 | 3548 | HONDA |
| 563 | 3448 | SUPER CUP |
| 564 | 13-8261 | HONDA MD90 |
| 565 | 125-6080 | HONDA MD90 |
| 566 | 14-5186 | SUPER CUP |
| 567 | 13-5142 | HONDA MD90 |
| 568 | 06714 | SUPER CUP |
| 569 | 118-8068 | HONDA CHALY |
| 570 | 0972 | SUPER CUP |
| 571 | JZ-3297 | TVS |
| 572 | 49-381 | HONDA MD90 |
| 573 | HO-45817 | HERO HONDA |
| 574 | NPMO-4959 | TVS |
| 575 | JF-9065 | HERO HONDA |
| 576 | GA-0242 | YAMAHA |
| 577 | MH-4833 | DAIDO |
| 578 | GV-4613 | YAMAHA |
| 579 | JL-6619 | HONDA MD 90 |
| 580 | MF-2293 | TVS |
| 581 | HF-3851 | HERO HONDA |
| 582 | 106-5128 | HERO HONDA |
| 583 | 105-4123 | HERO HONDA |
| 584 | 124-5064 | HERO HONDA |
| 585 | NPHK-4029 | BAJAJ |
| 586 | 110-4689 | HERO HONDA |
| 587 | HP-0341 | TVS |
| 588 | 13-4175 | MAJOR |
| 589 | JL-0612 | BAJAJ |
| 590 | 137-4882 | YAMAHA |
| 591 | 14-9200 | HONDA MD 90 |
| 592 | 151-690 | MATE C50 |
| 593 | NPGO-85821 | MATE |
| 594 | NPMB-2745 | TVS |
| 595 | NPJL-1511 | DREAM |
| 596 | NPML-3327 | HERO HONDA |
| 597 | NPJU-7349 | SCOOTY PEP |
| 598 | NPHB-9116 | HONDA50 |
| 599 | 1-7584 | CHALY |
| 600 | NPGL-2994 | HONDA 90 |
| 601 | NPWP-6512 | BAJAJ |
| 602 | NPHW-4330 | SUPER CUP |
| 603 | 13-7638 | YAMAHA MD90 |
| 604 | NPMH-0170 | HERO HONDA |
| 605 | 156-5131 | YAMAHA MD90 |
| 606 | 13-2389 | YAMAHA MATE |
| 607 | 12-4248 | HONDA MD90 |
| 608 | NPHR-085 | CBZ |
| 609 | NPMJ-5365 | SCOOTY PEP |
| 610 | 14-5325 | DAIDO |
| 611 | NPMK-9833 | JAJLING |
| 612 | MX-3672 | HERO HONDA |
| 613 | NPJZ-5693 | HERO HONDA |
| 614 | NPHY-4551 | BAJAJ |
| 615 | NPHK-5923 | TVS |
| 616 | NPSW-3754 | HONDA MD 90 |
| 617 | 140-4208 | HONDA MD 90 |
| 618 | 14-1927 | HONDA MD 90 |
| 619 | NPMC-6891 | CBZ |
| 620 | NPGL-9351 | HONDA |
| 621 | NPJC-6563 | HONDA MD 90 |
| 622 | WPGO-0946 | TVS |
| 623 | NPMD-4541 | HERO HONDA |
| 624 | NPMB-3783 | SCOOTY PEP |
| 625 | WPHM-0122 | SCOOTY PEP |
| 626 | 110-4389 | HONDA MD 90 |
| 627 | NUB-0372 | HONDA |
| 628 | EPHT-9391 | KAINANETIC |
| 629 | 13-3980 | HERO HONDA |
| 630 | 157-9025 | YAMAHA |
| 631 | 14-7159 | HONDA |
| 632 | NPJW-8347 | HONDA MD 90 |
| 633 | NPJH-8301 | HERO HONDA |
| 634 | 159-9302 | HONDA MD 90 |
| 635 | NPHH-0734 | HERO HONDA |
| 636 | NPHN-1848 | HERO HONDA |
| 637 | NPUB-0413 | HERO HONDA |
| 638 | 02-8160 | HONDA |
| 639 | NPJN-0613 | BAJAJ |
| 640 | NPHB-0098 | HERO HONDA |
| 641 | 152-7365 | HONDA MD 90 |
| 642 | NPHU-1104 | HERO HONDA |
| 643 | 134-4524 | YAMAHA MATE |
| 644 | 301-4247 | JAJLING |
| 645 | 12-3394 | CD90 |
| 646 | 14-7889 | SUPER CUP |
| 647 | 101-1317 | MATE 50 |
| 648 | EPUP-6584 | HONDA MD 90 |
| 649 | NPJD-8003 | SUPER CUP |
| 650 | 13-3487 | HONDA 50 |
| 651 | NPMB-2274 | BAJAJ |
| 652 | NPHA-6131 | HONDA MD 90 |
| 653 | 13-4313 | TVS |
| 654 | NPGW-5538 | HONDA |
| 655 | NPJA-6693 | HONDA MD 90 |
| 656 | WPHA-7813 | HERO HONDA |
| 657 | NPJG-2942 | HERO HONDA |
| 658 | 500-8420 | HERO HONDA |
| 659 | 13-5970 | HONDA MD 90 |
| 660 | 105-3590 | TVS |
| 661 | NPGW-0444 | HERO HONDA |
| 662 | 105-5492 | SUPER CUP |
| 663 | 110-6243 | MATE |
| 664 | 12-7288 | CHALY |
| 665 | 110-6302 | MATE |
| 666 | 110-3570 | HERO HONDA |
| 667 | 14-4828 | MATE |
| 668 | 101-1234 | HERO HONDA |
| 669 | NPMU-7287 | HERO HONDA |
| 670 | NPMU-9726 | HONDA |
| 671 | NPME-1022 | MYLLAY |
| 672 | 13-4477 | HERO HONDA |
| 673 | 102-2662 | MATE |
| 674 | NPJB-5427 | HERO HONDA |
| 675 | NPME-3438 | HERO HONDA |
| 676 | NPHE-7237 | HONDA |
| 677 | NPHE-7320 | HONDA MD 90 |
| 678 | 101-1166 | LONCIN |
| 679 | 149-8024 | HONDA MD 90 |
| 680 | 151-1335 | MATE C50 |
| 681 | NPME-3450 | MATE C50 |
| 682 | NPHA-6858 | BAJAJ |
| 683 | 302-4582 | CD 50 |
| 684 | NPHX-3869 | TVS |
| 685 | NPGO-4071 | DISCOVER |
| 686 | NPJK-5788 | HONDA 200 |
| 687 | WPME-0112 | SCOOTY PEP |
| 688 | MRHS-2566 | SUPE CUP |
| 689 | JD | HERO HONDA |
| 690 | UI-0133 | HERO HONDA |
| 691 | NPMD-7982 | HERO HONDA |
| 692 | MF-9995 | BAJAJ |
| 693 | 124-6047 | HERO HONDA |
| 694 | MF 3546 | DAIDO |
| 695 | GM 0614 | HONDA M.D 90 |
| 696 | PQ 5737 | HERO HONDA |
| 697 | 9150 | HONDA |
| 698 | 500-7842 | HONDA |
| 699 | J11-9862 | HONDA |
| 700 | 127-4002 | YAMAHA |
| 701 | 500-9302 | HONDA |
| 702 | GS-4317 | HERO HONDA |
| 703 | 153-6079 | HONDA |
| 704 | MP-7803 | JAILING |
| 705 | GR-5863 | BAJAJ BOXER |
| 706 | JA7253 | HONDA M.D 90 |
| 707 | HF2108 | TVS |
| 708 | 136687 | BAJAJ |
| 709 | GN9786 | HONDA M.D 90 |
| 710 | 13-5767 | YAMAYA MATE |
| 711 | 181326 | YAMAHA |
| 712 | NPAT-5148 | HEERO HONDA |
| 713 | 138769 | HONDA M.D 90 |
| 714 | 152-7362 | HONDA M.D 90 |
| 715 | MPHK-3072 | HONDA |
| 716 | MPHV-9292 | TVS |
| 717 | 13-3573 | HONDA M.D 90 |
| 718 | 100-3843 | HONDA M.D 90 |
| 719 | 14-8995 | JAILING |
| 720 | 29103 | YAMAHA |
| 721 | MPMH-5626 | HONDA M.D 90 |
| 722 | 143-7720 | YAMAHA |
| 723 | 1406273 | HONDA M.D 90 |
| 724 | 129798 | YAMAHA |
| 725 | 140885 | HONDA |
| 726 | 136848 | HOMSAN |
| 727 | MPMC-74-40 | DAIDO |
| 728 | 14-3478 | HONDA M.D 90 |
| 729 | 147-4412 | YAMAYA MATE |
| 730 | 14-0380 | LAFAN |
| 731 | 13-6250 | YAMAYA MATE |
| 732 | 130-70010 | YAMAYA MATE |
| 733 | NPJP-0012 | HONDA M.D 90 |
| 734 | NPML-3634 | HEERO HONDA |
| 735 | NPHY-9641 | HONDA |
| 736 | 136721 | YAMAHA |
| 737 | 45519 | HONDA M.D 90 |
| 738 | 97-1322 | YAMAHA |
| 739 | 13-6168 | BAJAJ BOXER |
| 740 | 141-7289 | YAMAYA MATE |
| 741 | MBNP-0438 | TVS VICTOR |
| 742 | 129-5896 | YAMAYA MATE |
| 743 | JHNP-4456 | JAILING |
| 744 | NPHK-3989 | BAJAJ BOXER |
| 745 | 12-2283 | HONDA M.D 90 |
| 746 | 115-9577 | YAMAYA MATE |
| 747 | 13-4363 | MATTE |
| 748 | NPHX-2325 | DAIDO |
| 749 | NPJG-7360 | HONDA |
| 750 | NPGO-3579 | HONDA |
| 751 | 500-5866 | SUPER CUP |
| 752 | NPHI-6689 | HONDA |
| 753 | WPGX-0747 | YAMAHA |
| 754 | 13-5612 | HONDA |
| 755 | NPMB-1442 | MOBILO 100 |
| 756 | NPHI-6555 | SUPER CUP |
| 757 | 14-4056 | MATTE |
| 758 | NPJY-5683 | HERO HONDA |
| 759 | NPJF-3278 | SUPER CUP |
| 760 | NPJY-0717 | HERO HONDA |
| 761 | NPJL-7638 | SUPER CUP |
| 762 | 143-8996 | MATTE |
| 763 | NPHR-9961 | HERO HONDA |
| 764 | NPGO-6068 | HONDA |
| 765 | NPGD-9255 | HONDA |
| 766 | 150-0540 | HONDA |
| 767 | EPHR-727 | HERO HONDA |
| 768 | 513-7249 | HERO HONDA |
| 769 | 137-5700 | HONDA |
| 770 | 13-4156 | HONDA |
| 771 | EPJD-3010 | HONDA |
| 772 | 13-0393 | HONDA M.D 90 |
| 773 | 14-2095 | YAMAHA |
| 774 | CG 0262 | HONDA |
| 775 | NCGM-7234 | HONDA M.D 90 |
| 776 | 13-5968 | HONDA M.D 90 |
| 777 | 101-9699 | HONDA M.D 90 |
| 778 | 160-1205 | YAMAHA MATE |
| 779 | HM1015 | HONDA |
| 780 | HSHP-8993 | KINTARO |
| 781 | GZHP-4859 | YAMAHA |
| 782 | NPMN-1594 | JAILING |
| 783 | 13-9763 | HONDA M.D 90 |
| 784 | NPTL-4841 | HONDA |
| 785 | NPJX-7786 | HERO HONDA |
| 786 | 154-1325 | YAMAHA |
| 787 | GN3211 | HONDA M.D 90 |
| 788 | 128-5342 | YAMAHA |
| 789 | JW 8329 | TVS |
| 790 | MD3205 | HERO HONDA |
| 791 | HB9139 | HERO HONDA |
| 792 | ML 4964 | TVS STAR CITY |
| 793 | 2-2891 | HONDA M.D 90 |
| 794 | NPHY-9762 | SUPPER CUP |
| 795 | NPMN-7591 | YAMAHA MATE |
| 796 | 22-2891 | HONDA M.D 90 |
| 797 | 14-0647 | SUPER CUP |
| 798 | 12-2098 | HONDA |
| 799 | 13-1007 | HONDA M.D 90 |
| 800 | 500-2311 | YAMAHA MATE |
| 801 | 101-6163 | YAMAHA MATE |

மிகுதி நாளைய உதயனில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




**01.11.1990**

★ தென் பகுதியில் அரச படையினர் மற்றும் அப்படைகளின் ஆதரவுடன் மறைமுகமாக இயங்கிய குழுக்களதும் நடவடிக்கைகளினால் காணாமல் போன பொது மக்களது எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் அதிகமாகும் என ஊகம் தெரிவிப்பு.

★ தற்போது எமது கட்சியினரால் வடக்கு - கிழக்கிலோ அல்லது கொழும்பிலிருந்தோ இயங்க இயலாத அளவுக்கு அரசு காரணமெதுவுமின்றி எம் மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கிறது என ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு.

**02.11.1990**

★ மன்னாரில் அரச படையினர் நேற்று முதல் தரை, கடல் மற்றும் ஆகாய மார்க்கமாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆரம்பித்த தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாக நூற்றுக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்துள்ளதாக அச்சம் தெரிவிப்பு.

★ கிழக்கு மாகாணம் மணலாறில் இராணுவ மினிமுகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பத்து இராணுவத்தினர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவிப்பு.

**03.11.1990**

★ சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இந்தியா செல்வதற்கு 'விஸா' வழங்குவதில் தாராளம் காட்டும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம், தமிழர்களுக்கு விஸா வழங்கப் பின்னடித்து வருவதாக இந்தியப் பத்திரிகை 'இந்து' விமர்சிப்பு.

★ மன்னாரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அங்கிருந்து பெருமளவில் இடம்பெயர்ந்த பொது மக்கள் பொது இடங்களில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருப்பதாகத் தெரிவிப்பு.

**04.11.1990**

★ இலங்கையில் மனித உரிமைகள் பெருமளவில் மீறப்படுவதாகவும்,அதனை நிறுத்துவதற்கு சகல தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அமெரிக்க காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

★ இந்தியக் கடவுச் சீட்டுப் பெற்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இரண்டு வார காலத்துக்குள் இந்தியா திரும்பி விட வேண்டுமெனக் காலக்கெடு விதிக்கும் துண்டுப் பிரசுரங்கள் ஹற்றன், நுவரெலியாப் பகுதிகளிலுள்ள தோட்டங்களின் உத்தியோக பூர்வ அறிவித்தல் பலகைகளில் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**05.11.1990**

★ நேற்று முன்தினம் மாவிட்டபுரம் சந்தியில் அமைந்திருந்த படையினரின் காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 15 இராணுவத்தினர் பலியானதாகத் தெரிவிப்பு.

**06.11.1990**

★ யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களை "ராகிங்" செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் அ.துரைராஜா தெரிவிப்பு.

★ ஊர்காவல் படையில் உள்ளவர்கள், படிப்படியாக இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

**07.11.1990**

★ யாழ்.போதனா ஆஸ்பத்திரியின் பாதுகாப்பைச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உத்தியோக பூர்வமாக நேற்றுப் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிப்பு.

★ சுருவில் துறையிலிருந்து அனலைதீவு, எழுவை தீவு நோக்கிச் சென்ற இரு பயணிகள் மோட்டார் படகுகள் மீது நடுக்கடலில் வைத்து கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படகுகளில் பிரயாணம் செய்த பயணிகளுக்கு நேர்ந்த கதி என்னவென்று தெரியவில்லை எனத் தெரிவிப்பு.

**08.11.1990**

★ இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு தோல்வியுற்றதையடுத்து வி.பி.சிங் தமது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

★ யுத்த நிறுத்தம் எதனையும் நாம் எதிர்பார்க்கவில்லை. தற்போதைய யுத்தத் தில் அரசு வெற்றியீட்டவும் இல்லை. நாம் தோல்வியடையவுமில்லை என விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி கரிகாலன் தெரிவிப்பு.

**09.11.1990**

★ இன்று முதல் பழைய இடத்தில் இயங்கவுள்ள யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிட 'பாஸ்' முறை அமுல் செய்யப்படும் எனத் தெரிவிப்பு.

★ வளைகுடாவில் எவ்வேளையிலும் போர் வெடிக்கும் பேராபத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

**10.11.1990**

★ நேற்று முதல் மீண்டும் இயங்கத் தொடங்கிய யாழ்.போதனா வைத்தியசாலைச் சுற்றாடலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் அரசு மேற்கொண்ட இணக்கத்தையும் மீறி முதல் நாளே அரசின் விமானப் படையின் குண்டு வீச்சு விமானமொன்று குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

★ யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைச் சுற்றாடலில் நேற்று நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் தவறுதலாக நடந்ததொன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க தெரிவிப்பு.

**11.11.1990**

★ போர்க்கால நெருக்கடி காரணமாக யாழ்.குடா நாட்டிலிருந்து குடும்பத்துடன் வெளிநாடு செல்வோர் தமது வீடுகளையும் விவசாய நிலங்களையும் தற்காலிகமாக தங்களிடம் ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிவிப்பு.

★ இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக சந்திரசேகர் பதவியேற்பு.

**12.11.1990**

★ வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படுவதை ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கவில்லையென காணி, நீர்ப்பாசன அமைச்சர் பி.தயாரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

★ தொண்டர் நிறுவனங்கள் வவுனியாவில் நகரப் பகுதிக்குள் மட்டுமே தமது நிவாரணப் பணிகளை மற்றும் உதவிகளைச் செய்ய வேண்டும் என அவசர நிவாரணக் குழு வற்புறுத்தி வருவதால் வவுனியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நகரப் பகுதிக்கு வெளியே நிவாரண வேலைகளை மேற்கொள்ளத் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**13.11.1990**

★ யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கடந்த எட்டு மாதத்துக்குரிய மருந்து வகைகள் இதுவரையில் அனுப்பி வைக்கப்படாததால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

★ தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமது வழிக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் சில முடிவுகளை ராஜீவ் காந்தி அவர்கள் மீது திணிக்க முயன்றதாகவும் ஆனால் அது அவரால் இயலாது போய் விட்டதாகவும் தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு.

**14.11.1990**

★ வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாதென மத்திய போக்குவரத்துச் சபை மறுத்துள்ளதால் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்கும் ஏழு சாலைகளிலும் பணிபுரியும் ஊழியர்கள் நிர்க்கதி நிலையில் சிரமமுறுவதாகத் தெரிவிப்பு.

★ ஆறு வாரங்களுக்கு ஒரு தடவை பொலிஸ் மற்றும் இராணுவச் சேவைக்கு 3500 பேர் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப் படவுள்ளதாக பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

**15.11.1990**

★ இலங்கை அரசுக்கு யுத்த வாகனங்கள், நீண்ட தூரம் பாயும் ஆட்லறி ஷெல்கள் என்பவற்றை மலிவு விலையில் சீனா வழங்கியிருப்பதாக கொழும்புச் செய்திகளை ஆதாரம் காட்டித் தெரிவிப்பு.

★ அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லீம் பகுதிகளை உள்ளடக்கித் தனியான ஒரு முஸ்லிம் மாகாணசபை அமைக்க அரசு ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என அமைச்சர் பி.தயாரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

# மேதினத்தைக் கொண்டாட அரசியல் கட்சிகள் ஆயத்தம்

கொழும்பு,ஏப். 30

எதிர்வரும் முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தை (மேதினம்) விமரிசையாகக் கொண்டாடுவதற்கு இலங்கையின் அரசியற் கட்சிகள் மற்றும் தொழிலாளர் அமைப்புகள் பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேதின ஊர்வலக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு மாநகரசபை விளையாட்டு மைதானத்தில் மதியம் ஒரு மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

ஜே.வி.பியின் மேதின ஊர்வலக் கூட்டம் அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையில் பொறளை 'கம்பெல் பார்க்' இல் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி அதன் மேதின ஊர்வலக்கூட்டம் குறித்து கட்சியின் செயற்குழுவுடன் கூடி ஆராய்ந்துள்ளது.

அதேநேரம் புதிய இடதுசாரி முன்னணி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் மேதின ஊர்வலக் கூட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது. அக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தலைமையில் கொழும்பில் புறக்கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக மதியம் 2 மணிக்கு ஆரம்பமாகின்ற ஊர்வலம், கொழும்பு குணசிங்கபுரவில் மாலை 4 மணிக்கு நிறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், இலங்கைப் பெருந்தோட்ட ஊழியர் சங்கத்தின் மேதினக் கொண்டாட்டங்கள் அன்றையதினம் கொட்டகலவில் இடம்பெறவுள்ளன. (அ-சி)

# இலங்கையருக்கு தஞ்சம் மறுப்பு: ஆஸி. அரசுக்கு கடும் கண்டனம்

கொழும்பு, ஏப்.30

அரசியல் தஞ்சம் கோரிவரும் இலங்கையர்களுக்குப் புகலிடம் வழங்கும் நடவடிக்கைகளை ஆஸ்திரேலியா இடைநிறுத்தி உள்ளமைக்கு ஆஸ்திரேலிய கத்தோலிக்க சமூக நீதிப் பேரவை நேற்றுக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அப் பேரவையின் தலைவரான பேராயர் கிறிஸ்தோபர் சௌண்டேர்ஸ் இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அகதிகளுக்கு அரசியற் தஞ்சம் வழங்கும் நடவடிக்கைகளை அண்மைய நாள்களில் ஆஸ்திரேலிய அரசு இடைநிறுத்தி உள்ளமை மிகுந்த மனவருத்தத்தைத் தருகின்றது என்று தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் முக்கியமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அகதிகளுக்கு அரசியற் தஞ்சம் வழங்கும் நடவடிக்கையில் ஆஸ்திரேலியா எவ்வளவோ விடயங்களைச் செய்யவேண்டி உள்ளது. உலக மக்களில் கணிசமான தொகையினர் அகதிகளாக அந்தரிக்கின்றார்கள். உலக சனத்தொகையில் 4 கோடி 20லட்சம் பேர் வரையிலானோர் சொந்த இடங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒரு கோடியே 60 லட்சம் பேர் வரையிலானோர் வெளிநாடுகளில் அரசியற் தஞ்சம் கோரியுள்ளார்கள். ஆனால் மனிதாபிமான அடிப்படையில் ஆஸி.அரசு வெறும் 14 ஆயிரம் பேர் வரையானோருக்கு மாத்திரம் வருடாந்தம் தஞ்சம் வழங்குகின்றது. ஆஸியின் மனிதாபிமான நிகழ்ச்சித் திட்டத்தின் போதாமையை இது காட்டுகின்றது.

ஆஸியில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளுக்கு விரைவில் அரசியற் தஞ்சம் வழங்குவதாக முன்பு அரசு வாக்குறுதி வழங்கி இருந்தது. ஆனால் அந்த உறுதிமொழியைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டது.

ஆஸ்திரேலியாவில் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் கோர்டின் தடுப்பு முகாம் இலங்கை, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்த அகதிகளை அடைத்து வைப்பதற்காக மீண்டும் திறக்கப்படுகின்றமை வரவேற்க முடியாத விடயமாகும். (சி)

# இரண்டாம் கட்ட உதவி குறித்துப் பேச சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள்

## அடுத்த மாதம் இங்கு வந்து ஆராய்வர்

கொழும்பு, ஏப்.30

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட முதலாம் தவணை நிதி உதவியைத் தொடர்ந்து, இரண்டாம் தவணை நிதி உதவியை வழங்குவது தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதற்காக அந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் அடுத்தமாதம் இலங்கை வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட எம்.பி. அஜித் பெரேராவே இத்தகவலைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட முதலாம் தவணை நிதி மக்களுக்குப் பயன்தரும் வகையில் பயன்படுத்தப்படவில்லை. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக அந்நிதி பயன்படுத்தப்படும் என்று அரசு கூறிய போதிலும், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. இந்நிலையில் அந்நிறுவனத்திடமிருந்து அரசு இரண்டாம் தவணை நிதியை எதிர்பார்க்கின்றது.

இந்த இரண்டாம் தவணை நிதியை வழங்குவது தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதற்காக நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அடுத்த மாதம் இலங்கை வருகின்றனர்.

முதலாம் தவணை நிதி எவ்வாறு செலவிடப்பட்டது என்று அந்தப் பிரதிநிதிகள் ஆராய்ந்து பார்ப்பர். அதனைத் தொடர்ந்து அடுத்த கட்ட நிதியை வழங்குவது தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்துவர் - என்றார். (அ-சி)

# ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.30

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பிவைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**பன்னாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

சி.ரமணன் - 7ஏ,பி,சி, ஜெ.சஞ்சீவன் - 4ஏ,2பி,சி,எஸ், சோ.ரேக்கா - 3ஏ, 3பி, சி, 2எஸ், கு.சாங்கேயன் - 3ஏ, 2பி, 2சி, 2எஸ், த.எதிர்நாயகம் - 3ஏ, 2பி, 2சி, 2எஸ், க.கஜிதா - 3ஏ, 2பி, சி,3எஸ், சி.சிவகங்கா - 3ஏ, பி, 3சி, எஸ்.

**பொதுரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்**

த.தனுசியா - 4ஏ, பி, 2சி, எஸ், பு.மிதிலன் - 2ஏ, பி, சி, 3எஸ், அ.திசானி - ஏ, பி, சி, 3எஸ்,பா.சுரேஷ்குமார் - ஏ, பி, 3சி, எஸ், மு.வேனுஷா - ஏ, 2பி, சி, 2எஸ்.

**சென். அன்ரனிஸ் கல்லூரி**

ப.சிவதீபன் - 3ஏ, பி, 4எஸ், இ.வினோ - 2ஏ, பி, 2சி, 3எஸ், சி.விதுஷன் - 2ஏ 2சி,3எஸ்,அ.அல்பிரட் நியூட்டன் - 2பி, யே.அன்ரன் கஜீஸ்காந் - 3ஏ, 3 எஸ்,செ.நிதர்சன் - 2ஏ, 2பி, 4எஸ், சன் - 2ஏ, சி,3எஸ், ந.றாஜன் - 4ஏ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

விளாத்தியடி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரியுடைய ஜெயபாலசிங்கம் பரணிதரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (901442886V), மானிப்பாய்க்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையில் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும்.

## T.V. விற்பனைக்கு

புத்தம் புதிய
LG-26"LH20R - LCD MOLALE T.V.
உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
காலையடி, பண்டத்தரிப்பு
தொலைபேசி - 0214907128


KÄRCHER

## அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்த்தர்கள் தேவை

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஜெர்மனிய கார்ச்சர் சுத்திகரிப்பு உபகரணங்களை சந்தைப்படுத்த தகுந்த விநியோகஸ்த்தர்கள் தேவை. கேந்திரமுக்கியத்துவமான நகரப்பகுதியில் காட்சியறை வசதிகள் கொண்டவர்கள், தமது சுய விபரக்கோவையை அனுப்பவும். அதில் தமது வியாபாரத்தின் அளவு, வங்கி கடன் உறுதி, ஆட்பலம் எவ்வாறான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பவற்றை விவரமாக பின்வரும் விலாசத்திற்கு எழுதவும்.

**The Advertiser**
**P.O. Box 26, Colombo.**

www.adinnovationslk.com


### பிரியாவிடையும் வரவேற்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப். 30

மதகுருமார்களுக்கான பிரியாவிடையும் வரவேற்பு நிகழ்வும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு நுணாவில் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் திருகோணமலை அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபைக்கு மாற்றலாகிச் செல்லும் யாழ்.பிராந்தியக் குரு வண. பி. ஜே.சூரியகுமாருக்கும் நுணாவில் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபைக்கு மாற்றலாகி வரும் வண. ஏ.எஸ்.தேவராசாவுக்கும் நடைபெறவுள்ளன. (50-204)

## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 16
திகதி - 28.04.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **E** அதிர்ஷ்ட இலக்கம் **05** வெற்றி இலக்கம் **5 9 0 1 5**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | E 05 5 9 0 1 5 | ரூ. 22,623,345.00 | பரிசு - |
| 1 பரிசு | 05 5 9 0 1 5 | ரூ. 2,000,000.00 | பரிசு 01 |
| 2 பரிசு | 5 9 0 1 5 | ரூ. 100,000.00 | பரிசு 01 |
| 3 பரிசு | 9 0 1 5 | ரூ. 10,000.00 | பரிசு 20 |
| 4 பரிசு | 0 1 5 | ரூ. 1,000.00 | பரிசு 186 |
| 5 பரிசு | 1 5 | ரூ. 50.00 | பரிசு 1774 |
| 6 பரிசு | 5 | ரூ. 20.00 | பரிசு 17034 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 5 9 0 1 | ரூ. 1,000.00 | பரிசு 20 |
| 8 பரிசு | 5 9 0 | ரூ. 100.00 | பரிசு 178 |
| 9 பரிசு | 5 9 | ரூ. 50.00 | பரிசு 1770 |
| 10 பரிசு | E | ரூ. 20.00 | பரிசு 6915 |
| 11 பரிசு | E 05 | ரூ. 100.00 | பரிசு 827 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. **3,262,680.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 247[illegible]2, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 22,623,345.00




# யாழின் இனிமையை நாம் அறிவோம்

## பாட்லீட் பினான்ஸ்

306A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரியில் இன்று திறந்து வைக்கப்படுகிறது

இலங்கையில் ஆங்கிலேய ஆட்சி நிலவிய காலத்திலிருந்து 100 வருடங்களுக்கு மேலாக வாடிக்கையாளர் சேவையில் ஈடுபட்டுள்ள பாட்லீற் குழுமத்தின் ஓர் அங்கமான பாட்லீற் பினான்ஸ் லிமிடெட் தற்போது யாழ்ப்பாண மக்களுக்கும் அதன் சேவையை அளிக்கிறது

யாழ்ப்பாணக் கிளையில் ஒரே கூரையின் கீழ் விரிவான அடிப்படையில் நிதித் திட்டங்களும் சேவைகளும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும். நிலையான வைப்புக்கள், லீசிங், நிதிச் சேவைகள் மற்றும் வாடிக்கையாளர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் அனைவரினதும் எதிர்காலத்தை திட்டமிடும் வகையில் சொத்துக்களை முகாமைப்படுத்தி மேலும் பெருகச்செய்ய புதிய முறையிலான 'செல்வ முகாமைத்துவ' சேவை ஆகியன இவற்றில் அடங்கும்.

எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்துக்கு வந்து உண்மையான தொழில் நேர்த்தியுடன் கூடிய சிநேகபூர்வ சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

BARTLEETFINANCE LTD BBB- (RAM)*
2வது மாடி, பாட்லீட் ஹவுஸ், 65, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2.
பக்ஸ்: 011 5333494 மின்னஞ்சல்: sanjeewas@bartleet.com
இணையதளம்: www.bartleetgroup.com

BARTLEETGROUP
Strength of a Century

நிதி நிறுவனங்கள் 1988ன் சட்ட இல. 78ன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையால் பதிவு செய்யப்பட்டது.

* RAM - மலேசிய வகைப்படுத்தல் நிறுவனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - கொக்குவில் இந்துக்கல்லூரிகளின் பெருந் துடுப்பாட்டப்போட்டி இன்று ஆரம்பம்

ரசிகர்களிடத்தே பெரும் எதிர்பார்பை ஏற்படுத்தியுள்ள யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி- கொக்குவில் இந்துக்கல்லூரிகள் மோதும் இருநாள் துடுப்பாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

'இந்துக்களின் போர்' என வர்ணிக்கப்படும் இப்போட்டி இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

2008 ஆம் ஆண்டு ஆரம்பமான இத் துடுப்பாட்டப் போட்டி வருடமொரு முறை நடைபெறுகின்றது. இதுவரை இரு போட்டிகள் நடந்து முடிந்துள்ள நிலையில் இதுவரை எந்த அணியுமே வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்ட ரசிகர்களிடத்தேயும் இரு கல்லூரிகளினதும் மாணவர்களிடத்தேயும் பழைய மாணவர்களிடத்தேயும் பெரும் வரவேற்புப் பெற்ற இப்போட்டி உள் நாட்டில் வாழ்பவர்களிடத்தே மட்டுமல்லாது புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களிடத்தேயும் பெரும் ஆவலையும்- எதிர்பார்ப்பபையும் ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது வருடமாக இன்று ஆரம்பமாகும் இப் போட்டியில் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய சாதாரண நிலைமையால் ஏராளமான பார்வையாளர்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு வருடமாக (1910 -2010) இந்த ஆண்டு அமைந்துள்ளது. இந்துக்களின் போரில் இம்முறை எப்பாடுபட்டாவது வெற்றிபெற்று அவ்வெற்றியை நூற்றாண்டு கண்ட தமது கல்லூரித் தாய்க்கு சமர்ப்பித்துவிட வேண்டும் என்ற வைராக்கியத்துடன் கொக்குவில் இந்துதுக் கல்லூரி அணி களமிறங்குகின்றது.

கே.நிறோஜன் தலைமையில் களமிறங்கும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் அனுபவம் வாய்ந்த சிறந்த துடுபாட்ட வீரர்களும் பந்து வீச்சாளர்களும் உள்ளனர்.

அணித்தலைவர் கே.நிறோஜன் : நான்கு வருட அனுபவம் கொண்டவர் என்பதுடன் வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் சுழல் பந்து வீச்சாளரும் ஆவார்.

என்.கார்த்திக்: உப அணித்தலைவரான இவர் வலது கைத் துடுப்பாட்ட வீரரும் சிறந்த வேகப்பந்து வீச்சாளரும்

கே.ஜனுதாஸ் 3 வருடங்களாக அணிக்காக விளையாடி வரும் இவர் வலது கைத் துடுப்பாட்ட வீரராகவும் சுழல் பந்து வீச்சாளராகவும் ஜொலிப்பவர்.



போட்டி நடைபெறும் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தின் தோற்றம்

வி.ஜனார்த்தனன் 2009 ஆம் ஆண்டின் இந்துக்களின் போருக்கு அணிக்குத் தலைமை தாங்கிய இவர் 4 வருட அனுபவம் நிறைந்தவர். வலது கைத் துடுப் பாட்ட வீரரான இவர் விக்கெட்காப்பாளரும் ஆவார்.

எஸ்.சாம்பவன்: 3 வருடங்களாக அணிக்காக விளையாடுவதுடன் வலது கைத் துடுப்பாட்ட வீரரும் மிகவேகப் பந்து வீச்சாளரும்.

கி.பவிராஜ் : வலதுகைத்துடுப்பாட்ட வீரரும் வேகப்பந்து வீச்சாளரான இவர் கடந்த இரு வருடங்களாக அணியில் இடம் பிடித்திருப்பவர்.

கே.இராகுலன்: வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் வேகப் பந்து வீச்சாளருமான இவர் கடந்த இரு வரு டங்களாக அணியில் இடம் பிடித்தவர்.

பி. பங்குஜன்: சுழல்பந்து வீச்சாளரும் வலது கைத்து டுப்பாட்ட வீரரும் அணியில் இரண்டா வது முறையாக இடம் பெற்றுள்ளார்.

கே.பிரதீப்: வலது கைத் துடுப்பாட்ட வீர ரும் சுழல் பந்து வீச்சாளரும் 2 ஆவது தடவை யாக இந்துக் களின் போரில் களமிறங்கியுள்ளார்.

ஆர். பவித்திரன்:- இரண்டாவது வருடமாக பெரும் துடுப்பாட்டப் போட்டியில் களமிறங்கும் இவர் சிறந்த வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் வேகப்ந்து வீசளரும்.

எஸ்.உத்தமகுமாரன்: 3 ஆவது வரு டமாகக் களமிறங்கும் இவர் சிறந்த சுழல் பந்துவீச்சாளர்.

கே. திவாகர், கே. சிலேஜன், எல்.ஆதித்தன் எஸ்.சுஜிதரன் ஆகியோர் இம்முறை அறிமுக வீரர்களாகக் களமிறங்குகின்றனர்.

சீரிய பயிற்சியாலும், அனுபவம் நிறைந்த வீரரங்களாலும் மிளிரும் கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றியைத் தனதாக் குமா ....?

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு சற்றும் சளைக்காத அணியாக ஆர்.நிறோசன் தலைமையில் களமிறங்குகிறது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணித்தலைவர்

ஆர்.நிறோஜன்: மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரரான இவர் வேகப்பந்து வீச்சாளரும் ஆவார். அணியைச் சிறந்த முறையில் மிளிரச்செய்யக்கூடியவரும் ஆவார்.

எஸ். செந்தூரன்: வலதுகைத் துடுப்பாட்ட வீரரான இவர் அணியின் முதல் வரிசைத் துடுப்பாட்ட வீரரும் சுழல் பந்து வீச்சாளரும்.

கே.டிலஷ்ன்: வலதுகை முதல்வரிசைத் துடுப்பாட்ட வீரரும் அணியின் விக்கெட் காப்பாளரும் ஆவார்.

அனோஜன் : சுழல்பந்து வீச்சாளரும் கீழ்வரிசைத் துடுப்பாட்ட வீரரும்,

பிரதாபன்: வலதுகைத் துடுப்பாட்ட வீரர்

கிருசோபன்: சிறந்த வேகப்பந்து வீச்சாளரும் கீழ்வரிசைத் துடுப்பாட்ட வீரரும்.

அணியில் இடம்பிடித்துள்ள ஏனைய வீரர்களான எஸ். அகிலதர்சன், கே.அமலன், எஸ்.மயூலக்ஷன், கே. கஜீபராஜ் ஏ.பார்த்தீபன் எஸ்.சஜீபன், எஸ்.சுதன், எல் ரகோஜன், எஸ்.சக்தீபன், ஜெ.ஜெஸ்மினன், ஜி.சிவச்சந்திரன் ஜி.சஜீதன் ஆகியோர் இந்துக்களின் போரில் முதன் முறையாகக் களமிறங்குகின்றனர்.

தொகுப்பு: தமிழரசன்

ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை எனும் நிலையில் களமிறங்கும் இரு அணிகளும் சமநிலையில் போட்டியை முடித்துக் கொள்ளுமா? அல்லது எந்தக் கல்லூரிவெற்றி பெற்று வரலாறு படைக்கப்போகின்றது.....? என்பது நாளை தெரிந்து விடும்.

ஊடக அனுசரணை உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஐ.சி.சியின் ருவென்ரி-20 உலகக்கிண்ணம் இன்று ஆரம்பம்; 12 நாடுகள் பலப்பரீட்சையில்

விளையாட்டு ரசிகர்களுக்கு இவ்வாண்டு மிகச் சிறப்பான ஆண்டு எனின் மிகையாகா. இப்போதுதான் முடிந்தது ஐ.பி.எல். ருவென்ரி 20 பெருந்திருவிழா.

முடிந்த கையோடே இன்று மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகின்றது. ஐ.சி.சியின் ருவென்ரி -20 உலகக்கிண்ணப் போட்டிகள்



பிரட் லீ

இப்போட்டிகள் முடிவடைந்து ஒருமாத காலப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளன உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்.

எது எவ்வாறு இருந்த கிரிக்கெட் ரசிகர்கள் இம்முறை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக்கொண்டிருக்கின்றார்கள். (கூடவே சூதாட்டக்காரர்களும்)

இன்று ஆரம்பமாகும் ஐ.சி.சி. ருவென்ரி -20 உலகக்கிண்ணப் போட்டியில் 12 அணிகள் களமிறங்குகின்றன. 'ஏ', 'பி', 'சி', 'டி' எனும் 4 பிரிவுகளில் இவ்வணிகள் மோதவுள்ளன.

'ஏ' பிரிவில் - பாகிஸ்தான் பங்களாதேஸ் அவுஸ்திரேலியா

'பி' பிரிவில் - இலங்கை, நியூசிலாந்து சிம்பாவே

'சி' பிரிவில் தென்னாபிரிக்கா, இந்தியா ஆப்கானிஸ்தான்

'டி' பிரிவில் மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து, அயர்லாந்து அணிகள் பங்கேற்கின்றன. ஒருஅணிக்கு அதே குழுவில் உள்ள மற்றைய அணியுடன் 2 போட்டிகள் வழங்கப்படும்.

**சுப்பர் 8 போட்டிகள்**

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களையும் பிடிக்கும் அணிகள் 'ஏ1', 'ஏ2', 'பி1', 'பி2', 'சி1', 'சி2', 'டி1', 'டி2' எனப்பிரிக்கப்படும். இதில் பங்கு பெறும் அணிகள் குழு 'ஈ', குழு 'எப்' எனப் பிரிக்கப்படும்.

குழு 'ஈ' இல் 'ஏ1', 'பி2', 'சி1','டி2' குழு 'எப்' இல் 'ஏ2', 'பி1', 'சி2', 'டி1' ஆகியன மோதும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் சுப்பர் -8 போட்டிகளில் பங்கு பெறும் ஒவ்வொரு அணிகளும் மற் றைய அணிகளுடன் ஒரு போட்டியைச் சந்திக்கும்.

எதிர்வரும் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் அரையிறுதிப் போட்டிகளும் 16 ஆம் திகதி இரவு இறுதிப்போட்டியும் நடைபெறும்.

**வெற்றிக்கிண்ணம் யாருக்கு?**

12 அணிகள் இம்முறை புதிதாகக் களமிறங்குகின்றன. ஆப்கானிஸ்தான் இம்முறை புதிதாகக் களமிறங்குகின்றது. இருந்த போதிலும் கிரிக்கட்டில் தம்மை ஜாம்புவான்களாக நிரூபித்துள்ள அணிகளுகே இம்முறை அரையிறுதி வாய்ப்பு இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இலங்கை போன்ற அணிகளுடன் சொந்த மண்ணில் களமிறங்கும் பலத்துடன் மேற்கிந்தியத்தீவுகளுக்கும் அதிரடி காட்டும் தென்னாபிரிக்க அணிக்கும் இம்முறை அரையிறுதிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றும் இறுதிப்போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கே வாய்ப்பு அதிகம் எனலாம்.

ஐ.பி.எல். போட்டிகளில் இம்முறை இந்திய வீரர்கள் தமது திறமையை வெளிப்படுத்தியிருந்தனர். அத்துடன் ஐ.பி.எல். போட்டிகள் சிறந்த பயிற்சியாகவும் அமைந்தது.

பாகிஸ்தான் அதிரடி வீரர் அப்ரிடியின் தலைமையில் இளம் வீரர்களின் பட்டாளமாய் களமிறங்கும். இந்த அணியில் ருவென்ரி -20 போட்டியில் அனுபவம் மிக்கவர்களே களமிறங்குகின்றனர்.

பயிற்சி ஆட்டத்தில் சிம்பாவேயிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்த அவுஸ்திரேலியா இம்முறை பந்துவீச்வில் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது. போதாக் குறைக்கு பீரெட்லீயும் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இருந்தபேதிலும் இவருக்குப் பதிலாக ஐ.பி.எல் லில் டெக்கான் அணிக்காக சிறப்பாக விளையாடிய ரியான் ஹரிஸ் இடம் பெறுவார். என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருந்தபோதிலும் அவுஸ்திரேலிய வீரர்கள் அதிரடியாகச் செயற்பட்டு போட்டியை தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளக்கூடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை அதிரடியாக ஆடி வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கும் வல்லமை படைத்தவர்கள் இலங்கையணியில் சிறந்த அதிரடி வீரர்களும் அனுபவ வீரர்களும் உள்ளனர். இருந்தபோதும் துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை உண்டு.

சொந்த மண்ணில் களமிறங்கும் மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் இம்முறை புதிய தெம்புடன் களமிறங்குவதால் ஏனைய அணிகளுக்கு சவால் விடுக்கும் வகையில் போராடும் என்றே கூறலாம். எது எப்படியாயினும் கிரிக் கெட் ரசிகர்களுக்கு பெருவிருந்து படைக்கும் வகையில் இப் போட்டிகள் அமையும் என்பது உறுதி. ஆனால் ருவென்ரி - 20 போட்டிகளின் முடிவை ஒரு சில வீரர்களே மாற்றியமைத்து விடக்கூடியவர்கள் என்பதால் போட்டியின் முடிவு அதிரடியாக மாறி விடக்கூடியது எனலாம்.

* * *

## இன்றைய ஆட்டங்கள்

குழு 'பி'
நியூசிலாந்து - இலங்கை
இடம் : கயானா
நேரம்: இரவு 10.30

ICC WORLD TWENTY20 WEST INDIES 2010

குழு 'டி'
மேற்கு இந்தியத் தீவுகள்- அயர்லாந்து
இடம் : கயானா
நேரம்: அதிகாலை 2.30

ALDI ELECTRONICS
No. 15, Stanly Road, Jaffna.
தரமான கணனி,
கணனி உதிரிப்பாகங்கள்
கைக்கடிகாரங்கள் (ஆண், பெண்)
பழைய, புதிய தமிழ் ஆங்கில திரைப்படங்கள்
பாடல்கள், காமெடிகள்
MP3 MP4 Player
DVD s VCDs MP3s Audio CDs
Computer Software Games CDs

அஜந்தாஸ்
ரெக்ஸ்ரைல்ஸ்
புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்
54, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
25,4 ஆம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி நிலைக்கு வழிகாட்டுவது இறைவழிபாடு

மனம்,வாக்கு,காயம் என்பன மூலம் இறைவழிபாடு செய்தும் பக்தி நிலையை அடையலாம். ஒவ்வொரு அவயவமும் இறைவனுக்கே தொண்டு செய்ய வேண்டுமென நாவுக்கரசர் திருவங்கமாலை என்னுந் திருப்பதிகத்தில் கூறியுள்ளார். குறிப்பாகச் சொல்லின், தலை இறைவனை வணங்க வேண்டும். வாய் வாழ்த்த வேண்டும். கண்கள் இறைவன் திருவுருவத்தையே காணவேண்டும். செவிகள் இறைவன் திருப்புகழைக் கேட்க வேண்டும். நெஞ்சம் எப்போதும் ஈசனை நினைக்க வேண்டும். இத்துடன் வாக்கினால் இறைவன் திருநாமத்தை ஜெபிக்க வேண்டும். ஜெபத்திற்கு வலிமை பொருந்திய கருவியாயுள்ளது 'நமசிவாய' என்னுந் திருவைந்தெழுத்து மந்திரம். இம்மந்திரத்தின் பெருமையைத் திருமுறைகளிற் காண்கிறோம். ''நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே'' எனச் சுந்தரரும், ''நற்றுணையாவது நமச்சி வாயவே '' என அப்பரும், ''நாதன் நாமம் நமச்சி வாயவே'' எனச் சம்பந்தரும், நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க'' என மணிவாசகரும் பாடியிருக்கின்றார்கள். நமசிவாய மந்திரத்தை 'சிவாய நம' என்றும் 'சிவாயசிவ' என்றும் 'சிவ சிவ' என்றும் உச்சரிக்க இறைவனருட் கிருபை ஊற்றிலெழும் நீர் போலப் பொங்கி வளரும்.

ஞானக்கதிர்

பக்தி வளர வேண்டுமானால் மனத்தை ஒரே வழியில் நிறுத்தி இறைவன் திருவடியிற் பதித்து வைத்திருக்க வேண்டும்.இதை யோக நிலை என்றும் கூறலாம். ஆனால் ''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது'' எனத் தாயுமானவர் கூறுகிறார். என்றாலும் சலிப்பின்றி நாள்தோறும் யோகப் பயிற்சியில் ஈடுபட வேண்டும். இறுதியில் மனம் சிறிது சிறிதாகக் கட்டுக்குள் அடங்கும். இதற்கு உதவியாயிருப்பது இறைவனிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்பே. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' இறைவணக்கம் செய்ய வேண்டுமென ஞானசம்பந்தரும்,'கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே'' என மணிவாசகரும் நமக்குப் புத்தி புகட்டுகின்றார்கள்.

இவ்வாறு இறைவணக்கம் செய்தாற்றான் பக்தி வளரும்.


## மணமகன் தேவை

27 வயதுடைய, யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ரோகிணி நட்சத்திரம், 74 கிரக பாவமுடைய ஆசிரியைக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு - 0789403241

(92232)

## கடை வாடகைக்கு விடப்படும்

196,நாவலர் வீதியில் அமைந்துள்ள தேநீர்சாலை சகல தளபாடங்களுடனும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
196, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
0212229387

(97716)


## வாசகர் திருமுகம்

### போக்குவரத்துச் சீர்கேடு

தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் சொந்த வாகனங்களிற் பயணம் செய்ய முடியாதவர்கள் போக்குவரத்துக்கு பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். ஏதோ காரணங்களினால் இ.போ.ச. தனது சேவையைத் திறம்பட ஆற்றுவதில்லை. மக்களுக்குள்ள அடுத்த தெரிவு சிற்றூர்திதான்.

பயணம் செய்வோர் எண்ணிக்கை இரண்டு ஆண்டுகளுக்குள் இரண்டு மடங்காகிவிட்டது. ஆனால் அதே நேர இடைவெளியில் அதே அளவுள்ள வாகனங்களைக் கொண்ட சிற்றூர்திச் சேவை நடைபெறுகிறது. இவ்வளவு வாகனங்களைக் கொண்டு திருப்தியான சேவையை வழங்க முடியாது. குறைந்த நேர இடைவெளியில் சேவையை நடத்தினால் ஓரளவுக்கு சமாளிக்கலாம். ஆனால் கட்டுப்பாட்டுடன் நடப்பதற்கு மறுக்கின்ற சிற்றூர்தி ஓட்டுநர்களைக் கொண்டு அதைச் செய்வது சாத்தியமில்லை. ஆகவே கூடுதலான பயணிகள் செல்லக்கூடிய வாகனங்களைச் சேவையில் ஈடுபடுத்துவதுதான் இதற்கான ஒரே வழி. ஆனால் எதைப் பற்றியுமே சிந்திக்காமல் நடப்பதைக்கண்டு கொண்டு வந்த பழக்கத்தில் சனங்கள் எக்கருத்தையுமே தெரிவிக்கிறார்கள் இல்லை. துறைசார் நிபுணர்களோ அல்லது சமூகப் பிரக்ஞை உள்ளவர்களோ எதுவுமே பேசுகிறார்கள் இல்லை. இப்படியே போனால் என்ன முடிவு? சிந்திப்போமா?

கொக்குவில். வை.சந்திரபாலன்.

### கீரிமலையில் பிதிர்க்கடன்களை நிறைவேற்ற எந்த விதமான தடையும் இப்போதில்லை

சென்ற பல ஆண்டுகளாக அதியுயர் பாதுகாப்புவலயம் என்ற பெயரில் மக்கள் கீரிமலை புனித பிரதேசத்தில் ஆலய வழிபாட்டுக்கும் இறந்தவர்களின் பிதிர்கடன்களை நிறைவேற்றவும் முடியாமல் இருந்தமை யாவரும் அறிந்த விடயம்.


தற்பொழுது மக்கள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கும் புனித தீர்த்தக் கேணியில் நீராடவும் இறந்தவர்களின் பிதிர்க்கடன்கள் ஆகிய அந்தியேஷ்டி மற்றும் அஸ்தி கரைத்தல் ஆகியனவுக்கும் கடற்படை, பாதுகாப்புப்படை, பொலிஸ்பிரிவு, இவர்களின் பூரண ஒத் துழைப்புடன் எதுவித தடையுமின்றி தற்பொழுது நடைபெற்று வருகின்றன. மேலும் தென்பகுதியிலிருந்து சுற்றுலாப் புயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது.

இவ்வேளையில் சில பத்திரிகைகளிலும் இணையத்தளம் மூலமும் கீரிமலையில் பிதிர்க் கடன்களினை நிறைவேற்றவும் புனித தீர்த்தக்கரையிலுள்ள கேணியில் நீராடவும் தடை செய்யப்பட்டுள்ளது என்ற உண்மையற்ற வதந்திகள் பரப்பப்படுகின்றன. இது மிகவும் வருந்தத்தக்க விடயம் ஆகும். எனவே இவ்வாறான தவறான கருத்துக்களை நம்பவேண்டாம் என்று அறியத் தருகிறேன்.

கீரிமலை. பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா ( இந்துமத குரு)


## யாழ்ப்பாணத்தில்

எமது புதிய கிளை அலுவலகம் ஒன்றினை
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்
கௌரவ அஜித் நிவார்ட் கப்ரால்
அவர்கள் இன்று (30.04.2010)
திறந்து வைக்கின்றார்
என்பதனைப் பெருமையுடன்
அறியத் தருகின்றோம்.




CIFL
பலம் மற்றும் நேர்மை

## சென்ரல் இன்வெஸ்ட்மென்ட் அன் ஃபினான்ஸ் லிமிட்

## CENTRAL INVESTMENTS & FINANCE LTD.

(இலங்கை மத்திய வங்கியில் 1988 நிதிச் சட்டத்தின் 78 ஆவது பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டது)

56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0214 921101, 0214 921102 Fax : 0214 920292 Email: jaffna@cifl.lk Web: www.cifl.lk

தலைமை அலுவலகம்: 181/ 1A தர்மபால மாவத்த, கொழும்பு - 07,தொ.பே: 0112698888, 0114419419

கிளை அலுவலகங்கள்: கண்டி, காலி.

எமது வலையமைப்பு

★ தலவாக்கலை ★ மகியங்கனை ★ அனுராதபுரம் ★ கம்பஹா ★ குருநாகல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை வகுப்புக்கள் இரு இடங்களில் ஆரம்பம்**

* யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே) சனி, ஞாயிறு 1-5 வரை திங்கள்-வியாழன் வரை தினமும் 2.30-5 வரை
* கிறிஸ்ரல் (நெல்லியடி) ஞாயிறு ஆரம்பம் (2/5) ஞாயிறு இலிருந்து வெள்ளிவரை 3-5.30 வரை.

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள CENTURY, FUJI CENTRAL வகை சினிமா புரொஜக்டர்கள். அவற்றின் உதிரிப்பாகங்கள், LENSES, றெக்டிபயர், றபர் ஸ்கிறீன் என்பனவும் தியேட்டர்களுக்குரிய கதிரைகளும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776173835


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சண்முகநாதன் நேற்று (29.04.2010) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் (ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் பங்கையற்செல்வி, தயாநிதிதேவி, ரதிதேவி (PHT), கிருபாதேவி(PHT) ஆகியோரின் அன்புத் தாயாரும் நந்தகுமார், சத்தியசீலன் (தபாலதிபர், சங்கானை), கெங்கேஸ்வரன், புலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தனராஜ், கீர்த்தனா, சுதாகரன்-சோபனா, சோபிகா, மாதுளன், அர்ச்சனா, ஆதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2010) வெள்ளிக்கிழமை காலை 8மணியளவில் இடம்பெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அருளகம்",
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (97737)

தகவல்:
ந.சத்தியசீலன்
(மருமகன்)

## சபாபதிப்பிள்ளை மயில்வாகனம்



பெரிய மதவடி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை மயில்வாகனம் நேற்று (29.04.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் தவயோகராசா (ஜேர்மனி), பகீரதி (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்), காலஞ்சென்ற தயாவதி, வசந்தி (பிரான்ஸ்), சுமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தரஞ்சினி (ஜேர்மனி), கேசவன் (ஓமான்), ரவி (பிரான்ஸ்), பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மிதிலா, திவ்யா, யசோதா, கோவர்த்தனன், கோபிகா, நிர்மலி, குருநிலவன், இன்மொழி, அமிதா, ஜனுசா, ஹரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரிய மதவடி,
உடுவில் கிழக்கு,சுன்னாகம். (97729)

தகவல்:
பகீரதி கேசவன்
(மகள்).

# குடாநாட்டில் நேற்றுமுதல் கூட்டு ரோந்து ஆரம்பம்

குடாநாட்டில் கடத்தல், கப்பம் கோரல், கொலை போன்ற குற்றச் செயல்களை உடனடியாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக பொலிஸ், இராணுவக் கூட்டு ரோந்து நேற்று ஆரம்பமாகியது.

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸாரும், படையினரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பொதுமக்கள் படையினரால் அறிவுறுத்தப்பட்டனர். (ஒ-1-224-236)


**கணனி திருத்தம்**

உங்கள் கணணிகள் பழுதடைந்து விட்டனவா? உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித்தருகின்றோம். (Computer Repair) தொடர்பு: 0771529515

**பொருளியற் கல்லூரி**
யாழ்ப்பாணம்

**English Medium A/L -2012**
வர்த்தகப் பிரிவு
நாளை ஆரம்பம்: 01.05.2010 சனி 1 p.m

பொருளியல்: S.வரதராஜன்
கணக்கீடு: B.முகுந்தன்
வணிகக்கல்வி: V.முரளி

அனுமதிகளை அன்றைதினம் பெற்றுக்கொள்ளவும்.

**பொருளியற் கல்லூரி**

| நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ்.வீதி, இணுவில். |
|---|---|

சனி, ஞாயிறு

A/L-2012 கலை, வர்த்தகப்பிரிவு

**புதிய பிரிவு, பிரிவு II**

ஆரம்பமாகி நடைபெறுகின்றன. சகல பாடங்களும் ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படுகின்றன.

Note: இடம் நெருக்கடி காரணமாக இன்னும் சொற்ப மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். உங்கள் அனுமதிகளை தாமதியாது பெற்றுக் கொள்ளுங்கள்.

**முகாமைத்துவ வேலை வாய்ப்பு**

DS-Max கிளை நிறுவனத்திற்கு முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் தேவை. ஆண்கள் மட்டும். வயதெல்லை 18-30 , அனுபவம் தேவையில்லை.

* தகைமை: G.C.E O/L, A/L
* தொடர்புகளுக்கு: 021 490 5001
021 490 0001

**வாடகைக்கு**

நிறுவனங்களுக்கு, NGO இற்குமான சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் உள்ளது. ஆண் அலுவலர், மாணவர்களுக்கு உணவுடன் கூடிய தங்குமிட வசதிகள் உண்டு. தொடர்பு: 0779578244


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரி சொபியா விஸ்வலிங்கம்

(வைத்திய கலாநிதி)



[விஸ்வபாரதி மெடிக்கல் கிளினிக்-174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.]

திருமதி மேரி சொபியா விஸ்வலிங்கம் (வைத்தியக் கலாநிதி) நேற்றுமுன்தினம் (28.04.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் (வைத்தியக் கலாநிதி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை சவிரிமுத்து - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகளும், சங்கர், ஷியாமி, ஜனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜிதா, நிமலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பீட்டர், ஹசேன், மைசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான இம்மானுவல், சூசைப்பிள்ளை, யோசுதாசன் பாலசிங்கம், றெஜினா, கொன்சி மற்றும் அன்ரன், ஞானமலர், றோஸ்மேரி, வெலிங்டன், மனோகரன், றோஸ் வினிவிறெட், றஞ்சன், றஞ்சினி, றாகினி, சாந்தி, ராஜி, ஜூலி, பொபி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராதா, ஜமுனா, பாலகாந்தன், சுட்டி, சாள்ஸ், எமில்டன், ராஜன், சிறி, நந்தன் ஆகியோரின் மைத்துனியும், ஜூடி, ஷமி, ஜொனி, யூட், ஜட்ஜ், லூடி, டான்ரி, டுலால், டிலான், ஸ்ரெபனி, சோந்திரின், ப(f)ளன், வென்டி, ஜேசன், பிறையன், கற்றி, பிறெண்டா, மைக், ஹரி, சுஜி, ஹென்லி, பில்லி, லவ்லி, இவின், எலிசா ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.04.2010) வெள்ளிக்கிழமை இறுதிச்சடங்குகளுக்காக யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, (இல.8, இராசாவின் தோட்டம்) நாளை (01.05.2010) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R.) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர், கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.8, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (97745)

தகவல்:
குடும்பத்தினர்.
021-222-8972

## திருமதி வேதநாயகம் ஞானரத்தினம்



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாம்பிள்ளை-ஞானம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி திருமதி வேதநாயகம் ஞானரத்தினம் கடந்த (28.04.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற R.A.வேதநாயகத்தின் அன்பு மனைவியும் V.X. புஸ்பராசா (லண்டன்), புஸ்பலதா (ஆசி ரியை, R.C,ஆனைக்கோட்டை), புஸ்பநாயகம் (லண்டன்), புஸ்பமாலா (ஆசிரியை, உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தாயும் இந்திராணி (லண்டன்), தோமஸ் இம்மானுவல்(பொலிஸ் பரிசோதகர், மருதானை பொலிஸ் நிலையம்) ஆகியோரின் மாமியாரும் போல்பிரியன், அன்றூடிலான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற S.A.குணரத்தினம் மற்றும் திரேசம்மா செல்வநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் எட்வேட் செல்வநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி குணரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.05.2010) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நல்லடக்கத்திற்காக அடைக்கலநாயகி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சுவாஞானபதி',
உயரப்புலம், ஆனைக்கோட்டை. (97743)

தகவல்:
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜரட்ணம் பாக்கியம்

பருத்தித்துறை, புலோலிதெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், மணல்தறை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் பாக்கியம் 28.04.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-புதியாள் தம்பதியரின் மருமகளும் இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கராஜா, இரத்தினம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கம்மா, தையல்நாயகி, ஆறுமுகம், காலஞ்சென்றவர்களான கணேசு, மகேஸ்வரி, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சித்திரதாசன், நியூட்டன் (கனடா),ரேகணா, சுகுணா, வசந்ததாசன் (கனடா), கமலதாசன் (கனடா), பாரதிதாசன் (கனடா), விமலதாசன் (கனடா), ஜெனதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பூங்கொடி, அல்போன்ஷா (கனடா), தங்கராஜா (சந்திரன்), சாந்தினி(கனடா), ஜெயமதி (கனடா), சர்மிளா (கனடா), சுபாஜினி (கனடா), ஜெராட் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் உதயராஜ், காலஞ் சென்றவர்களான உதயசுதன், உதயேந்திரன் மற்றும் உஷாந்தினி, அனோஜா, அர்ஜீன், ஸ்ரெபான், இந்துஜா, அஜித், அபிராமி, சிந்துரா, தபிஸ், பர்விந்த், சுவேதா, திவ்யா, ஆகாஷ், சஜன், சரண், ஷெரீனா, கியூரினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இந்துஜன், பிரிதா, அபிவர்ஷன், தனுஷாந்தன், தாட்சாயினி, தட்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணல்தறை ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி/567090)

தகவல்:
[illegible]
மருமக்கள்.

# நீங்காத நினைவுகளில்....

5 ஆம் ஆண்டு



3 ஆம் ஆண்டு



திதி:
அபரபக்க
துதியை
(30.04.2010)

**கார்த்தி கிருஷ்ணபிள்ளை**
மலர்வு 22.11.1938
உதிர்வு 26.04.2005

**கிருஷ்ணபிள்ளை ஜெயாதரன்**
மலர்வு 08.05.1963
உதிர்வு 11.06.2007

ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம்துயரம்
ஏங்கள் குடும்ப ஒளி விளக்குகளாய் திகழ்ந்து ஒளி வீசிய
எம் குலவிளக்குக்ளின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குமாரியோடை,
கரணவாய், கரவெட்டி.

மனைவி,
மக்கள்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 508
சீட்டிழுப்பு திகதி: 28.04.2010

வெற்றி எழுத்து: **S** வெற்றி இலக்கங்கள்: **36 37 45 62**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 13,649,484.80 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000/- | 139 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரு. 1,000/- | 272 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 100/- | 6506 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரு. 50/- | 3699 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 93030 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரு. 30/- | 14955 |

**இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரு. 5,094,800.00**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
**ரு. 13,649,484.80**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
10 ★ 05 ★ 1998



தாய் மண்ணில்
10 ★ 05 ★ 2009

**செல்வி பொன்னுத்துரை தர்மினி**

*திதி: 30.04.2010*

ஆகி விட்டது ஓராண்டு ஆறவில்லை எம் துயரம்
எம் துன்பத்திலிருந்து ஆறுதல் அளித்திரே!
உம் பிரிவுத் துயரை எவ்வாறு தாங்குவது

**இன்று (30.04.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத் தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*உன் பிரிவால் துயருறும்:*
பொன்னுத்துரை (பளை), லீலா (பளை), மோகன் (கனடா), குகன் (தருமபுரம் புனர்வாழ்வு நிலையம், வவுனியா), மோகனா, தர்ஷன், தபன்சன், தனுஷா மற்றும் வினோ, ஜெனு, ஜெனுஷாந், பாவளவன்.

வல்லிக்குட்டி பொன்னுத்துரை,
முல்லையடி, பளை,
கிளிநொச்சி.

(97715)

## கணக்காளர் தேவை

யாழ்.நகரின் மத்தியில் இயங்கும் "யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மசி" நிறுவனத்திற்கு, முன் அனுபவம் நிறைந்த கணக்காளர் தேவை. (ஆண்/பெண்) 02.05.2010 ஞாயிறு காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

**இடம்: சன்றைஸ் மெடி கிளினிக், 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**பிள்ளையார் இன் 'A' உல்லாசப் பயணிகள் தங்குமிடம் (A Grade Approved by the Ceylon Tourist Board)**

## Receptionist Cum Accounts Clerk

மேற்படி வேலைக்குக் கணனி அனுபவமுள்ள பெண்பிள்ளை தேவை. மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இன்றும் நாளையும் நேரில் வரவும்.

Pillaiyar Inn,
31, Manipay Road,
Jaffna.

Tel. 0212222829
Fax. 0212224449
E.Mail: Pillayar.in@gmail.com

## வரலாறு

### A/L 2012

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 01.05.2010
யாழ்.பொருளியற்கல்லூரியில் (சனி, ஞாயிறு)
=> பிரிவு I => 8 - 9 A.M.
=> பிரிவு II => 11 - 12 A.M.
இணுவில் பொருளியற்கல்லூரியில் - 12 - 1 P.M.
சித்தன்கேணி பாரதியில் - 2 - 3 P.M.
புகழ் கல்வி நிலையம் சுதுமலை செவ்வாய், வெள்ளி - 5 - 6 P.M.
* புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
* ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

**ஆசிரியர்: K.சுதன்**
B.A. (HONS) HISTORY (Spl) (Dip. in BDU)

## வேலையாள் தேவை

கடைகளுக்கு பாண் விநியோகம் செய்வதற்கு வேலையாள் தேவை.

**சீரரத்தினம் பேக்கரி**
வல்வெட்டித்துறை.
0776985188 (92284)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Original No - 01 Broiler கோழிக் குஞ்சுகள் 04.05.2010 அன்று விநியோகிக்கப்படும். முற்பதிவு செய்ய வும்.

தொடர்பு - **நல்லூர் பாம் செண்டர்**
இல.19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்
எமது கிளை - **சுட்டி பாம்**,
வட்டுக்கோட்டையிலும் பெற்றுக் கொள்ளவும்.
T.P :- 021 321 6290

*குறிப்பு* - மிக விரைவில் Prima No - 01 பேட்டுக் குஞ்சு, கோழித்தீன், மருந்து வகை என்பன பெற்றுக் கொள்ளலாம். எமது T.P :- 021 222 6944

(97750)

## புதிய இடத்தில் எமது சேவைகள்

பொலிமர் றபர் ஸ்ராம் 200ரூபா
பிறீ இங்க் றபர் ஸ்ராம் 500ரூபா
வரிக்கணக்கோ, அளவோ இல்லை. உங்கள் விருப்பம் போல் இக் கட்டணத்தில் செய்து கொள்ள யாழ். நகரில்.



S.S.பசோதரன் ஆட்ஸ்,
381U, K.K.S வீதி, யாழ்ப்பாணம்,.
(வண்ணை சிவன் கோயில் அருகில்)

## பழைய மாணவர்கள் துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களுக்கிடையே நடைபெறவிருக்கும் ருவென்ரி - 20 துடுப்பாட்டப் போட்டி அணியில் பங்குபற்ற விரும்பும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் இன்று (30.04.2010) வெள்ளிக் கிழமை பி.ப. 5 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு சமுகம் தரவும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. **அதிபர்.**

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
15 ★ 03 ★ 1933



உதிர்வு
21 ★ 04 ★ 2004

அமரர் **ஐயம்பிள்ளை கந்தையா**

*திதி: 30.04.2010*

ஆண்டுகள் ஆறு சென்றாலும் ஆறவில்லை எங்கள் மனம்
நூறாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகளே - எங்கள்
உள்ளத்தில் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற மண்கும்பான் வெள்ளைப் புற்றடி
வீரகத்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ந.மு.:20/33, ஆஸ்பத்திரி வீதி,
வைரவர் கோயில் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
நி.மு.: 4ஆம் வட்டாரம்,
மண்கும்பான், வேலணை.

*உங்கள் பிரிவால் வாடும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

*மலர்வு: 02.06.1937*



*உதிர்வு: 31.03.2010*

திருமதி
**சுப்பிரமணியம் இராசபூபதி**

அன்பையும் பாசத்தையும் பொழிந்து
நல்வழிகாட்டி எம்மை வளர்த்து வாழவைத்த
எம் இதயங்களில் நிறைந்த இனிய உயிரே
மறக்குமோ எம் நெஞ்சு உம்மை என்றும்.

*31.03.2010* அன்று எம்மைத்தவிக்கவிட்டு சிவபதமடைந்த எமது தாயின் பிரிவுச்செய்தியைக் கேட்டு நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அன்னாரது மறைவையொட்டி பல்வேறு வழிகளில் எமக்கு உதவி, ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று *(30.04.2010)* வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
தொ.பே: 0776630497

மக்கள், மருமக்கள், பேரன்,
பேர்த்திமாருடன் குடும்ப உறவுகள்.

(சி-567065)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்:
1936.02.13

மறைவு:
2010.03.31



**அமரர் இராமர் செல்லையா**

**(ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர், உரும்பிராய்)**

கடந்த *31.03.2010* அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் இராமர் செல்லையா அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று *(30.04.2010)* வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (97730)

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
07.06.1950

ஆண்டவன் அடியில்:
11.05.2009



*அமரர்*
**ஐயம்பிள்ளை சோதிநாதன்**

*(உரிமையாளர், சோதி மாளிகை, ஓம் முருகா தங்க மாளிகை)*

அப்பா உங்கள் திருமுகம் காண
ஆவலாய் காத்திருந்த வேளை
கண்ணிமைப் பொழுதினிலே காலனவன்
காற்றாய் கவர்ந்து சென்றது என்ன மாயமோ?
விழித்திருந்த உன் திருமுகம்
பாதி வழியில் உதிர்ந்து விட்டதா?

*'மரணம் என்பது நியதிதான் - ஆனால் அது தருணம் இல்லையே உங்களுக்கு....'*

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பர சுந்தரேஸ்வரர் சமேத சௌந்தராம்பிகை பாதாரவிந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

[illegible]ப்பனை, காரைநகர்.

**உங்கள் பிரிவால் வாடும்:**
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வரவேற்பதையும், கோத்தபாய படை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதையும், நயினாதீவு நாகதீப விகாரையில் சமய வழிபாட்டில் பங்குபற்றுவதையும் படங்களில் காணலாம்.

# கொள்ளை, கடத்தல்களுடன் தொடர்புடையவர்களை மக்கள் அடையாளம் காட்ட முன்வரவேண்டும்

## குற்றச்செயல்களை ஒழிக்க அதுவே வழி என்கின்றார் நீதிவான் ஜோய் மகாதேவா

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்தும் போது அவர்களை அடையாளப் படுத்துவதில் பொதுமக்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இவ்வாறான ஒத்துழைப்பு இல்லாமையினாலேயே அவர்களுக்கு தண்டனை வழங்க முடிவதில்லை. இதனாலேயே குற் றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜோய் மகிழ் மகாதேவா. சித்தன்கேணி 'ஸ்கைலைன்'தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது, இன்று குடாநாட்டில் கொள்ளை, கடத்தல் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்தவும் உரியவர்களை இனங்காணவும் அவர்களுக்குத் தண்டனை வழங்கவும் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. பொதுமக்கள் அவர்களை அடையாளப்படுத்த முன்வராததாலேயே சந்தேக நபர்களை விடுவிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இன்று பெரும்பாலானோர் 'கமெராவுடன் கூடிய கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதால், சட்டவிரோத சம்பவங்களைப் படம் பிடித்து உரியவர்களிடம் சமர்ப்பித்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க அது உதவும்.

சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களை பொதுமக்கள் பயத்தின் காரணமாக அடையாம் காட்டத் தயங்குகின்றனர். இதே நிலைமை நீடித்தால் பொதுமக்களாகிய நீங்களும் இவ்வாறான சம்பவங்களுக்குத் துணை போவதாகவும் சட்ட விரோத செயல்களையும் ஊக்குவிப்பதாகவும் அமையும் இந்த நிலைமை மாறவேண்டும் -என்றார். (ஒ-3-93)

# யாழ். நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.30

இலங்கை பெண்கள் வர்த்தக கைத்தொழில் மன்றத்தினர், யாழ் பொது நூலகதிற்கு ஒரு தொகுதி பெறுமதிமிக்க நூல்களை நேற்றுக் கையளித்துள்ளனர்.

'சித்தாலேப' நிறுவனத்தின் பணிப்பாளர் வித்தியானி ஹெட்டி ஹொட தலைமையிலான இந்தப் பெண்கள் பிரதிநிதிகள் மூன்று நாள்கள் விஜயமாக யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்களே யாழ். பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கத்திடம் நூல்களைக் கையளித்தனர்.

அதுமட்டுமன்றி இந்தப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றப் பிரதிநிதிகள், உடுவிலிலுள்ள யாழ்ப்பாணம் பெண்கள் வர்த்தக கைத்தொழில் மன்றப் பிரநிதி களையும் சந்தித்து கலந்துரையா டியுள்ளனர்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட கைத்தொழில் முயற்சிகள் தொடர்பாக இந்த சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ.14)

# ஊடகங்களுக்கு எதிராக செயற்பட்டேனா? நிரூபித்தால் பதவியிலிருந்து விலகுவேன்!

## அமைச்சர் மேர்வின் சில்வா சபதம்



கொழும்பு, ஏப்.30

''ஊடகங்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் நான் செயற்பட்டமை நிரூபிக்கப்பட்டால் உடனடியாகப் பிரதி அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்வேன்.''

- இவ்வாறு ஊடகத்துறைப் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா நேற்றுப் பகிரங்கமாக சபதம் செய்தார்.

அவர் பிரதியமைச்சர் பதவியை நேற்று சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்றார். அவ்வைபவத்தில் உரையாற்றிபோதே இவ்வாறு கூறினார். அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

ஊடகவியலாளர்களுக்காக எனது உயிரைத் தியாகம் செய்யவும் தயங்கமாட்டேன். ஊடகங்களுக்கு எதிராக கடந்த காலங்களில் நான் செயற்பட்டேன் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் உடனடியாக இப்பிரதியமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிடுவேன். ஊடகவியலாளர்கள் அனைவரும் என்னுடன் நேரடித் தொடர்புகளைப் பேண முடியும். ஊட கவியலாளர்களின் முறைப்பாடுகளை யும், அபிப்பிராயங்களையும் பெற்றுக் கொள்ளும் வகையில் அமைச்சில் பிரத்தியேகப் பிரிவு ஒன்றை உருவாக்க உள்ளேன்.

'சிரச' ஊடக நிறுவனம் ஏராளமான பிழைகளை மேற்கொண்டுள்ளது. நான் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக இனிமேல் வீட்டில் மனைவியுடன் ஒன்றாகப் படுப்பதைக்கூடத் தவிர்க்கப் போகிறேன். ஊடகவியலாளர்கள் எனக்கு இரவில் நேரடித் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு என்னுடன் உரையாட முடிகின்றமையை உறுதிப்படுத்துவதற்காகவே இப்படியொரு தீர்மானத்தை எடுத்துள்ளேன்'' - என்றார்.

# யாழ்நகர் திறப்பு விழாக்களில் மத்திய வங்கி ஆளுநர்

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரோல் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று காலை 9மணிக்கு சென்ரல் இன்வெஸ்ட்மன் பினான்ஸ் நிறுவனத்தின் கிளையை திறந்துவைக்கும் ஆளுநர் முற்பகல் 10.30 மணிக்கு பாட்லீட் பினான்ஸ் நிறுவனத்தின் கிளையைத் திறந்துவைக்கவிருக்கின்றார். (ஒ-1)

# மேர்வினின் நியமனத்துக்கு ஊடக அமைப்புகள் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 30

ஊடகத்துறைப் பிரதி அமைச்சராக மேர்வின் சில்வா நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக சர்வதேச ஊடக உரிமைகள் அமைப்புகள் தொடர்ந்தும் போர்க் கொடி தூக்கி வருகின்றன.

ஊடகத்துறை பிரதி அமைச்சராக மேர்வின் சில்வா நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு ஓரிரு நாள்களுக்கு முன்னர் கண்டனம் வெளியிட்டதுடன், அவரை உடன் பதவி நீக்கவேண்டுமெனக் கோரியும் இருந்தது.

இந்நிலையில், தற்போது பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு என்கிற மற்றுமொரு சர்வதேச ஊடக உரிமைகள் அமைப்பு மேர்வின் சில்வா ஊடக பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டமை மூலம் இலங்கையின் ஊடகத்துறையின் எதிர் காலம் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுகின்றது என்று நேற்று அறிவித்துள்ளது.

ஊடகத்துறை பிரதி அமைச்சராக மேர்வின் சில்வா நியமிக்கப்பட்டுள்ளமையை ஏற்க முடியாதிருப்பதாக அவ்வமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

# குடிதண்ணீர்ப் பிரச்சினை: கிராம மக்களின் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஏப்.30

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்நோக்கும் கிராமங்கள், இடங்கள் பற்றிய தரவுகள் திரட்டப்பட்டு வருகின்றன.

இருபாலை தெற்கு, கிழக்கு, புத்தூர் கிழக்கு, நீர்வேலி, பன்னாலை, புத்தூர் கிழக்கு, வாதரவத்தை, ஆவரங்கால் கிழக்கு, அச்சுவேலி தெற்கு ஆகிய கிராமங்களில் வழமையாகவே குடிதண்ணீர் பிரச்சினை நிலவி வருகின்றது.

இப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் கணிசமான அளவில் நடைமுறையில் உள்ளது. (ஒ-121)

# முப்படைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதி விளக்கிக் கூறினார்.

அதன்பின்னர் காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்குச் சென்ற கோத்தபாய, வடபிராந்திய கடற்படைத் தளபதியுடன் கலந்துரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர் யாழ். நகருக்கு விஜயம் மேற்கொண்ட பாதுகாப்புத்துறைச் செயலாளர் நல்லூர் கந்தசுவாமி கோயில், யாழ்.நாக விகாரை, யாழ்.கோட்டை, நகரப் பகுதி ஆகிய இடங்களுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

யாழ். நகர சிவில் அலுவலகத்தில் படை அதிகாரிகள் மற்றும் படையினருடன் கலந்துரையாடி அவர்களின் சேம நலன்களைக் கேட்டறிந்தார்.

நேற்று மாலை நயினாதீவு விகாரைக்குச் சென்ற கோத்தபாய அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதேவேளை ஆனையிறவு முகாமில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் நினைவுத் தூபியைக் கோத்தப்பாய இன்று திறந்து வைக்கவிருக்கிறார் என்று அறியவந்தது. (ஒ-1)

# புத்தர்சிலை விவகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் இடையில் தர்க்கம் - வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

தொடர்ச்சியாக மூன்று மணி நேரம் நீடித்த களேபரத்தால் சபையின் நிகழ்ச்சிகளைத் தொடர முடியாத நிலையில் கூட்டம் இடை நிறுத்தப்பட்டது.

நேற்றைய கூட்ட ஆரம்பத்தில் முதல்வர் வாசித்த நிகழ்ச்சி நிரலின் 12 ஆவது விடயத்தில் முன் அறிவித்தபடி, கௌரவ உறுப்பினர் அ.கிளபோடாசியஸ் பின்வரும் பிரேரணையைப் பிரேரிப்பார் எனத் தெரிவித்து 'பிரதான வீதியில் புத்தர் சிலை வைக்க எண்ணியுள்ள இடத்தில் வீதிக் குறியீடுகள் பொருத்த சபை தீர்மானிக்கிறது' என்று குறிப்பிடப்படுகிறது எனக் கூறியதும் தர்க்கம் ஆரம்பித்தன.

அந்த இடத்தில் யார் புத்தர் சிலை வைக்க எண்ணியுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் றெமிடியஸ் உறுப்பினர் கிளபோடாசியஸிடம் கேள்வி எழுப்பினார். இதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் கோரினார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாநகரசபை எச்சந்தர்ப்பத்திலும் இவ்வாறு புத்தர் சிலை வைக்க எண்ணவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய எதிர்க் கட்சியினர் இவ் விடயம் எதிர்காலத்தில் தேவையற்ற சிக் கல்களை ஏற்படுத்த இடம் உள்ளதாக உறு திபடக்கூறினர். அத்துடன் யாழ். மாநகர சபையின் எந்தவொரு கூட்டத்திலோ அல்லது தீர்மானத்திலோ இத்தகைய விடயங்கள் பேசப்படவில்லை. நிகழ்ச்சி நிரல்களிலும் சேர்க்கப்படவில்லை. அப்படியிருந்தும் ஏன் இப்படிக் குறிப்பிட வேண்டும்? இந்தச் சொற்பதம் யாழ். மாநகர சபை நிர்வாகம் புத்தர் சிலை வைக்க எண்ணியுள்ளதாகத் தவறாக அர்த்தப்படுத்திவிடும். அத்துடன் அதற்கு நாங்களும் ஒத்துழைப்பு வழங்கியதாக அமைந்துவிடும் என்பதையும் வற்புறுத்தினோம்.

எனவே அதை நீக்கி ''யாழ் பிரதான வீதி மடத்தடிச் சந்தியில் புத்தர் சிலை வைக்க இராணுவத்தினர் ஏற்கனவே முயற்சி எடுத்த இடத்தில் என திருத்தி உள்ளடக்க வேண்டும் என மு.றெமிடியஸ், மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் யாழ். மாநகர சபை உறுப்பினர்களான கே.என். விந்தன் கனகரத்தினம், அ. பரஞ்சோதி, என். இராஜதேவன் உட்பட கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும் றெமிடியஸின் கருத்தை ஆதரித்துப் பேசினர்.

இதற்குப் பதில் அளித்த முதல்வர், குறித்த சொற்பதத்தை மாற்றி நீங்கள் குறிப்பிடுவதைச் சேர்க்க முடியாது, என உறுதியாக நிற்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும் முதல்வரின் கருத்தை ஆதரித்தனர். அதனைத் தொடர்ந்து ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையில் சுமார் மூன்று மணி நேரம் கடும் வாக்குவாதமும் சொற்போர்களும் இடம் பெற்ற நிலையில் இக்கூட்டத்திலே ''பிரதான வீதியில் புத்தர் சிலை வைக்க எண்ணியுள்ள இடத்தில்'' என்ற விடயத்தில் முதல் வரும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் இறுதி வரை விடாப்பிடியாகவே இருந்தனர்.

எவ்வித இணக்கப்பாடுமன்றி இருந்த நிலையில், முதல்வர் ''நான் கூட்டத்தில் இருந்து எழும்பிச் செல்கிறேன். நீங்கள் இயலுமானால் கூட்டத்தை நடத்திப் பாருங்கள்'' எனக்கூறிச்சென்றார். அத்தோடு இந்த மாதத்திற்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் தொடர்ந்து நடைபெறாமல் கலைந்துசென்றது - என்றுள்ளது. (அ-ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 மாதங்களில் அமைச்சரவையை மாற்றியமைக்க அரசு திட்டமாம்

## அம்பலப்படுத்துகிறது பொன்சேகாவின் கட்சி

கொழும்பு, ஏப்.30

தற்போதுள்ள அமைச்சரவை ஏழு மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும் என்றும் நவம்பர் மாதம் இந்த அமைச்சரவை கலைக்கப்பட்டு புதிய அமைச்சரவையை நியமிக்க ஜனாதிபதி திட்டமிடுகிறார் என்றும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போதைய அமைச்சரவையில் இன்றும் பல அமைச்சர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

சரத் பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான விஜித ஹேரத்தே இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டை அபிவிருத்தி செய்யக் கூடிய சரியானதொரு திட்டம் இந்த அரசிடமில்லை. இந்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியாத நிலையில் அரசு உள்ளது.

முதல் நான்கு மாதங்களுக்கு இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. 2010 இல் இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறும் அரசு தனது வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாகவே இந்த இடைக்கால கணக்கறிக்கை சமர்ப் பிக்கப்படுகிறது என்று அரசு அப்போது கூறியது.

இப்போது தேர்தல் முடிந்துவிட்டது. மீண்டும் மஹிந்தவின் கட்சியே ஆட்சி அமைத்துள்ளது. தற்போது வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டியது அவசியம். ஆனால், அவ்வாறு செய்வதற்கு அரசு பின்நிற்கிறது.

இந்த வருடம் வரவு - செலவுத் திட்டம் ஒன்று இல்லாமலேயே முடியப் போகின்றது. இது நாட்டுக்கு ஆபத்தானது. வரலாற்றில் என்றுமே இவ்வாறு நடந்ததில்லை.

தற்போதைய அமைச்சரவை அரசின் பொருளாதாரப் பலவீனத்திற்கு மற்று மோர் உதாரணமாகும். இந்த அமைச்ச ரவை ஏழு மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். மீண்டும் நவம்பர் மாதம் புதிய அமைச்சரவை இரண்டாம் தடவையாக நியமிக்கப்படும்.

தற்போதைய அமைச்சர்களுக்கு அவர்களது அமைச்சுப் பதவிகள் தொடர் பில் திருப்தியில்லை. இது தொடர்பில் குழப்பமடைய வேண்டாம் என்று ஜனா திபதி அவர்களிடம் கூறியிருக்கின்றார். நவம்பர் மாதம் இந்த அமைச்சரவை கலைக்கப்பட்டு புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் என்று அவர்களிடம் ஜனாதிபதியே கூறியிருக்கின்றார்.

தற்போதைய அமைச்சரவையில் இன்னும் பல அமைச்சர்கள் நாளை(இன்று) நியமிக்கப்படவுள்ளனர் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. தினமும் அமைச்சர்களை நியமிக்கும் நிலையே உள்ளது - என்றார். (சி)

## தமிழ் கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசினால் விலைக்கு வாங்கவே முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்மக்களின் ஆணையை மதித்து நடப்பார்களே ஒழிய அம்மக்களுக்கு ஒருபோதும் துரோகம் இழைக்கமாட்டார்கள்.

ஏனைய தமிழ்க் கட்சிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து தமிழ்மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பேரினவாதக் கட்சிகளை நாம் தோற்கடிக்க முடியும். கடந்த தேர்தலில் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொண்டனர்.

இந்தத்தேர்தலில் ஒட்டு மொத்தமாக மட்டக்களப்பில் 360 வேட்பாளர் போட்டியிட்டனர். ஆனால் ஏனைய 359 வேட்பாளர்களும் எதிர்கொள்ளாத பிரச்சினைகளை எல்லாம் கூட்டமைப்பின் வேட்பாளரான நான் சந்திக்க நேர்ந்தது.

தேர்தலுக்கு முந்திய இரவில் துண்டுப் பிரசுரமொன்றை நான் வெளியிட்டது போல் வெளியிட்டனர்.

நான் தேர்தலில் இருந்து விலகுகிறேனென பொய்ப்பிரசாரம் செய்தனர். ஆனால் மக்கள் என்னைக் கைவிடவில்லை. நான் தமிழ் மக்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் வரை ஓயமாட்டேன் - என்றார். (அ-சி)

## ஐந்து நீதியரசர்கள் ஆயத்தின் முன்பாக ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு

கொழும்பு, ஏப். 30

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து, அதனைத் தள்ளுபடி செய்யுமாறு உத்தரவிடக்கோரி, எதிரணி சார்பில் போட்டியிட்ட பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தாக்கல் செய்திருத்த தேர்தல் ஆசேட்பனை மனுவை ஐந்து நீதியரசர்களைப் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் விசாரணை செய்யும்.

உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலக வட்டாரங்களில் இருந்து இத்தகவல் தெரியவந்துள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா, கே.ஸ்ரீபவன், பி.ஏ.ரத்தினாயக்கா, எஸ்.ஐ. இமாம் ஆகியோர் கொண்ட ஆயத்தினர் முன்னால் எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இந்த மனுவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தேர்தல் ஆணையாளர் ஆகியோர் உட்படப் பலர் எதிர்மனு தாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றன என்றும், சுதந்திரமான வாக்களிப்பு இடம்பெறவில்லை என்றும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்திருக்கின்றார். (சி)

## இன்னும் ஆறு மாத காலத்துக்குள் அனைவரும் மீள்குடியேற்றப்படுவர்

### அமைச்சர் மில்ரோய் பேர்னாண்டோ உறுதி

கொழும்பு, ஏப். 30

உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து வடக்கில் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் அனைவரும் அடுத்த ஆறு மாத காலப்பகுதிக்குள் சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்யப்படுவர் என்று மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ உறுதிமொழி வழங்கியுள்ளார்.

அவர் இப்புதிய அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிற்பாடு வவுனியாவிலுள்ள அரசின் நலன்புரி முகாம்களை நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

இவ்விஜயம் தொடர்பாக கருத்துக் கூறிய போதே அவர் இவ்வாறு வாக்குறுதி வழங்கியுள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சுமார் 80 ஆயிரம் பேர் வரை தற்போது இம்முகாம்களில் உள்ளனர். அடுத்துவரும் ஆறு மாத காலப் பகுதிக்குள் இவர்கள் அனைவரும் மீள்குடியேற்றம் செய்யப்படுவர்.

அத்துடன் அகதிகள் அனைவருக்கும் உரிய நட்டஈடுகள் விரைவாகப் பெற்றுத் தரப்படும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் மீளக் கட்டியெழுப்பித் தரப்படும் - என்றார். (சி)

## சித்தன்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படம் எடுக்க முற்பட்டதாகக் கூறப்பட்டது.

சிறுமிகள் கூக்குரலிடவே அங்கு கூடிய பொதுமக்கள் இளைஞர்கள் இருவரை மடக்கிப்பிடித்து விட்டனர். மற்றைய இருவரும் தலைதெறிக்க ஓடித்தப்பிவிட்டனர். பிடிபட்ட இருவருக்கும் ''சாத்துப்பீடி'' நடந்ததாகவும் கூறப்பட்டது.

இந்த அடாவடித்தனச் செயலில் ஈடுபட்ட இளைஞர்கள் சங்கானைப் பகுதியில் கிராமம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவருகிறது.

பிடிபட்ட இருவரையும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரித்து எச்சரிக்கை செய்து நேற்றிரவு வீடு செல்ல அனுமதித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-29-93-112)

## புலிகளுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப் பாதுகாப்பு முகவர் நிறுவனம் நித்தியானந்தா விசாரணைகள் தொடர்பில் தகவல்களை திரட்டியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நித்தியானந்தாவின் ஆசிரமத்திற்கு எவ்வாறு நிதி கிடைத்தது என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.


கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம் May 1 Saturday 8.00 Am
NEC A/L 2012
Clock Tower Road, Jaffna.

G.A.Q. B.A பேராதனை
G.A.Q. B.A Part- I, II (யாழ்)
துரித மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் 01.05.2010
சனி 3 p.m

| திகழ் கல்வி நிறுவனம் | ஐடியல் |
| --- | --- |
| கே.கே.எஸ். வீதி, இணுவில். | ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய். |

தேவை
எழுதுவினைஞர் பதவிக்கு ஆர்வம் உடையவர்கள் 30.04.2010 வெள்ளி 3pm நேரில் வருகை தரவும்.
ஐடியல்
ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.

A/L 2012
கலைப்பிரிவு
Ta: திரு.சிவா
H.c: திரு.ஜெயக்குமார்
Lo: திரு.கமல்
P.sc: திரு.செந்தூரன்
Ge: திரு.கரன்
Ec: திரு.சண்
His: திரு.சக்தி
ஆரம்: 01.05.2010 சனி
யூனிவேர்சல்
(யா/இந்துமகளிர் கல்லூரி அருகே)

யாழ் நகரின் No 1 கல்வி நிறுவனம்!
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
O/L Day Class (Mon-Fri 8.30-1.30Pm)
பிரிவு 2 ஆரம்பம் May 3

A/L 2010
வர்த்தகப் பிரிவு
Acc: திரு.தவா
Eco: திரு.சண்
B.St: திரு.பாசோ
ஆரம்பம் 01.05.2010 சனி
யூனிவேர்சல்
(யா/இந்துமகளிர் கல்லூரி அருகே)

A/L 2012
தமிழ்
திரு சிவா
ஆரம்பம் 01.05.2010 சனி 2 p.m
யூனிவேர்சல்
(யா/இந்துமகளிர் கல்லூரி அருகே)

ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம் - 03.05.2010
பின்வருபவர்களுக்கான ஆங்கில மொழிப்பயிற்சி வகுப்புகள் அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற ஆசிரியரால் 03.05.2010 (திங்கள் கிழமை) முதல் நடத்தப்படும்.
1. ஆங்கிலமொழி மூலம் பல்கலைக் கழக படிப்பைத் தொடருபவர்கள்.
2. ஆங்கில மொழியை ஆரம்பத்தில் இருந்து இலக்கண ரீதியாகப் பயில விரும்புபவர்கள்.
3. Spoken English பயிற்சி பெற விரும்புபவர்கள்.
4. ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், மற்றும் தனியார்துறை உத்தியோகத்தர்கள்.
தொடர்புகளுக்கு:C.Nadarajalingam
RETD AREA MANAGER,
Bank of Ceylon
KURUMBAKADDY, PULOLY.

நன்றி கூறுகின்றோம்
எம்மை தரம் 4 இலிருந்து வழிப்படுத்தி 2009 O/L பரீட்சையில் எம் எல்லோரையும் சிறப்பான பெறுபேறு பெறவைத்த,
எங்கள் உரிமைக்குரிய அன்புடன் கண்டிப்பான இயக்குநர், எம்மை சரியாக வழிப்படுத்திய ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.
2009 O/L மாணவர்கள்,
சயன்ஸ் அக்கடமி, நல்லூர்-அரியாலை

புதிய மாணவர் அனுமதி
தரம்: 4 முதல் O/L வரை
★ எவ்வித ஏமாற்று வித்தையும் இல்லாமல்
★ சீராக தொடர் பரீட்சை நடத்தி
★ உடன் புள்ளிகளை பெற்றோரிடம் கையளித்து
★ பரிசுகளோடு, கணிப்பீட்டறிக்கை வழங்கி
★ 30 வருடங்கள் உறுதியோடு
★ 2009 - O/L மாணவர்களை மிக உயர்வான பாடசாலைகளின் முன்னணி பெறுபேறுபெறவைத்த (S.Nishanthan-9A-S.J.C.) யாழ்.நகரின் ஒரேயொரு நிறுவனம்.
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் - அரியாலை

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre for International Language Studies) No.3, 2nd Lane Palaly Road, Jaffna. [அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்]
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம் எமது நிறுவனம் மட்டுமே. GOV.Reg.No W/A 76795
Tel-0774842464/0213216928/0779927117

A/L ENGLISH MEDIUM
1. Biology - Campbell - 2996/- (with CD)
2. Biology - Ravenjohnson - 5990/-
3. Combined Maths Past Papers
I. Coordinate Geometry - 800/-
II. Trigonometry - 925/-
III. Calculus - 800/-
IV. Algebra - I - 800/-
V. Algebra - II - 850/-
(I–V: Sarasavi Publication)
4. Physics Past Paper - Astan - 385/-
5. Chemistry Past paper - Astan - 385/-
6. Biology Past Paper - Astan - 385/-
7. Com.Maths Past Paper - Astan - 385/-
Poobalasingham Book Depot
212, First Crost Street, Vembady Junction, Jaffna. T.P: 021 222 1637
04, Hospital Road, Jaffna. T.P: 021 222 6693


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.